பக்கங்கள் 28

விலை: 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்

February 05 -February 11, 2012

பெப்ரவரி 05 - பெப்ரவரி 11 , 2012



## சகுனப்பிழை வேண்டி மூக்கறுக்கும் மூர்க்கத்தனம்

இருதலைக் கொள்ளி எறும்பின் நிலை

ஆனந்தபுரம் சண்டை!

கருக் கலைப்பு: சரியான சில தவறுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்கள் குழந்தையின் அறிவுக்கூர்மையை அதிகரியுங்கள்

குழந்தைகள் வளரும் விதம் வாழ்க்கையின் அதிசயங்களில் ஒன்றாகும். பிள்ளைகளின் வளர்ச்சி பற்றி பலரும் பல இடங்களிலும் உரையாடுகின்றனர். ஒப்பீடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. சில குழந்தைகள் திறமைசாலிகளாகவும் தனித்தியங்கும் ஆற்றல் வாய்ந்தவர்களாகவும் வளரும்போது, வேறு சில குழந்தை அறிவுக்கூர்மை அற்றவர்களாகவும் சிறிய விடயங்களுக்குக்கூட பிறரில் தங்கியிருப்பவர்களாகவும் வளர்வதற்குக் காரணம் என்ன என்ற கேள்விக்கு விடை காண முடியாமல் அநேகமான பெற்றோர் அவதிப்படுகின்றனர். உண்மையில், இந்த நிலைமைக்குக் காரணம் என்ன? குழந்தைகள் அறிவுக்கூர்மையும் திறமையும் உள்ளவர்களாக வளர்வதற்கு பெற்றோரால் ஏதாவது உதவி செய்ய முடியுமா?

சகல . பெற்றோரும் தமது பிள்ளைகளுக்கு மிகச் சிறந்தவற்றையே கொடுக்க விரும்புகின்றனர். தமது பிள்ளைகள் மகிழ்ச்சியாகவும் புத்திசாலிகளாகவும் சுறுசுறுப்பானவர்களாகவும் வளர வேண்டும், வாழ்க்கைக்குத் தேவையான திறமைகளை விரைவாக விருத்தி செய்துகொள்ள வேண்டும், நாளாக நாளாக தமது விசேட சாதனைகளினால் மற்றவர்களை ஆச்சரியத்திற்கு உள்ளாக்க வேண்டும் என்பதே பெற்றோரின் ஆசைக்கனவாகும். ஆனால், எல்லாப் பிள்ளைகளுமே இத்தகைய எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதில்லை. இதற்குக் காரணம் என்ன?

பிள்ளைகளின் உடல் வளர்ச்சி திடீர் வேகத்தில் இடம்பெறும் பருவங்கள் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். கண்டுமிருக்கிறோம். இத்தகைய அதிவேக உடல் வளர்ச்சியுடன் இணைந்ததாக மூளை வளர்ச்சியும் சமமான அளவில் இடம்பெற வேண்டும் என்பது மனோதத்துவ நிபுணர்களின் கருத்தாகும்.

மூளையின் வளர்ச்சி குழந்தை பிறப்பதற்கு முன்பே ஆரம்பமாகிவிடுகிறது. கர்ப்பத்திலுள்ள கருவில் தொடங்கும் மூளை வளர்ச்சியானது, குழந்தை பிறந்து வளர்ந்து பெரியவனாகும்போது படிப்படியாக வேகம் குறைகின்றது. பிறக்கும் குழந்தையின் மூளை நிறையானது ஒரு வளர்ந்தவரின் மூளை நிறையுடன் ஒப்பிடுகையில் கால்வாசியாகவே இருந்தபோதிலும், 80 முதல் 90 சதவீதமான மூளை வளர்ச்சி வாழ்க்கையின் முதற் சில வருடங்களிலேயே இடம்பெறுகின்றது.

ஆரம்ப வருடங்கள் "அதிமுக்கியமான" காலப்பகுதியாகக் கருதப்படுகின்றது. இக் காலப்பகுதியிலேயே குழந்தையின் மூளை போஷாக்கிற்கும், சுற்றாடல் தூண்டுதல்களுக்கும் அனுபவத்திற்கும் ஆகக்கூடுதலான உணர்திறனைக் காட்டுகின்றது. ஏனைய உடல் உறுப்புக்களைப் போலல்லாது, மூளையின் வளர்ச்சியைப் பிற்காலத்தில் சீராக்கிக்கொள்ள முடியாது. மூளையின் வளர்ச்சிக்கு ஒரேயொரு காலப்பகுதிதான் உண்டு. இக் காலப்பகுதியில் குறைபாடுகளுக்கு இடமளித்தால், வாழ்நாள் முழுவதும் அறிவுக்கூர்மையும் கிரகிக்கும் திறனும் பாதிக்கப்படும் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன.

**"பிறக்கும் குழந்தையின் மூளை *நிறையானது ஒரு வளர்ந்தவரின்* மூளை நிறையுடன் ஒப்பிடுகையில் கால்வாசியாகவே இருந்தபோதிலும், 80 முதல் 90 சதவீதமான மூளை வளர்ச்சி வாழ்க்கையின் முதற் சில வருடங்களிலேயே இடம்பெறுகின்றது."**

தற்காலக் குடும்ப வாழ்க்கை முறையில் இடம்பிடித்துள்ள "கண்ட கண்ட" உணவுத் தயாரிப்புக்களைவிட உண்மையிலேயே சமபோஷாக்குள்ள உணவே தமது குழந்தைகளுக்கு அவசியம் என்பதைப் பெற்றோர் இப்போது உணரத் தொடங்கியுள்ளனர். குழந்தையின் மூளையும் நரம்புத் தொகுதியும் உணவினாலேயே கட்டியெழுப்பப்படுகின்றன. எனவே, குழந்தையின் சிந்தனை மற்றும் உணர்வுகள் மீது உணவுகள் நேரடிச் செல்வாக்கைச் செலுத்துகின்றன என்பது தெளிவாகின்றது. மூளைக்கு அத்தியாவசியமான சில உணவுகள் உள்ளன. தரமுயர்ந்த காபோஹைட்ரேட்கள், அத்தியாவசிய கொழுப்புக்கள், அமினோ அமிலங்கள், விட்டமின்கள், கனியுப்புக்கள் என்பன அவற்றில் அடங்கியுள்ளன.

நியூரோட்ரான்ஸ்மிட்டர்கள் என்பன நரம்புத் தொகுதியில் செய்திகள் கடத்தப்படுவதற்கான முக்கிய இரசாயனப் பதார்த்தங்களாகும். இந்த நியூரோட்ரான்ஸ்மிட்டர்களை உருவாக்குவதற்கு பல்வேறு தொகுதி விட்டமின்கள் அவசியம். பல அமினோ அமிலங்கள் (புரதங்களின் அடிப்படை அலகுகள்) நியூரோட்ரான்ஸ்மிட்டர்களின் முன்னோடிகளாகக் கருதப்படுகின்றன.

இரும்பு, ஸிங்க், அயடீன் போன்ற கனியுப்புக்கள் மூளைக்கு மிக முக்கியமான சில ஊட்டச்சத்துக்களாகும். விலங்குகளை அடிப்படையாகக் கொண்ட உணவுகளிலிருந்து இரும்பு மற்றும் ஸிங்க் சத்துக்களைப் பெற முடியும்.

Docosahexenoic acid (DHA), Eicosapentenoic acid (EPA), Alpha Linolenic Acid (ALA), Linoleic Acid (LA) ஆகிய கொழுப்பு அமிலங்கள் மூளை விருத்திக்கு அத்தியாவசியமான ஊட்டச்சத்துக்களாக இனங்காணப்பட்டுள்ளன. இந்த அத்தியாவசிய கொழுப்பு அமிலங்களை மீன், பருப்பு வகைகள், விதைகள், தாவர எண்ணெய்கள், மீன் எண்ணெய்கள், கொழுப்புச் சத்துள்ள பழங்கள் மற்றும் சத்தூட்டப்பட்ட பால் போன்ற உணவுகளிலிருந்து பெற முடியும்.

மூளையானது முற்றாகவே மண்டையோட்டினால் மூடப்பட்டுள்ளது. சுற்றுப்புறச் சூழல் பற்றிய தகவல்களை நரம்புத் தொகுதியின் மூலமே அது பெறுகின்றது. மூளை இத் தகவல்களைப் பயன்படுத்தி தனது தொடர்பாடல்களையும் நரம்புக்கலத் தொழிற்பாடுகளையும் நெறிப்படுத்துகின்றது. ஆகவே, சுற்றாடல் அனுபவங்களே *ஒருவரின் மனவியல்பை உருவாக்குகின்றன என்று* சொல்வதில் தப்பில்லை. முக்கியமான வளர்ச்சிக் கட்டங்களில் புலனுணர்வு வாய்ப்புக்கள் மறுக்கப்படுவதும் பெற்றோரின் அன்புக் குறைவு, தொந்தரவுகள், போதைப் பொருள் மற்றும் மதுபானப் பாவனை போன்ற சூழல் அவதூறுகள் இடம்பெறுவதும் மூளை வளர்ச்சியிலும் அதன் தொழிற்பாட்டிலும் நிரந்தரமாகவே தீய விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். ஆகவே, பெற்றோர் தமது பிள்ளைகளுக்குத் தம்மாலியன்ற அதிகபட்ச அன்பையும் பராமரிப்பையும் வழங்க வேண்டும். இதன் மூலமே பிள்ளைகளின் உடல், உள, உணர்வு ரீதியான வளர்ச்சியை ஊக்குவிக்க முடியும்.

உங்கள் பிள்ளைக்கு மிகச் சிறந்த போஷாக்கை வழங்கும் அதே வேளையில், அவனது வளர்ச்சியின் உண்மையான அறிகுறிகள் குறித்து விழிப்பாக இருப்பது பெற்றோர் என்ற வகையில் உங்கள் கடமையாகும். மிகவும் சிறப்பானதொரு சூழ்நிலையில், குழந்தைகள் வளர்வதை அவதானிப்பது ஓர் இனிமையான அனுபவமாகும்!




ஆதாரங்கள்:

1 Indian Journal of Paediatrics, 2005
2 Alternative Medicine Review, 2007, India
3 Ricardo U, Dennis RH, Patricio P, David GB, Eileen EB, Essential fatty acids in visual and brain development. Lipids. 2001:36 (9)
4 Casey BJ et. al. Structural and functional brain development and its relation to cognitive development. Biologycal psychology. 2000. 54: 241- 257


---


எந்த கொழுப்பு அமிலம் மூளை விருத்திக்கு அதிமுக்கியமானது?

A. கல்சியம் B. DHA C. விட்டமின் B

மேலுள்ள கட்டுரையை வாசித்த பின், கேள்விக்குச் சரியான பதிலை 0773888666 என்ற இலக்கத்திற்கு SMS செய்து, பெறுமதிமிக்க பரிசுகளை வெல்லுங்கள்.

SMS வடிவமைப்பு: **பத்திரிகையின் பெயர்** (இடைவெளி) **உங்கள் பெயர்** (இடைவெளி) **உங்கள் அடையாள அட்டை இல.** (இடைவெளி) **உங்கள் விடை.** உதாரணம்: Sudaroli Gowri 830710244V B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### சகுனப்பிழை வேண்டி

# மூக்கறுக்கும் மூர்க்கத்தனம்

"1977ல் ஐ.தே.கட்சி ஆட்சிக்கு வந்தது. பச்சை இனவாதியான லலித் அத்துலத் முதலி வர்த்தக அமைச் சராகப் பதவியேற்றார். அவரால் வடபகுதி தமிழ் விவசாயி கள் ஒரு சிறப்பான வாழ்வைப் பெற்றிருப்பதை எப்படி பொறுக்க முடியும். அவர் அமைச்சுப் பதவி ஏற்றதும், மிளகாய் வெங்காயம் அறுவடை செய்யும் காலங்களில் இந்தியாவிலிருந்து அப்பொருட்களை இறக்குமதி செய்தார்."

சந்திரசேகர ஆசாத்

ஒருவன் தனது எதிரி ஒரு நல்ல காரியத்திற்காகப் புறப்பட்டுப் போனபோது அவனுக்குச் சகுனப்பிழையாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தனது மூக்கை அறுத்து விட்டு அவனின் முன்பு போய் நின்றானாம்.

சகுனப்பிழை காரணமாக எதிரிக்குச் சென்ற காரியம் சித்திக்காமல் விட்டால் ஒரே ஒரு தோல்வி தான். அதை இன்னுமொரு முறை முயற்சி செய்து வெற்றி கண்டு விடலாம். ஆனால் எதிரிக்குச் சகுனப்பிழையாக இருக்க வேண்டும் என்பதற்காக மூக்கை அறுத்தவன் இன்னொரு மூக்கைப் பெற முடியாது. அவன் மூக்கிழந்தவன் என்பது நிரந்தரமாகி விடும்.

மற்றவர்களுக்குத் தீமை செய்வதையே இலட்சியமாகக் கொண்டிருக்கும் மூர்க்கர்களை நையாண்டி செய்ய உருவானது தான் இந்தப் பழமொழி. இவர்கள் பிறர் துன்பப்படுவதைக் கண்டு மகிழ்ச்சியடையும் இழி மனம் கொண்டவர்கள்.

இலங்கை அரசியல் இப்படியான சிந்தனைப் போக்குக் கொண்ட நபர்களை காலத்துக்குக் காலம் உற்பத்தி செய்து பேணி வளர்த்து வந்துள்ளது. தமிழ் மக்கள் தங்கள் நியாயபூர்வமான உரிமைகளைப் பெற்று இந்நாட்டில் கௌரவமான பிரஜைகளாக வாழக் கூடாது என்பதற்காகவும், தமிழ் மக்கள் மீது ஒரு கொடிய இன அழிப்புப் போரை நடத்திக் கொலை வெறியாட்டமாடவும், பெருந் தொகையான சிங்கள இளைஞர்களைப் படைகளில் சேர்த்துக் களமுனைக்கனுப்பிப் பலி கொடுத்ததை நாம் நினைவு கூரலாம்.

சிங்கள இனவெறியர்களுக்கும். பேரினவாத ஆட்சியாளர்களுக்கும் தமிழ் மக்கள் மீதான இன ஒடுக்குமுறையும், இன அழிப்பும் தான் முக்கியமாக விளங்கியதே தவிர, தமது இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் பலியா வதோ, பெண்கள் விதவைகளாவதோ ஒரு பொருட்டாகவே தெரியவில்லை. அதுவும் எதிரிக்குச் சகுணப்பிழை யாக இருக்க வேண்டும் என்பதற்காகச் சொந்த மூக் கையே அறுத்த கதைதான்.

போர் விஷயத்தில் இந்த மூக்கறுப்பு வெளிப்படையாகத் தெரிந்த போதிலும், இது பலமுனைகளிலும் பல்வேறு வழிமுறைகள் மூலமும் மேலாதிக்க சக்திகளால் அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

குறிப்பாகத் தமிழ் மக்களின் பொருளாதார பலத்தைச் சிதைக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தின் அடிப்படையில் தேசியப் பொருளாதாரத்தையே பெரும் நெருக்கடிக்குள் தள்ளவும், மீண்டெழ முடியாத பள்ளத்தில் விழுத்தவுமான நிலைமைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் வெளியிடப்பட்ட ஒரு அரசாங்கப் புள்ளி விபரத்தின்படி இலங்கையின் செத்தல் மிளகாய் தேவையின் 60 சதவீதம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது மட்டுமின்றி கடந்த வருடம் இந்தியா தனது பற்றாக்குறை காரணமாக வெங்காய ஏற்றுமதியை இடைநிறுத்திய போது இலங்கையில் வெங்காயத்திற்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டமையும், இலங்கை அரசு வெங்காயம் தேடி வேறுநாடுகளுக்கு அலைந்ததையும் நாம் மறந்து விட முடியாது. அதே போல் கடந்த வருடம் இலங்கையில் தேங்காய்க்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டு, கேரளாவிலிருந்து தேங்காய் இறக்குமதி செய்யப்பட்டு, அவை பழுதடைந்த நிலையில் பெரும் நஷ்டம் ஏற்பட்ட தையும் நாமறிவோம். இன்று இந்நாட்டின் தேவைக்காக பெருமளவு முந்திரிகைப் பழம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.

மிளகாய், வெங்காயம், தேங்காய், முந்திரிகை என்பனவற்றின் மூலம் இந்த நாடு பெருமளவு அந்நியச் செலவாணியை இழந்து கொண்டிருக்கிறது என்பதை நாமறிவோம். ஒரு காலத்தில் இப் பொருட்கள் உற்பத்தியில் இலங்கை தன்னிறைவு பெற்றிருந்தது என்பது மட்டுமின்றி, தெங்கு உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. 1977ற்குப் பின்பு அதிகாரத்திற்கு வந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட தவறான இனவாத அடிப்படையிலான விவசாயப் பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக இன்று நாம் இப்பொருட்களுக்கு வெளிநாடுகளில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் வலிகாமம், வடமராட்சி, வேலணை, மண்டைதீவு போன்ற பிரதேசங்கள் மிளகாய், வெங்காயம் என்பனவற்றில் பிரதான பாத்திரம் வகித்தன. 1960ல் அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதார சுயசார்புக் கொள்கையும், 1966ல் ஆரம்பிக்கப்பட்ட விஸ்வமடு, திருவையாறு, முத்துஐயன்கட்டு இளைஞர் குடியேற்றத் திட்டங்களும் மிளகாய், வெங்காயம், வாழை என்பனவற்றின் உற்பத்தியில் ஒரு பெரும் வளர்ச்சியை ஏற்படுத்தின. வலிகாமம் பகுதியில் முந்திரிகை உற்பத்தியில் பெரும் விரிவாக்கமும் ஏற்பட்டது. 1970ம் ஆண்டிற்குப் பின்பு இப்பொருட்களுக்கான இறக்குமதியில் மிக இறுக்கமான கட்டுப்பாடு கொண்டுவரப்படவே வடக்கில் இப்பொருட்களின் உற்பத்தியில் பெரும் பாய்ச்சல் ஏற்பட்டது. இப்பொருள்களுக்கு நல்ல சந்தை வாய்ப்புக் கிடைத்ததுடன் இப்பயிர்களைச் செய்யும் விவ சாயிகளின் வாழ்க்கைத் தரமும் அபரிமிதமாக உயர் வடைந்தது.

யாழ்.மாவட்டத்திலும், இளைஞர் குடியேற்றத் திட்டங்களிலும் ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்டு வந்த இப் பயிர்கள் வன்னியின் பல பகுதிகளுக்கும் பரவின.

இதன் காரணமாக வடபகுதி விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் மிக உயர்ந்த நிலையை நோக்கி வளர்ச்சியடைந்தது.

1977ல் ஐ.தே.கட்சி ஆட்சிக்கு வந்தது. பச்சை இனவாதியான லலித் அத்துலத் முதலி வர்த்தக அமைச்சராகப் பதவியேற்றார். அவரால் வடபகுதி தமிழ் விவசாயிகள் ஒரு சிறப்பான வாழ்வைப் பெற்றிருப்பதை எப்படி பொறுக்க முடியும். அவர் அமைச்சுப் பதவி ஏற்றதும், மிளகாய் வெங்காயம் அறுவடை செய்யும் காலங்களில் இந்தியாவிலிருந்து அப்பொருட்களை இறக்குமதி செய்தார்.

ஒரு கிலோ 40 ரூபாவாக விற்ற மிளகாய், 1 கிலோ 8 ரூபாவாக வீழ்ச்சியடைந்தது. இவ்வாறே வெங்காயம், முந்திரி ஆகியவற்றின் விலைகளும் சரிந்தன. அது மட்டுமின்றி உப உணவுப் பயிர்களுக்கு வழங்கப்பட்ட உரமானியத்தை நிறுத்தியதன் காரணமாக ஒரு அந்தர் 20 ரூபா விற்ற பசளையின் விலை 50 ரூபாவாக உயர்ந்தது. அமைச்சர் லலித் அத்துலக் முதலியின் இனவாத நடைமுறை காரணமாக முழு இலங்கைக்குமே மிளகாய், வெங்காயம் என்பவற்றை வழங்கி வந்த வடபகுதியின் உற்பத்தி அதல பாதாளத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

எனவே இப்பொருள்களின் தேவைக்கு இறக்குமதியையே நம்பியிருக்க வேண்டிய தேவை எழுந்தது.

வலிகாமம் மிளகாய், வெங்காயம், வெற்றிலை, முந்திரிகை எனப் பல்வேறு பணப்பயிர்களை விளைவிக்கும் தோட்ட நிலங்களைக் கொண்ட பிரதேசமாகும். மேலும் இயற்கைப் பசளைகளை மட்டுமே பாவித்து அம்மண் வருடா வருடம் வளமேற்றப்பட்ட செழிப்பான பூமியாகும் 1990ல் இராணுவ நடவடிக்கை காரணமாகப் பல்லாயிரக் கணக்கான மக்கள் அப்பயன்தரும் நிலங்களை விட்டு வெளியேற்றப்பட்டனர். அத்துடன் அப்பகுதியின் உற்பத்திகள் அறவே முடக்கப்பட்டன.

இதே போன்று மின்சாரம் தடை செய்யப்பட்டதன் காரணமாக கிளிநொச்சி, திருவையாறு மேட்டு நிலப் பயிர்ச் செய்கை கைவிடப்பட்டது. திருவையாறு ஏற்று நீர்ப்பாசனத்திட்ட நீரிறைக்கும் யந்திரங்கள் மின்சாரத்தில் இயங்கியவையாகும். எரிபொருள் தடை காரணமாக விஸ்வமடு, முத்தையன்கட்டு ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்கள் செயலிழந்து போயின. 1984ல் மணலாற்றிலிருந்து மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதை அடுத்து நெடுங்கேணிப் பிரதேசத்தின் உப உணவுப் பயிர் உற்பத்தி அழிந்து போனது.

இப்படியான நிலையில் அரசும், அரச படைகளும் தமிழ் மக்களுக்கு எதிராகப் போரின் பேரால் மேற்கொண்ட இனவாத நடவடிக்கைகள் காரணமாக மிளகாய், வெங்காயம், முந்திரிகை, வாழை போன்ற உப உணவுப் பயிர் வகைகளில் இலங்கையின் தேவையின் பெரும் பகுதியைப் பூர்த்தி செய்த பகுதி இல்லாமல் போனது. அதன் விளைவு இத்தகைய உணவுப் பொருட்களுக்கு இறக்குமதியையே நாட வேண்டிய நிலை எழுந்தது.

இங்கே தான் இனவாதிகள் தமிழ் மக்களைப் பொருளாதார ரீதியில் ஒடுக்க மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காகத் தங்கள் மூக்கைத் தாங்களே அறுத்த கதை அரங்கேறியது.

இப்போது போர் முடிந்து இரண்டரை வருடங்களுக்கு மேலாகிவிட்டது. மீண்டும் தமிழ் மக்களுக்கான இயல்பு வாழ்வு திரும்புமானால் இலங்கையின் உப உணவுத் தேவை ஒரு சில மாதங்களில் நிறைவு செய்யப்பட்டு விடும். ஆனால் இலங்கை ஆட்சியாளர்களின் இன ஒடுக்கு முறைச் சிந்தனைகள் அதற்கு அனுமதிக்கப் போவதில்லை.

இன்று வரை வலிகாமத்தில் பல பகுதிகளில் மக்கள் மீள் குடியேற அனுமதிக்கப்படவில்லை. வளமான விளை நிலங்கள் காடு மண்டியே கிடக்கின்றன. அது மட்டுமன்றி அங்குள்ள பல பகுதிகள் இராணுவ முகாம்களுக்கென நிரந்தரமாகவே ஆக்கிரமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வகை தொகையின்றி படையினரின் ஆசியுடன் தென்னிலங்கையிலிருந்து வந்தவர்களால் சுண்ணாம்புக் கற்கள் தோண்டப்படுகின்றன. இதன் காரணமாக அங்கு நீர் உவராகும் அபாயமும் தோன்றியுள்ளது.

இன்றுவரை திருவையாறு நீர் இறைக்கும் இயந்திரங்கள் சீர் செய்யப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டு ஏற்று நீர்ப்பாசனம் மீண்டும் ஆரம்பிக்க எந்த ஒரு முயற்சியும் எடுக்கப்படவில்லை. அதேபோன்று எரிபொருளில் இயங்கும் விஸ்வமடு, முத்தையன்கட்டு ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்களைப் புனரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவுமில்லை. எடுப்பதற்கான அறிகுறிகளும் இல்லை. மணலாற்றில் உப உணவு உற்பத்தியல் சிறந்து விளங்கும் பட்டிக்குடியிருப்பு, ஒதியமலை போன்ற பல இடங்கள் மக்கள் மீள் குடியேற அனுமதிக்கப்படவில்லை. சில பகுதிகளில் அவர்களின் விளைநிலங்கள் சிங்களவரால் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டன. கென்ற் பாம், டொலர் பாம், சிலோன் தியேட்டர் பாம் போன்ற பெரும் பண்ணைகள் சிங்களக் குடியேற்றங்களால் ஆக்கிரமிக்கப்பட்டு விட்டன. ஒட்டுமொத்தத்தில் போர் முடிந்த பின்பும் தமிழ் மக்கள் விவசாய உற்பத்தியில் ஈடுபடுவதற்கான கருவிகள் இன்னும் மூடியபடியே கிடக்கின்றன. ஆனால் இங்கு தமிழ் மக்கள் உற்பத்தி செய்யக் கூடிய உணவு வகைகளுக்கு நாட்டில் தட்டுப்பாடு நிலவுகிறது. அது மட்டுமின்றி அவற்றின் இறக்குமதிக்கெனப் பெருமளவு அந்நியச் செலவாணி விரயமாக்கப்படுகிறது.

இது மட்டுமல்ல எமது மீனவர்களின் முயற்சிகளுக்கும் பல்வேறு இடையூறுகள் கொடுக்கப்படுகின்றன. போர் முடிந்து நீண்ட காலம் சென்றும் கூட பாஸ் நடைமுறை முழுவதுமாக அகற்றப்படவில்லை. குறிப்பிட்ட குதிரை வலுவுக்கு மேற்பட்ட இயந்திரங்கள் பாவிக்க அனுமதிக்கப்படுவதில்லை. இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு ஒரு நிரந்தரமான தீர்வு காணப்படவில்லை. போதிய வள்ளங்கள், மீன்பிடி வலைகள் என்பன வழங்கப்படவில்லை. ஒரு காலத்தில் மயிலிட்டி, முல்லைத்தீவு, மன்னார் மீன்களுக்காக புறக்கோட்டை மீன் சந்தை காத்துக் கிடந் ததை நாம் மறந்து விட முடியாது. இப்போது கொழும்புக்கு மீன் கருவாடு அனுப்புவது கனவாய் போய்விட்டது. அதை விடப் பெரும் அந்நியச் செலவாணியை ஈட்டித்தந்திருக்கிற கடலட்டை தொழிலும் நலிவடைந்து விட்டது.

ஆனால் கடல் உணவு வகைகளை இறக்குமதி செய்யவும், தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்களை இறக்கவும் பெருமளவு அந்நியச் செலாவணி விரயமாக்கப்படுகிறது.

அடிப்படையில் இலங்கை ஆட்சியாளர்களின் தமிழ் மக்கள் மீதான இனவெறிச் சிந்தனையும், இன ஒடுக்கு முறை நடவடிக்கைகளும் எதிரிக்குச் சகுனப்பிழையாக இருக்க வேண்டும் என்பதற்காக தனது மூக்கை தானே அறுத்த கதையாகவே தொடர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவு மகேஷ்



## தொலையா நினைவுகள்

நீண்ட நாட்களின் பின்னர் எனது நண்பர் ஒருவரைச் சந்தித்தேன். பத்திரிகைகள், செய்திகள், சஞ்சிகைகள், இலக்கியங்கள், எனப் பலதும் கலந்த உரையாடல், சார்ந்த உரையாடல் தொடங்கியது. எனது அப்பாவைப் போல எனக்கும் சிறுகதை எழுதுவதற்கு ஆசையிருக்கிறது என்றார் அவர்.


ஆ! அப்படியா உங்கள் அப்பா சிறுகதைகள் எழுதினாரா? என்று கேட்டேன் நான். இல்லை இல்லை என்னைப் போல் அப்பாவிடத்திலும் சிறுகதை எழுதும் ஆசை இருந்தது என்றதுமே நண்பருக்கும் சிறுகதைகள் எழுதும் வழக்கம் இருந்ததாக எண்ணிக்கொண்டு உங்கள் கதைகளை எல்லாம் பத்திரிகைகளில் பிரசுரிக்கலாமே என்றேன் ஆர்வத்தோடு. அவரோ மீண்டும் இல்லை இல்லை எனக்கும் அப்பாவைப் போல சிறுகதை எழுதும் ஆசை தான் இருந்தது என்று தான் சொல்ல வந்தேன் என்றார் அவர்.

அப்பாவுக்கும் மகனுக்கும் சிறுகதை எழுதுவதற்கான ஆசை மாத்திரமே இருந்தது. ஆனால் அவர்கள் எந்தச் சிறுகதையையும் இதுவரை எழுதியதில்லை. சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் ஆகிய இலக்கிய ஆக்கங்களைப் படைக்க வேண்டும், என்ற ஆசையோடேயே பலரும் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கின்றனர். என்பதை இதன்மூலம் அறிந்து கொள்ள முடியும் எழுதும் வகை தெரியாமல் எழுத வேண்டும் என்ற ஆசையோடு அவர்களின் நாட்களும் கடந்துபோய் விடுகின்றன.

கடற்கரையிலே நின்று கொண்டு கடலுக்குள் கால்களை நனைக்காமலே நீந்தப் பழக்கிவிடு எனக் கூச்சல் போடுவதைப் போன்றதே இந்த நிலை.

எப்பொழுது நீங்கள் நீருக்குள் இறங்குகிறீர்களோ! அப்பொழுதுதான். நீந்தும் பயிற்சியைப் பெறமுடியும் அதுபோலவே நீங்கள் எழுதத் தொடங்காமல் எழுதுவதில் ஈடுபடாமல் சிறுகதையை எழுதுவதென்பது இயலாத காரியமாகும். வாசிப்பும் பயிற்சி

# வாசிப்போம் எழுதுவோம்!



உள்ளவற்றும் சமுகத்துடன் இணைந்து இயங்கும் பழக்கமுள்ளவனும், சமகால வாழ்வை, அதன் அம்சங்களான காதலை ஏழ்மையை முதுமையை மாத்திரமல்ல நாகரிய வளர்ச்சியில் அதன் மாற்றங்களால் ஏற்படும் சாதக பாதக வாழ்வின்,

பலவகைக் கோலங்களையும் எழுத்தாக்கங்களால் வாசகனுக்கு வழங்க முடியும். உணர்வுகளின் வெளிப்பாடே வார்த்தைகள் அந்த வார்த்தைகளின் வரிவடிவமே எழுத்துக்கள் அவை வாசகர்களைச் சிந்திக்கத் தூண்டுகின்றன. வாசிப்பின் பிரதிபலிப்பாக அந்த ஆக்கங்களின் கலை வடிவம் உள்ளத்தாலும் உணர்வுகளாலும் உறுஞ்சப்படுகின்றது. அது வாழ்வை சமூகத்தை நல்லன நோக்கி நகரும் உந்துதலைத் தருகின்றது புதிய நவீன ஆக்கங்களுக்கும் மொழிவழி விரியும் புதுமைக்கும் வழிசமைக்கின்றது. அதன் வழி விளையும் எழுத்துக்களே எழுத்தாளரை இனங்காட்டுகிறது. எனவே வாசியுங்கள் எழுதுங்கள். இந்த வாழ்க்கையின் எண்ணிறந்த கோலங்களில் எழில் பூக்கும் இலக்கியங்கள் தூங்கிக் கிடக்கின்றன. அவற்றைப் பாருங்கள் இரசியுங்கள் எழுதுங்கள்.

உங்கள் முயற்சியே உங்களை எழுத்தாளனாக்கும். வாசிப்பும் எழுத்தும் நல்ல ஆக்கங்கள் பூக்க வழிகாட்டும்.

நீங்கள் வாசிக்கும் தோறும் உங்கள் வாசிப்புக்குட்பட்ட அந்த ஆக்கங்களின் மூலம் பிறக்கும் எண்ணங்களும் புதிய கற்பனைக் காட்சிகளும் மேலும் மேலும் புதியவற்றை நோக்கி உங்களை நகர்த்திச் செல்லும். வாழ்வுடன் இணைந்த தேவைகளை அவை தேடிச் செல்லும். எழுத்தாளன் ஆகவேண்டும் என்ற ஆசை எந்த ஆக்கத்தையும் நாம் எழுதாமல் நிறைவேறப் போவதில்லை. கவிஞன் என்று பலரும் தன்னைக் கூற வேண்டும் என்ற ஆசையினால் நாமே கவிஞன் என்று சொல்லிக் கொண்டு எழுதுவதெல்லாவற்றையும் கவிதைகள் என்பதாய்க் கொண்டு புகழ்பாட வேண்டும் என நினைப்பதும் தவறு. எழுதுங்கள் அவற்றின் இலக்கியத் தரம் உயரும் வகையில் எழுதுங்கள். உங்கள் ஆக்கங்களை வாசிக்கும் வாசகனின் விமர்சனத்திற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் விமர்சனங்களை ஏற்றுக்கொண்டு உங்கள் எழுத்தார்வத்தைத் தளர்த்தாமல் முன்னேறுங்கள் வாசியுங்கள்! எழுதுங்கள்.


படைப்பாளிகளின் தரமிக்க சஞ்சிகைகள், இலக்கிய நூல்கள் குறித்த அறிமுகங்கள் மற்றும் கருத்துக்கள் இப்பகுதியில் பிரசுரமாக வேண்டுமென விரும்புபவர்கள் உங்கள் ஆக்கங்களின் இரு பிரதிகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

சுடர்ஒளி

வாரமலர்

061, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.


# லண்டன் கற்பக விநாயகர் அருளமுதம்

கற்பக விநாயகர் அருளமுதம் எனும் இசை இறுவெட்டினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எஸ்.சிறீதரன் அவர்கள் அண்மையில் லண்டனில் வெளியிட்டு வைத்துள்ளார்.

தென்னிந்திய புகழ் பெற்ற இசைக்கலைஞர்களால் பாடப்பெற்ற பதினொரு பாடல்களை இது கொண்டுள்ளது. பிரபல பாடகர்களான உன்னிகிருஷ்ணன், நித்தியஸ்ரீ, உன்னிமேனன், ரி.எல்.மகாராஜன் ஆகியோருடன் இசையமைத்தவரும் பாடல் இயற்றியவரும் பாடகருமான மாணிக்கவிநாயகம் அவர்களின் குரலினிமைக்குள் அருளமுதம் காதில் இனிக்கிறது.

வேழமுக்கு எனவும் அந்த கணபதியே எனவும் தொடங்கும் பாடல்களை இயற்றிய ரி.ஆர்.மாணிக்கவிநாயகம் பாடிய பாடல்களைத் தவிர ஏனைய அருளமுதப் பாடல்களை இயற்றியளித்துள்ளார். ஏனைய பாடல்களை கவிஞரும் தமிழ்ப்பற்று மிக்க கலைஞரும் இளைஞருமான வேலணையூர் சுரேஷ் எழுதியுள்ளார்.


அவற்றில் சுரேஷ் அவர்களின் இலக்கியப் பணியின் சிறப்பும் பக்தி நிலையின் பரவசமும் இழையோடுகின்றன. இதுவரை நாற்பதுக்கும் மேற்பட்ட கவிதைகளையும் மூன்று கவிதைத் தொகுப்புக்களையும் எழுதி வெளியிட்டவர். அவரது இந்த அருளமுதம் தமிழகக் கலைஞர்களின் குரல் வளத்தினால் மேலும் சுவைக்கிறது.




**தர்சினி பார்த்திபன்**

பக்தி ரசம் ததும்பும் பாடல்களால் பிள்ளையாரின் மகிமையையும் லண்டன் மாநகரில் வாழ் பக்தர்களின் பக்திப் பெருக்கையும் மாத்திரமன்றி உலகெங்கும் வாழும் பிள்ளையாரின் பக்தர்களையும் இந்த இசை இறுவெட்டு பரவசப்படுத்தும் என்பது நிச்சயமாகும்.


★ ★ ★





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஆனந்தபுரம் சண்டை

- தமிழன்

ஆனந்தபுரம் கிராமம் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் இரணைப்பாலைக்கிராமத்திற்கும் மந்துவில் கிராமத்திற்கும் இடைப்பட்ட இயற்கை எழில் நிறைந்த தென்னஞ்சோலைகளைக் கொண்ட பழமை வாய்ந்த கிராமம்.

வன்னி யுத்தத்தின் இறுதிக்காலகட்டமான 2009 இன் முற்பகுதியில் விடுதலைப்புலிகளின் கேந்திரநிலைய மாகத் திகழ்ந்த கிளிநொச்சியைக் கைப்பற்றிய அரச படையினர் விடுதலைப்புலிகளுக்கு எந்தவிதமான கால அவகாசத்தையும் வழங்காது முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதேசங்களையும் கைப்பற்றுவதற்கான முன்னேற்ற நடவடிக்கைகளை துரிதகதியில் மேற்கொண்டனர். பல முனைகளிலும் தாக்குதல்களை முன்னெடுத்தனர். அதன் விளைவாக விசுவமடு, உடையார்கட்டு, சுதந்திர புரம், வள்ளிபுனம், தேவிபுரம், புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளையும் சில நாட்களிலேயே அரசபடையினர் தம் வசப்படுத்திக்கொண்டனர்.

வன்னிப்பெருநிலப்பகுதியை கைப்பற்றுவதற்கு படைத்தரப்பினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிராக விடுதலைப்புலிகள் மறிப்புச்சமர்களையே பெரும்பாலும் மேற்கொண்டார்கள். புலிகள் வலிந்த தாக்குதல்களை மேற்கொண்ட சந்தர்ப்பங்கள் மிகக்குறைவு. ஏற்கனவே முறிகண்டிப்பகுதியில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட வலிந்த தாக்குதல் தொடக்கத்திலேயே படையினரால் முறியடிக்கப்பட்டுவிட்டது. இதன் பின்னர் 2009-பெப்ரவரி 01-ம் 02-ம் திகதிகளில் முள்ளியவளை, கேப்பாப்புலவு பகுதிகளில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட வலிந்த தாக்குதலும் தொடக்கத்தில் சில பகுதிகளைக் கைப்பற்ற முடிந்தாலும் இத்தாக்குதலின்போது புலிகளின் உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புக்கள் காரணமாக அப்பகுதிகளை தொடர்ந்து தக்கவைப்பதில் மேலும் பல சிக்கல்கள் எழுந்தன. இதனால் கைப்பற்றிய பகுதிகளைவிட்டு பின்வாங்க வேண்டிய நிலை புலிகளுக்கு ஏற்பட்டது.

இதன் பின்னர் 2009 -மார்ச் மாதத்தின் தொடக்க நாள்களில் புலிகளின் தளபதி சொர்ணத்தின் தலைமையில் சுமார் எழுநூறு பேரைக்கொண்ட அணியினர் தேவிபுரம் பகுதிகளை ஊடறுத்து ஒரு வலிந்த தாக்குதலை மேற்கொண்டனர். இதில் அனேகமான இளைஞர், யுவதிகள் மிகக்குறுகிய நாள்களுக்குள் புலிகள் அமைப்பில் இணைத்துக்கொள்ளப்பட்டவர்கள் போதிய பயிற்சிகள் இன்மையாலும் மற்றும் சண்டை அனுபவமின்மையாலும் பலர் உயிரிழந்த தோடு பலர் காயங்களிற்கு உள்ளாகினர். அத்துடன் தலைமையேற்றுச் சென்ற புலிகளின் தளபதி சொர்ணமும் இரண்டு கால்களிலும் பாரிய காயத்திற்கு உள்ளானார். இந்த நிலையில் வலிந்த தாக்குதலானது தொடர்ந்து முன்னெடுக்க முடியாதளவிற்கு ஆட்டம் கண்டது. காயமடைந்தவர்களை க்கூட பின்தளத்திற்கு கொண்டு வரமுடியாத இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டது. காய மடைந்தவர்களில் பலர் சயனைட் வில்லைகளைக்கடித்து அந்த இடத்திலேயே தங்களது உயிர்களை விட்டனர் உயிரிழந்தவர்களின் உடல்களையும் களமுனையிலேயே விட்டுவிட்டு காயமடைந்த தளபதி சொர்ணத்தை யும் சாதாரண காயங்களிற்கு உள்ளான இன்னும் சில ரையும் தூக்கிக்கொண்டு தாக்குதலணி களமுனையை விட்டு பின்வாங்கியது.

இவ்வாறாக அடுத்தடுத்து ஏற்பட்ட பின்னடைவுகளைத் தொடர்ந்து சாலைக் களமுனை மற்றும் வட்டுவாகல் களமுனை ஆகிய கடற்கரையோரமாகவுள்ள இரண்டு களமுனைகளும் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களால் கடற்புலித் தளபதி சூசையிடம் ஒப்படைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து அமைப்பில் உள்ள மூத்த தளபதிகளையும் முன்னணிப் படையணிகளையும் மற்றும் பீரங்கிப்படையணி, கவசப்படையணி, நிர்வாகம் சார்ந்த பொறுப்பாளர்கள் அனைவரையும் ஆனந்தபுரம் பகுதியை மையப்படுத்தி ஒருங்கிணைத்தார் பிரபாகரன்.

ஆனந்தபுரத்தை மையப்படுத்திய புலிகளின் தலைமை புதுக்குடியிருப்பு சிவன்கோவில் தொடக்கம் மந்துவில் சந்திவரையும் மந்துவில் சந்தியிலிருந்து ஆனந்தபுரம், இரணைப்பாலை கிராமங்களை ஊடறுத்து தேவிபுரத்திற்குச் செல்லும் வீதியை மையப்படுத்தி இரணைப்பாலை பாண்டியன் வெட்டை வரையிலான ஒரு நீண்ட காவல் நிலைகளை அமைத்திருந்தது. அனைத்து படையணித் தளபதிகளையும் ஒருங்கிணைத்து, ஒருங்கிணைப்புத் தளபதியாக நியமிக்கப்பட்டார். ஆனந்தபுரம், இரணைப்பாலை ஆகிய கிராமங்களை படையினரின் ஆக்கிரமிப்புக்களிலிருந்து தக்கவைத்துக் கொள்வதற்கான செயற்றிட்டத்தை புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் ஆனந்தபுரத்தை தளமாகக் கொண்டு நெறிப்படுத்திக்கொண்டிருந்தார்.

தேவிபுரத்தில் நிலைகொண்டிருந்த படையினர் இரணைப்பாலை நோக்கிய முன்னேற்ற முயற்சியை மேற்கொண்டனர். இதன்போது பாண்டியன்வெட்டைப்பகுதியில் வைத்து விடுதலைப்புலிகள் படைத்தரப்பினரின் முன்னேற்ற முயற்சியைத் தடுக்கும் முகமாக எதிர்த்தாக்குதல்களைத் தொடர்ந்தனர். இரண்டு தரப்பினருக்கும் கடுமையான சண்டை நடைபெற்றது. பாண்டியன் வெட்டை பெரும் போர்க்களமாக மாறியது. போரில் ஈடுபட்ட இரண்டு தரப்பினருக்கும் கணிசமான உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. இதன் நிமித்தமாக இரணைப்பாலை நோக்கிய படைநகர்வு சில நாள்களுக்கு தாமதமடைந்தது.

சில தினங்களின் பின்னர் அரசபடையினர் மீண்டும் இரணைப்பாலை நோக்கிய முன்நகர்வினை மேற்கொண்டனர். ஆட்லறி மற்றும் பல் குழல் எறிகணைத்தாக்குதல்களை நடத்தியும் கனரக ஆயுதங்களின் சூட்டாதரவுடனும் முன்னேறிய படையினர் பாண்டியன் வெட்டையில் புலிகளின் தடைகளை உடைத்துக்கொண்டு முன்னேறி இரணைப்பாலை பிரதான சந்தியைக் கைப்பற்றினர்.

2009-மார்ச் மாதத்தின் இறுதிநாள்களில் புதுக்குடியிருப்பில் நிலைகொண்டிருந்த படையினர் சிவன்கோவில் பகுதியில் புலிகள் அமைத்திருந்த நிலைகளையும் உடைத்துக்கொண்டு முன்னேறி மந்துவில் சந்தியை அண்மித்திருந்தனர்.

இரணைப்பாலை பிரதான சந்தியில் நிலை கொண்டிருந்த படையினர் ஆனந்தபுரத்தைக் கைப்பற்றும் படை நடவடிக்கைகளை முழுவீச்சோடு மேற்கொண்டனர். ஆனந்தபுரம் பகுதியை கனரக ஆயுதங்களின் ரவைகள் ஆக்கிரமிக்க அந்தப்பகுதி எறிகணைத் தாக்குதல்களால் அதிர்ந்த வண்ணமிருந்தது. ஆனந்தபுரத்தை நோக்கி முன்னேறிய படையினர் ஆனந்தபுரம் பகுதியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் காவல்துறையினரின் சீர்திருத்தப்பள்ளியை அண்மித்திருந்தனர்.

புலிகள் ஆனந்தபுரத்திற்கு வடக்குப் புறமாகவுள்ள பச்சைப்புல் மோட்டை வழியாக பாதை ஒன்றை எடுத்தனர். எறிகணைத்தாக்குதல்களுக்கு மத்தியில் மெய்ப்பாதுகாப்பு அணியினரின் உதவியுடன் பச்சைப்புல்மோட்டை வழியாக விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் வேறு இடத்திற்கு நகர்த்தப்பட்டார். ஆனந்தபுரத்தின் களநிலைமை மிகவும் மோசமான கட்டத்தை அடைந்தது. மந்துவில் சந்திக்கு அண்மையில் நிலை கொண்டிருந்த படையினர் மந்துவில் சந்தியைக் கைப்பற்றியதோடு அதனையும் தாண்டி முன்னேறியிருந்தனர். சீர்திருத்தப்பள்ளிக்கு அண்மையாக நிலை கொண்டிருந்த படையினர் சீர்திருத்தப்பள்ளியைக் கைப்பற்றியதோடு பச்சைப்புல்மோட்டை வரையிலும் முன்னேறியிருந்தனர். இந்த முன்னேற்ற[illegible] ஆனந்தபுரம் பகுதியை முழுமையாக படையினர் முற்றுகைக்கு உட்படுத்தியிருந்தனர். இந்த முற்றுகைக்குள் புலிகள் அமைப்பின் முன்னணித்தளபதிகளும் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட புலி உறுப்பினர்களும் அகப்பட்டுக் கொண்டனர். அத்துடன் இரண்டு ஆட்லறி பீரங்கிகள் மற்றும் 1993-ம் ஆண்டு பூநகரியில் படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட யுத்த டாங்கி உட்பட பெருமளவான ஆயுத உபகரணங்களும் இந்த முற்றுகைக்குள் மாட்டிக்கொண்டன. படையினர் மேற்கொண்ட முற்றுகையினாலும் படையினரின் தாக்குதல்களாலும் கணிசமான போராளிகள் கொல்லப்பட்டும் காயங்களிற்கு உள்ளாகியும் புலிகளின் படையணிகள் ஆட்டம் காணத் தொடங்கின.

காயமடைந்தவர்களுக்குத் தேவையான சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவில்லை. அதற்கான வசதிகள் எவையும் அங்கிருக்கவில்லை. காயங்களுக்கு வெறுமனே குருதித்தடுப்புப்பஞ்சணைகள் மட்டுமே வைத்துக்கட்டப்பட்டது. குருதிப்பெருக்கு அதிகமாக ஏற்பட்டதால் காயங்கள் பக்றீரியாத் தொற்றுக்கு உள்ளாகி துர்நாற்றம் வீசியது. காயமடைந்தவர்களைப் பார்த்தபோது மிகவும் பரிதாபமாகக் காணப்பட்டார்கள். இருந்த உலர் உணவுப் பொருள்களும் தீர்ந்துவிட்டன. பசி, தாகம் எல்லாம் ஒன்று சேர்ந்து உடற்சோர்வு ஏற்பட்டது. எறிகணைத் தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கி ரவைகளின் மத்தியிலும் சிலர் கட்டையான தென்னை மரங்களிலிருந்து சில இள நீர்க் குலைகளைப் பறித்து தங்களின் பசி தாகத்தை ஓரளவிற்கு தீர்த்துக்கொண்டார்கள்.

படையினரின் முற்றுகையிலிருந்து வெளியேறும் வரை தற்பாதுகாப்புச்சண்டைகளில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தம் புலிகளின் தளபதிகளுக்கும் ஏற்பட்டது. இந்த தற்காப்புச் சண்டைகளின் போது பீரங்கிப்படையணித் தளபதி மணிவண்ணன், தாக்குதல் தளபதிகளான தீபன், ஆதவன் (கடாபி)மற்றும் மகளிர் படையணிகளின் தளபதிகளான விதுசா, துர்க்கா ஆகிய புலிகள் அமைப்பின் முன்னணித்தளபதிகள் உட்பட கணிசமான இளநிலைப் பொறுப்பாளர்களும் கொல்லப்பட்டனர்.

தளபதி பானு மற்றும் ஜெயந்தன்படையணித்தளபதி சிலம்பரசன் ஆகியோர்களின் தலைமையில் புலிகளின் உறுப்பினர்களில் ஒரு தொகுதியினர் இரண்டு நாட்களாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் படையினரால் முறியடிக்கப்பட்டதையடுத்து மூன்றாம் நாள் இரவு படையினரின் தாக்குதல்களுக்கு மத்தியிலும் இறந்தவர்களின் உடல்கள் மற்றும் படைக்கலங்கள் என யாவற்றையும் கைவிட்டு காயமடைந்த புலிப்போராளிகளையும் கைவிட்டு தளபதி பானு, சிலம்பரசன் ஆகியோர் உட்பட குறிப்பிட்ட ஒரு தொகுதியினர் பச்சைப்புல்மோட்டை வழியாக நீரேரியைக் கடந்து படையினரின் முற்றுகையிலிருந்து வெளியேறினர்.

இறுதி நாளொன்றில் ஆனந்தபுரம் முற்றுகை தொடர்பாக விடுதலைப்புலிகள் அமைப்பின் தளபதி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் புலிகள் அமைப்பு தனது போராட்ட வரலாற்றில் சந்திக்காத பெருமளவு ஆயுத இழப்பையும் தளபதிகள் பலரின் இழப்பையும் ஒரே சந்தர்ப்பத்தில் ஆனந்தபுரம் முற்றுகையின் போது சந்தித்துக்கொண்டது என கருத்துக்கூறியிருந்தார்.

ஆனந்தபுரத்தை படையினர் முற்றுகையிட்டதுவும் அதனால் புலிகளுக்கு ஏற்பட்ட ஆளணி மற்றும் ஆயுத இழப்புக்களோடு புலிகளின் இராணுவப் பலம் சிதைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனந்தபுரம், மந்துவில், இரணைப்பாலை ஆகிய பகுதிகளை தக்கவைத்துக் கொள்வதன் மூலமாகவே லட்சக்கணக்கான பொதுமக்கள் தஞ்சமடைந்துள்ள மாத்தளன், பொக்கணை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் ஆகிய பகுதிகளைத் தக்கவைத்துக்கொள்ள முடியும் என்று எண்ணினார். புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆனந்தபுரத்தை மையப்படுத்தி புலிகள் அமைப்பின் முன்னணித் தாக்குதல் தளபதி தீபன் பீரங்கிப்படைத் தளபதி, மணிவண்ணன் மகளிர் படைத்தளபதிகளான விதுசா, துர்க்கா முன்னைய நாள்களில் பிரபாகரனின் மெய்ப்பாதுகாவலர், அணிப்பொறுப்பாளர் தாக்குதல் தளபதியுமான ஆதவன் (கடாபி) முன்னாள் மணலாறு மாவட்டத் தளபதி ராஜேஸ் மற்றும் நிதர்சன நிறுவனப் பொறுப்பாளர் சேரலாதன் உள்ளிட்ட அனைத்து முதுநிலை மற்றும் இளநிலைத் தளபதிகளையும் போராளிகளையும் ஆனந்தபுரத்தில் ஒருங்கிணைத்து இராணுவ முன்னேற்றத்தைத் தடுக்கும் மறிப்புச்சமரினை பிரபாகரன் அவர்களே நேரடியாக களத்திலிருந்து நெறிப் படுத்தினார். இவ்விடயங்களை புனர்வாழ்வு நிலையங் களிலிருந்து விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் கருத்துக்கள் மூலமாக அறியமுடிகிறது.

ஆனந்தபுரச் சண்டையின் படுதோல்வியானது புலிகளின் இறுதித் தோல்வியை கட்டியங்கூறியது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் ஒளி

05 பெப்ரவரி 11 பெப்ரவரி 2012

85, ஜெயந்தி மாவத்தை, கொழும்பு-14. தொலைபேசி: 0115738005 பக்ஸ்: 0115511944 - 5

E-mail: editorial@sudaroli.com


## முன்னாள் போராளிகளின் வாழ்வை மேம்படுத்த..

[illegible]

# சிறைக் கதவுகள் திறக்கப்படுமா?

■ ஜனநாயகன்

இலங்கையில் நிறைந்திருக்கும் சிறைச்சாலைகளில் நடாத்தப்பட்டுவரும் அடாவடித்தனங்களுக்கு நீண்டகால வரலாறு உண்டு. அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் வேதனைகள், வலிகள், கண்ணீர் கதைகள் எல்லாம் காகிதங்களில் வடிக்கமுடியாதனவாகவும் இலங்கைத் தேசத்தில் சிறைச்சாலைகளில் நிறைந்திருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் துயரமும் கொடுமையும் கடந்த பல ஆண்டுகளாகவே தொடர்ந்து வருகின்றது.

தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டம் எந்தவித தீர்வையும் பெற்றுத்தராமல் தொடங்கிய இடத்திலே மீண்டும் வந்து நிற்கின்றது. இந்தப் போராட்டம் எந்தளவு இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு வலுச்சேர்த்தது என்பதற்கப்பால் இளைஞர்களை தடுப்பு முகாம்களையும் வதைக்கூடங்களினையும் நிறைக்கவே வழியேற்படுத்திக் கொடுத்தது என்பது வெளிப்படையான உண்மையாகும்.

கடந்த காலகட்டங்களில் அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் அவசரகால சட்டம் என்பன நாட்டின் இறைமையைப் பாதுகாத்தது என்பதற்கப்பால் அது தமிழ் இளைஞர்களை காரணமின்றி கைதுசெய்யவும் விசாரணையின்றி சிறைக் கூடங்களின் கம்பிகளுக்குப் பின்னால் தள்ளவுமே அதிகம் பயன்படுத்தப்பட்டது.

1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து இன்றுவரை தொடர்ச்சியாக இத்தகைய அரசியல் கைதுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அமைதிப் போராட்டம் இடம்பெற்ற காலகட்டத்தில் பெரும்பாலான போராட்டங்கள் பெரும்பான்மையினரால் ஆயுதம் கொண்டே அடக்கப்பட்டன. உண்ணாவிரத மேடைகள், சத்தியாக்கிரக மேடைகள் என்பவற்றை நடாத்திய பலர் கூட அரசியல் கைதிகளாக மாற்றப்பட்டு தடுப்பு வாழ்வை அனுபவித்து வருகின்றனர். இவர்கள் மீதான எந்தவித விசாரணைகளுமில்லை. அவர்கள் மீது பயங்கரவாத முத்திரை வழக்கப்பட்டமையாகக் குத்தப்பட்டு சிறைவாழ்வை அனுபவிக்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுவிக்குமாறு வறுமையின் பிடியில் வாழ்ந்து வரும் இவர்களது உறவுகள் பல சந்தர்ப்பங்களில் கண்ணீர் விட்டுக்கதறி அழுத போதும் அதற்கு மதிப்பே இல்லை. இது இவ்வாறு இருக்க, அரசிற்கு எதிராகவும் இலங்கை கூறும் 'இறைமை'க்கு எதிராகவும் ஆயுதம் ஏந்தி போராடிய பலர் இன்று எந்தவித தொந்தரவுமற்று அமைச்சர் பதவிகளையும் முதலமைச்சர் பதவிகளையும் அனுபவித்து அரசின் விசேட பிரமுகர்களாகவும் விளங்கி வருகின்றனர்.

அமைதிப் போராட்டம் முடிவடைந்த பின்னர் உலகையே இலங்கைப்பக்கம் திருப்பிய ஆயுதப்போராட்டம் உருவாகிய காலகட்டத்தில் மேலும் பல இளைஞர்கள் இவர்களுடன் சேர்ந்து சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் தள்ளப்பட்டனர்.

குறிப்பாக தொழில்தேடியும் கல்வியைப் பெறவும் வெளிநாடு சென்று தமது குடும்பத்தைப் பாதுகாக்கும் நோக்குடனும் தென்னிலங்கை சென்ற பல தமிழ் இளைஞர்கள் 'பயங்கரவாதிகள்' என்ற பட்டங்கள் சூட்டப்பட்டு கைதிகளாக சிறையிலடைக்கப்பட்டனர். இதனால் இவர்களின் குடும்பங்கள் இன்று வழிதெரியாமல் வறுமைக்குள் சிக்கித் தவித்து வருகின்றனர். பல குடும்பங்கள் குடும்பத் தலைவர்கள் இல்லாத காரணத்தால் பசியை, பட்டினியை, கண்ணீரைச் சுமந்து வாழ்ந்துவருகின்றன.

வடக்கு கிழக்கில் இராணுவம் மூலைக்கு மூலை நிறுத்தப்பட்டு சந்திக்குச் சந்தி குவிக்கப்பட்டு தேசியபாதுகாப்பு என்ற வேலிகளுடன் தேடுதல் நடவடிக்கைகளை எங்கும் மேற்கொண்ட காலகட்டத்தில், அப்பிரதேசங்களில் வாழ்ந்த அப்பாவி இளைஞர்கள் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு இன்றும் சிறைவாழ்க்கையை அனுபவித்து வருகின்றனர். தென்னிலங்கையில் வீடுகள், விடுதிகள் என்பவற்றின் கதவுகள் தட்டப்பட்டு அடையாள அட்டைகள் பரிசீலிக்கப்பட்டு தமிழ் இளைஞர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்ட பின் பல இளைஞர்கள் பூசா, மகசின், வெலிக்கடை போன்ற சிறைகளுக்குள்ளும் இன்னும் முகவரி அறியப்படாத சிறைகளுக்குள்ளும் தள்ளப்பட்டனர். அத்தோடு அதிகாலை வேளை என்ற கற்றிவளைக்கப்பட்டு பல இளைஞர்கள் அள்ளிச்செல்லப்பட்டு சிறைக்கூடங்களின் கம்பிகளுக்குள் தள்ளப்பட்டனர். இவ்வாறு நாட்டின் பல சந்தர்ப்பங்களின் பல இடங்களில் கைது செய்யப்பட்டு அரசியல் கைதிகளாக்கப்பட்ட பல இளைஞர்களின் விடுதலை எப்போது என்பதும் அவர்களின் விசாரணைகள் எப்போது என்பதும் பலருக்குப் புரியாத புதிராக இருக்கிறது. இவ்வாறு காரணமின்றி கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருக்கும் பலர் அங்கும் மரண பயத்தைச் சுமந்தே பொழுதைக் கழித்து வருகின்றனர். இதனை இவர்களுக்கு நினைவூட்ட பல சம்பவங்கள் சிறைக்கூடங்களுக்குள் நடாத்தப்பட்டன.

1983 ஆம் ஆண்டு யூலை மாதம் இலங்கைத் தீவின் வரலாற்றுப்பதிவுகளில் அழிக்க முடியாத கொடூரம் நடைபெற்றது. கறுப்பு யூலை கலவரத்தின்போது பல அரசியல் கைதிகள் வெலிக்கடை சிறைக்கம்பிகளுக்குள் வைத்து கொன்று குவிக்கப்பட்டனர். யூலை 25ஆம் திகதி 35பேரும், 28ஆம் திகதி 24பேருமாக மொத்தம் 59 பேர் இவ்வாறு படுகொலை செய்யப்பட்டனர். இந்தப் படுகொலையை மீட்டிப்பார்க்கும் தமிழ்க்கைதிகள் இன்றும் அச்சத்தின் பிடியிலேயே சிறைவாழ்க்கையை அனுபவித்து வருகின்றனர். இதைவிட 2000ஆம் ஆண்டு பிந்துனுவேவ சிறைச்சாலைப் படுகொலையும் 1997ஆம் ஆண்டு களுத்துறைப் படுகொலையும் இவர்களின் இவ் அச்சத்திற்கு வலுச்சேர்த்தது.

இதைவிட கடந்த வருடம் நவம்பர் 27ஆம் திகதி அனுராதபுரம் சிறைச்சாலையில் நடாத்தப்பட்ட கைதிகள் மீதான தாக்குதல் சிறைகளுக்குள் தமிழ் கைதிகள்படும் அவலத்தை எடுத்துக்காட்டுகின்றது. இத்தகைய சம்பவங்கள் கடந்த காலத்தில் சிறைகளுக்குள் இடம்பெற்றபோதும் அவற்றிற்கான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு எத்தனை பேருக்கு தண்டனைகள் வழங்கப்பட்டன என்பது இன்றும் சிதம்பர ரகசியமாகவே உள்ளது. போர் காலகட்டத்தில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும் போரின் முடிவிற்குப் பின்னரும் தமிழ் கைதிகள் மீதான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் தொடர்வது இலங்கை தமிழ் மக்களின் துயரப் பதிவுகளாக உள்ளன. சிறைகளுக்குள் எமது பிள்ளைகளை விசாரணை செய்து விடுவியுங்கள், அங்கு அவர்களின் உயிர்களுக்குப் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்குங்கள் என பெற்றோர், உறவுகள் கதறி அழுகின்ற போதிலும், அவை பயனற்ற அழுகைகளாகவே உள்ளன. அண்மையில் வெலிக்கடை மகசின் சிறைச்சாலையில் இடம்பெற்ற சிங்களக் கைதிகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளுடனான மோதலின் போது தமிழ் கைதிகள் அச்சுறுத்தப்பட்டதும் அவர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதும் அவர்களின் உடமைகள் எரியூட்டப்பட்டதும் தமிழ் கைதிகள் இன்றும் பாதுகாப்பு அற்ற நிலையிலேயே வாழ்ந்து வருவதைக் காட்டுவதாக உள்ளது. இதனை பல்வேறு அரசியல் தலைவர்களும் வெளிப்படுத்திவருகின்றனர்.

எனவே சிறைச்சாலைகள் தண்டனைக்கூடங்கள் அல்ல, புனர்வாழ்வு நிலையம் என தத்துவம் பேசும் அரச உயர்மட்டத்தினர் விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கவும் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் ஆசியாவின் அதிசயமாவது என்ற இலங்கையின் கனவு வெறும் பகல்கனவாகவே அமையும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தேர்தலில் பங்குபற்றும் புலி, நாய்கள்

உத்தர பிரதேச சட்டப்பேரவைத் தேர்தலில் புலி, நாய்கள் கூட முக்கிய பிரச்சினையாகி விட்டன. அவற்றை பிடித்தால்தான் வாக்களிப்போம் என்று பல கிராம மக்கள் அறிவித்துள்ளனர். உத்தர பிரதேச சட்டப்பேரவைக்கு எதிர்வரும் 8 ஆம் தேதி முதல் அடுத்த மாதம் 3ம் தேதி வரை 7 கட்டங்களாக தேர்தல் நடத்தப்பட உள்ளது. பல்வேறு திட்டங்கள், வாக்குறுதிகளை அளித்து கட்சித் தலைவர்கள் பிரசாரம் செய்து வருகின்றனர். ஆனால், சில இடங்களில் இவர்களுக்கும், வேட்பாளர்களுக்கு எதிர்பாராத பிரச்சினைகள் தலை தூக்கியுள்ளன.

வழக்கமாக, தங்கள் பகுதிக்கு உடனடியாக சாலை போட்டால்தான் வாக்களிப்போம், குடிநீர் வசதி ஏற்படுத்தினால்தான் வாக்களிப்போம் என்று தேர்தல் புறக்கணிப்பில் ஈடுபடும் மக்களை பார்த்திருக்கிறோம். ஆனால், இம்மாநிலத்தில் சில தொகுதிகளில் நாய், புலி தொல்லையால் தேர்தல் புறக்கணிப்பு முடிவை மக்கள் எடுத்துள்ளனர்.

லக்னோ மாவட்டத்தில் உள்ள ரகுமான் கெரா பகுதியில் கடந்த 20 நாள்களாக புலி ஒன்று புகுந்து, மக்களை அச்சுறுத்தி வருகிறது. இதை பிடிக்கும்படி வனத்துறையிடம் பலமுறை முறையிட்டும், இன்னும் அது பிடிக்கப்படவில்லை. ரகுமான் கெராவில் இருந்து 3 கிமீ தொலைவில் உள்ள ரகமத்நகர் கிராமத்தில் கடந்த ஞாயிறன்று ஒரு எருது, கன்றுக் குட்டியை இந்த புலி கொன்றது.

இதனால், மக்களின் பீதி இன்னும் அதிகமாகி இருக்கிறது. சில கிராமங்களில் ஏற்கனவே ஏற்பாடு செய்த திருமணங்கள் கூட, புலி பீதியால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. புலியை பிடிக்க வனத்துறை நடவடிக்கை எடுக்காமல் இருப்பதால், தேர்தல் புறக்கணிப்பு ஆயுதத்தை இம்மக்கள் எடுத்துள்ளனர். புலியை பிடித்தால்தான் வாக்களிப்போம் என்ற அதிரடி அறிவிப்பை இவர்கள் வெளியிட்டுள்ளதால், அதிகாரிகள் புலியை பிடிக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

இதேபோல், அவ்ரயா தொகுதியில் நாய்கள் தொல்லை அதிகமாக உள்ளது. கடந்த சில வாரங்களில் 182 பேர் கடிபட்டுள்ளனர். இவற்றை பிடிக்கும்படி நகராட்சியை பலமுறை வலியுறுத்தியும் பலன் இல்லாததால், நாய்களை பிடித்தால்தான் வாக்களிப்போம் என்று இப்பகுதி மக்களும் அறிவித்துள்ளனர்.

## தேர்தல் சுவாரசியங்கள்







## உலகிலே குள்ளமான பெண்: தேர்தலில் பிரசாரப் பிரேங்கி

அரசியலில் மிகப்பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகிறார் உலகின் மிகச் சிறிய பெண்ணான ஜோதி. இந்த சின்னஞ் சிறு பெண் இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் இடம்பெறவுள்ள தேர்தல்களுக்காக மகாராஷ்டிர நவநிர்மான சேனா கட்சியின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் உலகை ஈர்த்த நட்சத்திரமாக களமிறங்கியுள்ளார்.

தற்போது பதினெட்டு வயதாகும் குறித்த பெண்ணின் உயரம் 2 அடி 6 இஞ்சிகள் மட்டுமே ஆகும்.

இவர் பிரசாரத்துக்கு போகும் இடமெல்லாம் கூட்டம் அலைமோதுகின்றது.

அலை மோதும் கூட்டத்துக்கு மத்தியில் நவநிர்மான சேனா கட்சியின் ஆதரவாளர்களால் மேலே தூக்கப்பட்டு காண்பிக்கப்படுகிறார் ஜோதி.

மகாராஷ்டிராவின் தலைநகரான மும்பையில் சட்டவிரோத குடியேற்றங்களை எதிர்ப்பது நவநிர்மான சேனா கட்சியின் முக்கிய கொள்கைகளில் ஒன்றாகும்.

2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜோதி தனது 18 ஆவது அகவையைப் பூர்த்தி செய்தபோது கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் உலகின் மிகச் சிறிய பெண்ணாக உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மும்பையில் உலகின் மிகச் சிறிய பெண்ணான ஜோதியின் பிரச்சாரம் மிகப் பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஜப்பானின் சனத்தொகை பற்றிய ஆய்வு

ஜப்பானின் மக்கள் தொகை குறைந்து கொண்டே வருவதாக, அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. ஜப்பானின் மக்கள் தொகை, 12 கோடியே, 77 லட்சமாக தற்போது உள்ளது. மக்கள் தொகை குறித்து, அந்நாட்டு சுகாதார மற்றும் மக்கள் நலத்துறை அமைச்சகத்தின், தேசிய மக்கள் தொகை மற்றும் சமூக பாதுகாப்பு ஆய்வுக் கழகம் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அதன்படி, வரும் 2060ல் ஜப்பானின் மக்கள் தொகை, தற்போதைய மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு குறைந்து, 8 கோடியே 67 லட்சமாக ஆகிவிடும். இதேசூழல் தொடர்ந்தால் 2110இல் 4 கோடியே 29 லட்சமாகிவிடும். மேலும், ஜப்பானியரின் சராசரி மனித ஆயுள் அதிகம். 2010 கணக்கெடுப்பின்படி, அங்கு சராசரி மனித ஆயுள், 86.39 ஆண்டுகள்.

இது, 2060ல், பெண்களைப் பொறுத்தவரை 90.93 ஆண்டுகளாக அதிகரித்து விடும். ஆண்களின் சராசரி ஆயுள் தற்போதைய 79.64 ஆண்டுகளில் இருந்து, 84.19 ஆண்டுகளாக அதிகரிக்கும். இந்த மக்கள் தொகை குறைவுக்கு, பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. முக்கியமாக, தற்போதைய ஜப்பானிய இளைய சமுதாயம், தங்களின் வாழ்க்கைக்கும், வேலை வாய்ப்புக்கும், குடும்பத்தை ஒரு பாரமாகக் கருதுவதால், அதில் ஈடுபடுவதில்லை. அதோடு, கடந்தாண்டு ஏற்பட்ட சுனாமியில், 19 ஆயிரம் பேர் பலியாகினர்.

[illegible] பொருளாதாரச் சிக்கலால், தொழிற்சாலைகளின் வேலை வாய்ப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், மக்கள், குழந்தைகளைப் பெறுவதை விரும்புவதில்லை.

## தோனி + அசின்

இந்திய கிரிக்கெட்டில் காலடி எடுத்து வைத்த மிக குறுகிய காலத்தில் அசுர வளர்ச்சி கண்டவர் தோனி. டுவென்டி-20' உலகக் கோப்பை வென்ற பின், இவரது புகழ் பன்மடங்கு உயர்ந்தது. விளம்பர நிறுவனங்கள் இவரை தேடி வந்தன. ஒரு நிறுவனத்துக்கு மொடலாக தோன்ற பல கோடி ரூபாய் சம்பளமாக பெற்றார்.





முதலில் சக கிரிக்கெட் வீரர்களுடன் விளம்பரப் படங்களில் தோன்றிய இவர், சமீப காலமாக பிரபல நடிகைகளுடன் இணைந்து அசத்துகிறார். பிபாஷா பாசுடன் இணைந்து நடித்த விளம்பரம் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப்பெற்றது. தற்போது அசினுடன் இணைந்து பிக் பஜார் நிறுவனத்துக்கு மொடலாக தோன்றியுள்ளார். தமிழில் இருந்து இந்தி உலகிற்கு தாவியுள்ள அசினுக்கு இந்த விளம்பரம் இன்னொரு திருப்பு முனையை ஏற்படுத்தலாம். இவ்விளம்பர படப்பிடிப்பின் ஓய்வு நேரங்களில் தோனியும், நடிகை அசினும் ஜாலியாக இருக்கின்றனர்.

அசின் குறித்து தோனி கூறுகையில், அவர் குழந்தை குணம் படைத்தவர். அனைவரிடத்திலும் அன்பாக பழகக்கூடியவர், என்றார். தோனிக்கு நடிகைகளின் அன்புத் தொல்லை அதிகம். பாலிவுட் நடிகைகள் தீபிகா படுகோனே, பிபாஷா பாசு, பிரீத்தி ஜிந்தா மற்றும் கோலிவுட்டில் லட்சுமி ராயுடன் இவருக்கு உள்ள தொடர்பு பற்றி நிறைய கிசுகிசுக்கள் ஏற்கனவே வெளியாகியிருந்தன. இவர்கள் வரிசையில் அசினும் சேருவாரா?



கோவை நேரு ஸ்டேடியத்தில் [illegible] ஜூனியர் [illegible] போட்டியின் ஆரம்ப விழாவில் [illegible] கம்பம் ஒன்றில் நடத்தும் சாகசத்தைப் படத்தில் காணலாம்.

## மனித மூளைக்கான மாற்று செல்கள் கண்டுபிடிப்பு

மனிதன் மூளையில் ஏற்படும் பாதிப்பை சீர்செய்வது விஞ்ஞானிகளுக்கும் மருத்துவர்களுக்கும் ஒரு பெரிய சவாலாக இருந்து வருகின்றது. தற்போது கண்டறியப்பட்ட ஓர் புதிய கண்டுபிடிப்பு இதற்கு சிறந்த தீர்வாக அமையும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

மூளையில் உள்ள செல்கள் பாதிக்கப்படும் போது அதற்கு பதிலாக புதிய செல்களை உருவாக்கி அதில் பொருத்தினால் பாதிப்பை சரி செய்து விடலாம். ஆனால் இதுவரை மூளை செல்களை எப்படி உருவாக்க முடியும் என்பதை கண்டு பிடிக்க இயலாத நிலையில் விஞ்ஞானிகள் இருந்தனர்.

ஆனால் அமெரிக்கா கலிபோர்னியாவில் உள்ள ஸ்டான்போர்டு பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மனித தோலில் இருந்து மூளை செல்களை உருவாக்க முடியும் என கண்டுபிடித்து உள்ளனர்.

எலியில் இருந்து இது போன்ற மூளை செல்களை உருவாக்கி இவர் சாதனைபடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதே போல மனித மூளை செல்களையும் உருவாக்கமுடியும் என்று கண்டுபிடித்து உள்ளனர். இதன் மூலம் பக்கவாத நோய் மற்றும் மூளையால் ஏற்படும் பார்வை இழப்பைத் தடுக்க முடியும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




-அ. சூரியன்-

பூமிக்கு ஆபத்து ! பூமியிலுள்ள விஞ்ஞானிகள் அனைவரும் நாசா விண்வெளி ஆய்வு மையத்துக்கு அலறியடித்துக்கொண்டு ஓடி வந்தனர். பூமியின் ஈர்ப்பு சக்தி சடுதியாக அதிகரித்துவிட்டது. மேலும் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே போகிறது. ஐயோ இது பெரும் பெரும் ஆபத்து. விண்வெளியில் சுற்றிக் கொண்டிருக்கும் மிகப்பெரிய விண்கற்களெல்லாம் ஏன் அயல் கோள்களை... பூமியின் இத்தகைய ஈர்ப்பு சக்தியால் கவர்ந்து இழுக்கப்பட்டு பூமியில் மோதப்போகிறது. பூமி இத்துடன் காலி. ஏன்? எப்படி? என்னவாயிற்று ஒவ்வொரு விஞ்ஞானிகளும் தத்தமது தலைகளைப் பிய்த்து உதறினார்கள். ஆனால் அவர்களுக்குக் கிடைத்த விடையோ பூச்சியம். இனி எவ்வாறு பூமி தப்பிப் பிழைக்கும்......?


திருகோணமலையிலுள்ள கெல்லியா மலைக் காட்டிலுள்ள சுதாவிற்கும் நிகிதாவிற்கும் மட்டுமே இது ஏன்? எப்படி ? என்று தெரிந்திருந்தது.

அந்த வேற்றுக்கிரகவாசியான செதில் வெளிப்படையாகவே சிரித்துக் கொண்டான். அவனுக்கு முன்னாலிருந்த நிகிதாவிற்கு அவனது சிரிப்பின் காரணம் புரிந்திருந்தது. அதாவது பூமிக்கு அழிவு நெருங்கிவிட்டது.

சதுயா கைவிலங்கிடப்பட்ட நிகிதாவை எழுப்பி கண்டலவை நோக்கி அழைத்துப் போனாள். திடீரென்று ஞாபகம் வந்தவளாகி சதுயாவிடம் நேரம் கேட்டாள். "எத்தனை மணி?"

"நீயே உன் மணிக்கூட்டில் பார்த்துக்கொள்" தன் கை மணிக்கூட்டில் நிகிதா நேரம் பார்த்தாள்.

என்ன ஆச்சரியம்! மணிக்கூட்டிலுள்ள முட்கள் தாறுமாறாக சுற்றிக்கொண்டிருந்தன. அவளுக்கு எங்கோ படித்த ஞாபகம். பூமியின் விமானங்களை பறக்கும்தட்டுகள் கடந்து செல்லும் போது பூமியின் விமானத்திலுள்ள திசைகாட்டிகளும் மணிக்கூட்டின் முட்களும் இவ்வாறு தாறுமாறாகி சுற்றியதாம். இவர்களின் காந்தப்புலம் அதிசக்தியானது போலும்.



சிறிது தூரம் கண்டலை நோக்கி சதுயாவும் நிகிதாவும் நடந்திருப்பார்கள் திடீரென்று கணனி அபாயக்குரல் எழுப்பியது "பீப்...பீப்...அவசரம் உடன் வரவும்"

செதில் இவளைப் பார்த்துக்கொள். நிகிதாவை செதிலிடம் ஒப்படைத்துவிட்டு சதுயா கண்டலை நோக்கி விரைந்தாள். பயத்திலிருந்த நிகிதா இப்பொழுது சிரித்தாள். சுதா தன் வேலையைக் காட்ட ஆரம்பித்துவிட்டான். கண்டலையே குழப்பிவிட்டான்.

நிகிதாவின் சிரிப்பை அவதானித்த செதில் "ஏன்?" என்றான்.

"ஆயிரம் வருடங்கள் வாழும் பேறு பெற்ற நசாதி வாசிகளே அநியாயமாக இங்கு வந்து மாட்டிக் கொண்டீர்களே. நீங்களும் பூமியின் ஈர்ப்பு விசையில் இறக்கப் போகிறீர்கள்"

"அந்த ஈர்ப்பு விசையை உண்டாக்கியதே நாம் தானே. நாம் ஏன் இறக்கப்போகிறோம்?"

"ஆ...இன்னும் கொஞ்ச நேரத்தில் தெரிந்து விடும்...." அவள் சொல்லி முடிக்கு முன்பாகவே அலறியடித்துக்கொண்டு ஓடி வந்தாள் சதுயா. "ஐயோ செதில். சுதா தப்பிவிட்டான். கண்டலுக்குள் ஏதோ குழப்பநிலை. கண்ட கதவை ஓப்பின்பண்ண மாட்டேன் என்கிறது. நாமும் இங்கிருந்து போவது சந்தேகமே.."

"என்ன" திடுக்கிட்டான் செதில். அப்பொழுது இன்னொரு சதுயா ஓடிவந்தாள். ஐயோ செதில் சுதா..." அப்படியே முன்பு சதுயா கூறிய அதே வார்த்தைகளை ஒப்புவித்தாள்.

செதிலுக்கு தலையே சுற்ற ஆரம்பித்துவிட்டது. இது என்ன இரண்டு சதுயாக்கள் ?உடனேயே தனது லேசர்பிஸ்டலை உருவி "இம் கூறுங்கள் இதில் யார் நசாதி வாழ் சதுயா? யார் ஏமாற்றுக்காரன் சுதா..?"

"ஐயோ சுட்டிடாதே நான் தான் உண்மையான சதுயா" இருவருமே ஒரே நேரத்தில் கத்தினார்கள்.

செதில் இருவரையும் மாறி மாறிப் பார்த்தவாறு யோசித்தான். இன்னும் ஒரு மணிநேரத்தில் பூமிக்கு அழிவு நெருங்கிவிடும். விண்கற்கள் விழ ஆரம்பித்துவிடும். அதற்கிடையில் நாம் இங்கிருந்து கிளம்பிவிட வேண்டும். கண்டலுக்குள் இருந்த நசாதி ஆடையை சுதா திருடிவிட்டான். அந்த ஆடைக்குள் இருந்து கொண்டு எந்த வேடத்தையும் எடுத்து விடலாம் என்பதை அறிந்து இந்த ஆட்டம் ஆடுகிறான். ஆனாலும், எல்லாவித டெக்னிக்குகளும் இவனுக்குப் புரிந்திருக்காது. "ஓகே சுதா இந்தா நீ பிடிபடப் போறாய் எங்கே எமது நசாதி மொழியைப் பேச பார்ப்பம்"

உடனேயே, இரண்டு சதுயாக்களும் தமது தலையிலிருந்த பட்டினை அமுக்கிவிட்டு "காலி நெக்க நாம் நோய க்வா" (சரி நேரம் வந்துவிட்டது விடை தாருங்கள்) என நசாதி மொழியில் பேசினார்கள்.

செதில் அந்த இரண்டு சதுயாக்களையும் திருதிருவென முழித்துப் பார்க்க நிகிதா "ஹி...ஹி..." என பெரிதாக சிரித்தாள். "சபாஷ் சரியான போட்டி" கோபமாகத் திரும்பிய செதில் நிகிதாவின் தலையில் தனது லேசர் பிஸ்டலை வைத்தான். "சுதா நீ புத்திசாலித்தனமா நடப்பதாக மட்டும் நினைத்துவிடாதே. நீ யாரென்று சொல்லாது விட்டால் உன் லவ்வர் காலி"

ஆனாலும் இரண்டு சதுயாக்களும் தத்தமது தலையிலுள்ள பட்டினைத் தட்டி அதிலும் ஒரு சதுயா மற்றைய சதுயாவைப் பார்த்து தனது தலை பட்டினைத் தட்டிவிட்டு "இம் கொல்லு எனக்கென்ன" என்று பேச, திடீரென்று பிந்திப்பட்டினைத் தட்டிய சதுயாவின் தலையில் திருப்பி தன் லேசர் துப்பாக்கியைப் பதித்தான் செதில். "மாட்டினாயா? இயல்பாக பட்டின் தட்டிவிட்டுக் கதைக்கும் பழக்கம் நம்முடையது. ஆனால் நீ பிந்திவிட்டாய், பிழை விட்டாய் ப்பா...ஆ.." என்று எந்திரன் படத்து வில்லன் ரஜனியின் குரலில் ஆடு போல கத்த ...

"ஐயோ இல்லை செதில் நான்தான் உன் சதுயா. நான்தான் நசாதிவேவாசி கொண்டிடாதே ஆயிரம் வருடங்கள் வீணாகிவிடும். ப்ளீஸ் ...ப்ளீஸ்" என்று கெஞ்சவும் செதில் இறுமாப்புடன் கதைத்தான். "இம் சும்மா நடிக்காதே சுதா. உன் பூமியின் வீரத்தை என்னிடம் காட்டாதே. நாம்தான் மேதாவிகள். நீங்கள் வெறும் கையாலாகாத ஜந்துக்கள்" என்று முழங்க நிகிதா பயந்து போய் செதிலையும் சுடத் தயாராகவுள்ள சதுயாவையும் பார்த்து விக்கித்து நிற்க...

அந்த சதுயா கெஞ்சினாள். "ஐயோ செதில் ப்ளீஸ்டா நான்தான் உண்மையான சதுயாடா விட்டிர்றா..."

"இல்லை உனக்கு மன்னிப்பே கிடையாது. செத்துப்போ" என்று பிஸ்டலின் ஸ்ரிக்கரை அழுத்தப் போக, இதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த மற்ற சதுயா சொன்னாள்.

"சுட்டிடாதே செதில். நான்தான் சுதா. அவளை விட்டிடு. நாம் தான் அழிவது உறுதியாகிவிட்டது. நீங்கள் இருவருமாவது தப்பிப்போய் ஆயிரம் வருடங்கள் வாழுங்கள்"

திடீரென்று உச்சந்தலையில் அடித்தது போன்று உணர்ந்தான் செதில். சுட விட்டிருக்கலாம். சதுயா செத்திருப்பாள். என்ன இது தியாகமா மற்றவர்கள் வாழ வேண்டுமென்ற துடிப்பு இந்த பூமி மனிதர்களுக்கு எப்படி வந்தது. "ஓ.. பூமி வாசிகளே நீங்கள் கிரேட்"

அடுத்து இன்னொன்றும் நிகழ்ந்தது. அவர்களைச் சுற்றி அதிசக்தி வாய்ந்த ஒளியை நாலா பக்கமும் இருந்து திடீரென்று பாய்ச்சினார்கள். அந்த ஒளிபட்டது தான் தாமதம் "ஐயோ ...அம்மா... வேண்டாம் அந்த ஒளியை நிப்பாட்டுங்கள்" என்று இரண்டு வேற்றுக்கிரகவாசிகளும் புழுவாய்த் துடித்தார்கள்.

அந்த ஒளி நடுவே சுதாவின் நண்பன் தருவின் சிரித்தபடி வெளிவந்தான். "என்ன சுதா இப்படித் துடிக்கிறார்கள்"

"ஐயோ சுதா ஒளியை நிப்பாட்டுங்கள். ப்ளீஸ் நீங்கள் செய்த தியாகத்தில் இந்தப் பூமியை அழிக்கக் கூடாதென்ற முடிவுக்கு எப்பொழுதோ வந்திட்டன்" சுதா சிரித்தவாறே "இப்பொழுது புரிந்ததா பூமி வாசிகளின் பலம்? ஒரு மங்கலான வெளிச்சத்தில் ஒரு இரவும் ஒரு பகலுமாய் பதினெட்டு நாட்களை மாற்றிய உங்களது செயல்தான் இந்த வெளிச்சப் பாய்ச்சலுக்கு காரணம். அதை அறிந்ததும் தான் உங்களுடைய பலவீனம் இந்தவெளிச்சம் தான் என்பதை நான் புரிந்துகொண்டு தருவினுக்கு மெசேஜ் கொடுத்தேன். ஓகே இனி உன் இஸ்டம். பூமியை என்ன செய்யப் போகிறாய் ..?"

பூமியின் அபரிமிதமான ஈர்ப்பு விசையை கண்ட விலக்கிக்கொண்டு விட்டது. இனி எந்தப் பாதிப்பும் பூமிக்கு இல்லை .

சந்தோசத்தல் சுதாவும் நிகிதாவும் ஓடி வந்து கட்டிப்பிடித்துத் துள்ளினார்கள்.

செதில் வந்து சுதாவின் கரம் பிடித்துக் குலுக்கிவிட்டு "பூமியைக் காத்தது பூமியின் பலம் மட்டும் அல்ல, சதுயாவை நான் கொல்ல எத்தனித்த போது அதைத்தடுத்து உங்களைக் கொல் என்றயே அந்த தியாகம் தான் முழுக் காரணம். சரி சுதா, நிகிதா நாம் கிளம்புறம்" செதில் முன்னே நடக்க சதுயா அவன் பின்னே நடந்தாள். திடீரென்று ஏதோ நினைத்த சதுயா ஓடிவந்து சுதாவைக் கட்டிப்பிடித்து அவன் கன்னத்தில் 'நச்' என்று முத்தம் பதித்தாள்.

பறக்கும் தட்டு விர்... என்று செதிலையும் சதுயாவையும் சுமந்தவாறு பூமியிலிருந்து கிளம்பிப் பறந்து மறைந்து போனது. ஆனால் சுதாவுக்கு மட்டும் சதுயாவின் அந்தக் 'கிஸ்' இன்னும் பசுமையாய்..!

நிகிதா இடையிடையே சுதாவிற்கு அந்த சதுயாவை நக்கலடித்தாலும் அவனுடன் இணையப் போகும் அந்த நல்ல நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

கூடவே பூமியை மீட்ட சுதாவிற்கும் நிகிதாவிற்கும் வெளிநாட்டுத்தலைவர்கள் மற்றும் பெரும் விஞ்ஞானிகளெல்லாம் பாராட்டுத் தெரிவித்த வண்ணமுள்ளனர். அந்தப் பத்திரிகை நிறுவனம் சுதாவிற்கும் நிகிதாவிற்கும் பாராட்டு விழா எடுத்து மரியாதை செய்தது.

(இனி ஆபத்தில்லை - முற்றும்)

---

## வேற்றுக் கிரகவாசிகள் எப்போது வருவார்கள்...



வேற்றுக்கிரக வாசிகள் பற்றிய சுவாரஸ்ய தகவல்களை அமெரிக்க ஆராய்ச்சியாளர் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் [illegible]

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் அழுவேயில்லை

■ றாதிகா


சிறுகதை

சர்மிளாவிற்குப் பெரிதாகக் குமுறி அழ வேண்டும் போல் இருந்தது. எந்தப் பக்கம் போனாலும் பெரிய பாறாங்கற்களாய் மாறிவிட்ட மக்கள்.

எத்தனை நாட்களுக்குத் தான் இப்படி ஒதுக்கப்பட்டவளாய் இருக்கப்போகிறேனோ? அதையும் அவளே யோசித்தாள். மனதைக் கல்லாக்கிக் கொண்டு தன்னைத் திடப்படுத்தி ஒவ்வொரு நாளையும் அழகான பொழுதாகக் கழிக்க முயலுவாள். ஆனால் ஏனோ அவள் தோற்றுக்கொண்டே போகிறாள். இருந்தாலும் அவள் விட்டுக் கொடுப்பதாயில்லை.

அவளுக்குத் தெரியும் எந்தப் பக்கத்தால் வீழ்ந்தால் எந்தப்பக்கத்தால் முன்னேறலாம் என்று. அவற்றையெல்லாம் இப்போது தன் சுயவாழ்வில் பிரயோகித்துக் கொண்டிருக்கிறாள். நம்பிக்கை அவளின் ஒவ்வொரு சுவாசத்திலும் நிறைந்திருந்தது.

இவை எல்லாவற்றையும் முறியடித்தது போல்தான் இன்று அவளுக்குப் பெரிதாக அழவேண்டும் போல் இருந்தது. மனம் குமுறிக் கொண்டிருந்தது.



நான் தோற்று விட்டேனோ? அவள் தனக்குள் வினாவினாள். இருப்பினும் முழுதாக அவள் நம்பிக்கையோடு தான் காலையில் சென்றாள்.

ஒரு சமூக மேம்பாட்டு நிறுவனமே தன்னை மழுங்கடித்து விடும் என்று அவள் எண்ணவில்லை. இதுவரை அவள் ஏறி இறங்கிய எல்லா நிறுவனங்களும் ஏதோ ஒரு காரணம் கூறி அவளைத் தம்மோடு இணைத்துக்கொள்ள மறுத்தன.

அவளுக்கும் அப்போதுதான் தன் சமூகத்தின் நிலை எவ்வளவு மாறிவிட்டதென்பதை உணர்ந்தாள். இருந்தும் எங்கோ தனக்கான வாழ்வு காத்திருக்கிறது என்ற நம்பிக்கை. அந்த நம்பிக்கையில் சமூக மேம்பாட்டு நிறுவனத்தின் ஊழியர் வெற்றிடத்திற்கு சென்றவளுக்கு மூன்று கிழமைகள் சென்றும் அழைப்புக் கடிதம் எதுவும் வரவில்லை.

அலுவலகத்தில் நேரே சென்று விபரத்தை அறியலாம் என்று சென்ற போதுதான், அவளின் பல கனவுகளால் திரிக்கப்பட்டிருந்த நம்பிக்கைக் கயிறு ஒவ்வொன்றாக அறுந்து கடைசி கயிற்றின் இழையில் நிற்பது போல் ஒவ்வொருவரும் ஒவ்வொருத்தரிடம் சென்று கேட்கும்படி அவளைப் பந்தாடினர். ஒருவர் கூட தெளிவாக விளக்கம் கூறுவதாயில்லை.

இறுதியில் ஒருவர் தான். "அக்கா உங்கட டொக்கியூமென்ற்ஸ் உரிய முறையில ஆவணப் படுத்தப்படவில்லையாம். நாங்கள் இப்படி ஒரு ஆள எடுத்தா கனபேர் உங்கள மாதிரி வந்து நிற்பினம். மேம்பாட்டு நிறுவனம் என்று சொல்லீற்று நாங்களே பிழையா இருக்கக் கூடாது. நீங்கள் உங்கட டொக்கியூமென்ற்ஸ் எல்லாத்தையும் உறுதிப்படுத்திக் கொண்டு வாங்க" அவன் தான் தப்பிக்கும் வகையில் பணிவாகவும் நியாயமான காரணமாகவும் கூறினான். ஆனாலும் அதற்கான தந்திரமும் அவளுக்குத் தெரியாமலில்லை.

இவர்களுக்காகவா நாங்கள் இத்தனை காலமும் எங்களை இழந்தோம். எனது குடும்பத்தைப் போலல்லவா ஒவ்வொரு குடும்பத்தையும் நேசித்தோம்.

மக்களும் அப்போது எங்கள் மீது பெரும் அக்கறையாய் மரியாதையாகத்தான் இருந்தார்கள். தெய்வங்களுக்கும் மேலாக எங்களை வைத்திருந்தார்கள். இல்லையென்றில்லை. அவள் தன் முன்னைய நிலையை எண்ணிப் பார்க்கிறாள். ஒரு நாள் வீட்டிற்கு வந்தாலும் எத்தனை வரவேற்பு, விருந்துகள். அவளைப் போலவே வர விரும்பிய பெண் பிள்ளைகள்.

அன்று அவளைத் தெரியாதவர்களும் தெரிந்தவர்களாய் வந்து கூடும் விசாரித்து செல்வார். இன்றோ..?

தெரிந்தவர்களும் தெரியாதவர்களாய் தலையைத் திருப்பிக் கொண்டு செல்கின்றார்கள்.

சர்மிளாவின் பெற்றோர் தற்காலிகமாய்த் தங்கியிருக்கும் பண்டத்தரிப்பிற்கு சர்மிளா வந்து ஆறு மாதங்களாகின்றது. அவள் வந்ததன்பின் அயலவர் என்று சொல்லி எவரும் வந்து பழகவில்லை.

சில வேளைகளில் மட்டும் வந்து எட்டிப் பார்த்துச் செல்லும் கனகம் அன்ரியின் வருகையும் இப்போது நின்று விட்டது. இவையெல்லாம் அவளுக்கு இப்போது பழகிப் போனவையாய் ஆகிவிட்டன.

என்ன செய்வது? யாரிடம் சொல்லிப் பகிர்வது? வயதான பெற்றோரிடம் இதையெல்லாம் சொல்லி அவர்களின் நிம்மதியையும் அவள் கலைக்க விரும்பவில்லை.

சர்மிளா குடும்பத் தலைவியாய் இருக்காவிட்டாலும் தலைமைப் பதவியில் அவளுக்குப் பழுத்த அனுபவம்.

எதை எப்படிச் சமாளிப்பது என்பதெல்லாம் அவளுக்குக் கைவந்தகலை. ஆனால் தன் சமூகமே தன்னை தலைகுனிய வைத்தது போல் இருந்தது அவளின் விண்ணப்ப நிராகரிப்புகள்.

எல்லாவற்றையும் விட்டு திருமணமாவது செய்து கொள்வோமென்றால் அங்கும் அவள் அவ்வாறு தான் அடையாளப்படுத்தப்பட்டாள். அது மட்டுமா? ஒரு காலையும் இழந்தவளுக்கு யார் வாழ்க்கை கொடுக்க முன்வருவார்?

இதனால் திருமணம் பற்றியெல்லாம் அவள் இப்போது சிந்திப்பதேயில்லை. தன் பெற்றோரின் சீவியத்திற்காவது ஒரு தையல் மிஷினோடு எங்களுக்கு ஒரு சுய உழைப்புத் தந்து அனுப்பியதாக பத்திரிகைகள் முழுவதும் நிரம்பி வழிந்தன. உண்மைதான். கால் முறிந்த மயில் எப்படி நடனம் ஆடும்? என் இவர்கள் எவரும் யோசிக்கவே இல்லை.

அதையும் மீறி எங்களைக் கண்டாலே சிரிக்க மறுக்கும் சனங்கள் ஒரு சட்டைக்காக எங்களின் வீடு தேடி வரப்போகிறார்களா? வீட்டின் மூலையில் ஓரமாக இருக்கும் தையல் மிஷினைப் பார்க்கும் போது தன்னையே தான் முட்டாளாக்கப் பழகிக் கொண்டேனோ என்று சிந்திப்பாள்.

இவை அனைத்தையும் தாண்டிய ஒரு நம்பிக்கையில் தான் அவளும் இறுதியாக அந்த சமூக மேம்பாட்டு நிறுவனத்திற்குச் சென்றிருந்தாள். அவர்களே கடைசியில் கையை விரித்த போது அந்தக் கணங்களை அவளால் எண்ணிப்பார்க்கவே முடியாதிருந்தது.

இனிமேல் என்ன செய்வது என்ற கேள்வி அவளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்க, "அக்கா என்ன மாதிரி அலுவல் முடிஞ்சுதோ? சேர் என்ன சொன்னவர்?"

வாசலுக்கு வெளியே அவள் வந்த போது அங்கு நின்ற ஒரு பெண் ஊழியரின் கேள்வி.

சர்மிளாவின் பதிலை அவள் முகமே காட்டிக் கொடுத்திருக்க வேண்டும்.

"இவங்கள் இப்படித்தான் அக்கா. ஒரு குளோஸிபிக் கேசனும் தேவை இல்லை என்கிறது. பிறகு தாங்கள் தப்பிக்கிறது மாதிரித்தான் ஆக்களை எடுக்கிறது. உங்கள மாதிரித்தான் ஒரு பிள்ளையும் வந்து திரிஞ்சது. சேர் நேரயே சொல்லிப்போட்டார். நீர் தடுப்பில் இருந்து வந்தனீர் எங்கட நிறுவனம் உங்கள உறுதிப்படுத்த மாட்டுது எண்டு..."

"கஸ்தூரி!" அலுவலகத்திலிருந்து வந்த ஊழியரொருவரின் அழைப்பு அவளை உள்ளிழுத்தது.

சர்மிளா ஒரு நிமிடம் கூட தாமதிக்காது அங்கிருந்து புறப் பட்டாள்.

எல்லோரும் கூறும் பதிலையே இந்த மேம்பாட்டு நிறுவனமும் கூறும் என அவள் சற்றும் எண்ணவில்லை. தன்னை மீண்டும் மேம்படுத்திக்கொள்ளலாம் என்ற கனவு அவளை மழுங்கடித்து கைவிரித்து விட்டதென்ற ஏக்கம் தான் பெரிதாகக் குமுறி அழ வேண்டும் என்ற நிலைக்குள் விழுத்தியது.

ஆனாலும் அவள் அழவே அவள் மனம் மேலும் வைராக்கியம் பெற்றது. சர்மிளா இதற்கெல்லாம் அழுகின்ற சாதாரணமானவளென்றால் இன்று வரை ஒவ்வொரு நாளும் அழுது கொண்டு தான் இருக்க வேண்டும்.

அவள் அழுவதென்றால் தன் சமூகத்திற்காகவே தான். "இவர்களுக்காகவோ நான் களத்தில் என் காலை இழந்தேன்." அவள் தனக்குள் கேட்கிறாள்.

பன்னிரண்டு மணி. தகிக்கும் வெயிலில் பேருந்துத்தரிப்பிடத்தில் காத்திருக்கிறாள். நிறுவனகாரரிடம் செல்லுபடியற்றதாய்த் தள்ளப்பட்ட ஆவணங்களை ஒவ்வொன்றாகப் புரட்டிப் பார்க்கிறாள் சர்மிளா.

அவள் மட்டும் அவற்றைப் பார்க்கவில்லை. அருகில் இன்னொரு தலையும் கடைக்கண்ணால் கவனித்துக் கொண்டிருக்கிறது.

"அக்கா எங்க போயிட்டு வாறது?"

"இன்டவியூ வேல கிடைச்சுதா?"

"இல்ல..." இறுமாப்பாய்ப் பதில் சொன்னாலும் மனம் சிறிது அஞ்சியது. இவளும் தன்னை ஏதேனும் விசாரிக்கத் தொடங்கி விடுவாளோ என்று.... அவளின் ஆவணங்களை ஒவ்வொன்றாகப் பார்க்கிறாள்.

"அக்கா சிங்களம் தெரியும்..."

"ம்...ம்... தலையாட்டினாள். எங்கட ஒவ்வீசில சிங்களம் தமிழ் தெரிஞ்ச ஆக்கள் தேவ நாளைக்கு வருவீங்களா..?"

"இந்தாங்க..." அலுவலக விசிற்றிங் அட்டையைக் கொடுத்து, "கட்டாயம் வரவேணும்." அவள் கூறி முடிப்பதற்குள் அவளுக்கான பேருந்து வந்து நின்றது.

அவளுக்கான பேருந்து இன்னமும் வந்தபாடில்லை. அந்த விசிற்றிங் காட்டையே புரட்டிப் புரட்டிப் பார்க்கிறாள். இடையில் யாரோ உட்கார வந்த வயதான பெண்ணொருத்தி உடனே திரும்பிச் செல்வதை சர்மிளா நிமிர்ந்து பார்க்கிறாள்.

"ம்.....அந்த கனகம் அன்ரி" சர்மிளா தனக்குள் முணுமுணுத்தாள். உள்ளுக்கு அவள்.

"அந்தப் பிள்ள நிக்குது."

"ஆரு...?"

"அவள் தான் தடுப்பில இருந்து வந்து எங்கட வீட்டுக்கு அங்கால இருக்குதுகள்" அருகில் நிற்கும் தன் கூடவந்த பெண்ணுக்கு ரகசியமாய்க் கூறுவது சர்மிளாவின் காதுகளிலும் சாதுவாய் விழுகிறது. இப்போது அவள் அழவேயில்லை.

சமூகம் அவளைத் தள்ளிவைத்தாலும் இன்னொரு சாக்கடையில் விழ அவள் தயாராகவில்லை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போர்க்களப் புயல்

# நெப்போலியன்

17



சாதாரணமாகவே, எந்தப் புதிய ஊர் / நாட்டுக்குச் சென்றாலும், அந்தப் பகுதியின் சரித்திரம், கலாசாரம், மக்களைப்பற்றியெல்லாம் படித்துத் தெரிந்துகொள்ள விரும்புவார் நெப்போலியன். ஆனால், எகிப்து விஷயத்தில் அவரால் அப்படி எந்த முன்தயாரிப்புகளையும் செய்துகொள்ளமுடியவில்லை.

காரணம், மிக நீண்ட சரித்திரம் கொண்ட எகிப்தின் பழைமையான வரலாறு, கலாசாரம் எவையும் முறைப்படி பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. இது நெப்போலியனுக்கு மிகுந்த ஆச்சரியம் அளித்தது.

எகிப்து பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ள அறிவியலாளர்கள், பொறியியல் அறிஞர்கள், கல்வியாளர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள், ஓவியர்கள் என்று நூற்றுக்கும் மேற்பட்டோர் இருந்த நிபுணர் குழு ஒன்றையும் தன்னோடு அழைத்துச் சென்றார்.

இன்றைக்கு நமக்குப் பழங்கால எகிப்துபற்றி வாசிக்கக் கிடைக்கிற பெரும்பாலான விஷயங்கள், இப்படி நெப்போலியனின் முயற்சியால் தோண்டி எடுக்கப்பட்டவைதான். வெறுமனே நாட்டைப் பிடிப்பதோடு நிறுத்திக்கொள்ளாமல், பல்வேறு நிபுணர்களின் உதவியோடு அந்நாட்டின் சரித்திரம், கலாசாரம், நாகரிகம், மக்களின் பழக்க வழக்கங்களையெல்லாம் முறைப்படி பதிவு செய்துவைக்க விரும்பியவர் அவர்.

எகிப்தில் கால் பதிப்பதற்குமுன்னர், நெப்போலியன், தன்னுடைய படை வீரர்களுக்குச்சொன்ன சில் கட்டளைகள் (அல்லது, அறிவுரைகள்) மிக முக்கியமானவை:

நம்முடைய இந்தப் போர், உலகச் சரித்திரத்தில் மிக முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தப்போகிறது.

- எகிப்தில் நாம், இஸ்லாமியர்களுடன் சேர்ந்து வாழ பணியாற்ற வேண்டியிருக்கும்.
- இஸ்லாமியர்களின் முக்கியக் கோட்பாடு, 'இறைவன் ஒருவனே. அவனுடைய தூதர் முகமது நபி' என்பது.
- நாம் இந்த நாட்டை ஜெயித்தாலும், இங்குள்ள இஸ்லாமியர்களைப் பகைத்துக்கொள்ளக்கூடாது. அவர்களை மதிக்க வேண்டும், அவர்களுடைய திருமறையான குர்- ஆனையும் போற்றவேண்டும்.

**புத்திசாலித்தனமான போர் உத்திகளின் மூலம் ஒரு நாட்டை ஜெயிப்பது சுலபம். ஆனால், அந்த வெற்றி நிலைத்து நிற்க வேண்டுமானால், உள்ளூர் மக்கள் நம்மை ஆக்கிரமிப்பாளர்களாக நினைக்காமல், அன்பான நண்பர்களாக நினைக்க வேண்டும்' என்று வலியுறுத்தினார். இதற்காக, எகிப்திய இஸ்லாமியர்களை மதித்து, அவர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டிய தன் அவசியத்தைத் தன்னுடைய படை வீரர்களுக்குப் புரியும்படி எடுத்துச் சொன்னார்.**

- இங்குள்ளவர்களின் பழக்கவழக்கங்கள், வழிபாட்டு முறைகள் நம்முடைய ஐரோப்பாவிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை அதை மதித்து நடக்க நீங்கள் பழகிக்கொள்ளவேண்டும்.
- பெண்களை மரியாதையோடு நடத்துங்கள். கொள்ளை அடிக்காதீர்கள். மசூதிகள், வழிபாட்டிடங்களைச் சேதப்படுத்தாதீர்கள்.

நெப்போலியனைப் பொறுத்தவரை, எகிப்து தேசம், பிரான்ஸின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டியது அவசியம். ஆனால், அங்குள்ளவர்களைப் பகைத்துக்கொண்டு, அதைச் சாதித்துவிட முடியாது என்பதில் அவர் மிகத் தெளிவாக இருந்தார்.

'புத்திசாலித்தனமான போர் உத்திகளின்மூலம் ஒரு நாட்டை ஜெயிப்பது சுலபம். ஆனால், அந்த வெற்றி நிலைத்து நிற்க வேண்டுமானால், உள்ளூர் மக்கள் நம்மை ஆக்கிரமிப்பாளர்களாக நினைக்காமல், அன்பான நண்பர்களாக நினைக்கவேண்டும்' என்று வலியுறுத்தினார். இதற்காக, எகிப்திய இஸ்லாமியர்களை மதித்து, அவர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டியதன் அவசியத்தைத் தன்னுடைய படை வீரர்களுக்குப் புரியும்படி எடுத்துச் சொன்னார்.

நெப்போலியனின் இந்த எச்சரிக்கை உணர்வுக்கு இன்னொரு காரணமும் இருந்தது. ஐரோப்பாவுக்கு வெளியே உள்ள நாடுகள், அங்கிருந்து வருகிறவர்கள் எல்லோரையும், கிறஸ்துவ மதத்தைப் பரப்ப வந்தவர்கள் என்று நினைப்பது அந்தக் கால வழக்கம்.

## நெப்போலியனுக்கு சவாலாக அமைந்த 'பிரமிட் போர்'

இதனால் உண்டாகக்கூடிய ஆரம்பச் சலசலப்புகள், எதிர்ப்புகளைத் தவிர்ப்பதற்காக, 'நாங்கள் உங்களைக் கிறிஸ்துவர்களாக்க வரவில்லை' என்று உரக்கச் சொல்லவேண்டிய கட்டாயம், நெப்போலியனுக்கு இருந்தது. இஸ்லாம் பற்றி அவர் நிறைய வாசித்துத் தெரிந்து கொண்டதற்கும் இஸ்லாமிய மத உணர்வுகளை மதிக்கவேண்டும் என்று வலியுறுத்தியதற்கும் இது ஒரு முக்கியமான காரணம்.

நெப்போலியனின் இந்த மதச்சார்பின்மை அல்லது சகிப்புத் தன்மையை, அவருடைய விரோதிகள் பாரிஸில் வேறுவிதமாகக் கதை பரப்பினார்கள். நெப்போலியன் தன்னுடைய படைகளில் இஸ்லாமியர்களைப் பெரும் எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்கிறார் என்று தொடங்கி, அவரே முஸ்லிமாக மாறிவிட்டார் என்றெல்லாம் வதந்திகள் பரவின.

'அப்படியெல்லாம் இல்லை, நான் முஸ்லிம்களின் நண்பன். இஸ்லாம் மதத்தை மதிக்கிறேன், முகம்மது நபியைப் போற்றுகிறேன். ஆனால் முஸ்லிமாக மாறிவிடவில்லை' - இப்படி நெப்போலியன் அறிக்கை விடவேண்டியதாயிற்று.

எகிப்தை முழுமையாகத் தங்களுடைய கட்டுப்பாட்டில் கொண்டுவரவேண்டும் என்கிற நோக்கத்துடன் நெப்போலியனின் படைகள் அங்கே வந்திறங்கின. எல்லைப் பகுதியில் இருந்த சில பிரதேசங்கள் அவர்களிடம் சரணடைந்தன. மற்றவர்களை மிரட்டிப் பணியவைக்க வேண்டியிருந்தது.

அலெக்ஸாண்ட்ரியா என்ற முக்கிய நகரத்தைக் கைப்பற்றியபிறகு, நெப்போலியனின் படைகள் தலைநகரம் கெய்ரோ நோக்கிப் பயணமாகின. அங்கே மாமலூக் (Mamluk) என்ற வம்சத்தைச் சேர்ந்தவர்களுடன் அவர்கள் போரிடவேண்டியிருந்தது.

பிரெஞ்சுப் படைகள் கெய்ரோவை அடையுமுன், மாமலூக் படைகள் அவர்களை எதிர்கொண்டு தாக்கத் தொடங்கின. 'பிரமிட் போர்' (The Battle Of The Pyramids - 1798, ஜூலை) என்று அழைக்கப்படும் இந்தப் போர், நெப்போலியனுக்குக் கடும் சவாலாக அமைந்தது.

பல நூற்றாண்டுகளாக அந்தப் பகுதிகளை அடிமைப்படுத்தி வைத்திருந்த மாமலூக் வம்சத்தினர், முரட்டுத்தனமான வீரர்களாக இருந்தார்கள்; எண்ணிக்கையிலும் அதிகமாக இருந்தார்கள். குறிப்பாக, அவர்களுடைய குதிரைப் படை, பிரெஞ்சு வீரர்களை ஆவேசத்துடன் தாக்கியது. ஆனால், நெப்போலியன் படையினரிடமிருந்த போர் யுக்தி அவர்களிடமில்லை.

நெப்போலியன், தனது குதிரைப்படை மற்றும் காலாட்படை வீரர்களைப் பாதுகாக்கத் தீர்மானித்தார். நம்மிடமும் குதிரைகள் உண்டு. ஆனால், அவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. ஆகவே, வலியச் சென்று ஆபத்தை விலைக்கு வாங்கிக்கொள்ளவேண்டாம் என்று முடிவெடுத்தார். குதிரை, காலாட்படைகளைச் சுற்றி, பீரங்கிகள், கைநகத் துப்பாக்கிகள் ஏந்திய வீரர்கள் நிறுத்தப்பட்டார்கள்.

இதனால், மாமலூக் வீரர்கள் எப்படிச் சுற்றி வந்தாலும், அவர்கள் பிரெஞ்சுப் பீரங்கிகளையோ, துப்பாக்கிகளையோதான் சந்திக்க வேண்டியிருந்தது. இவ்வொருவராக நெருங்க நெருங்க, நெப்போலியனின் வீரர்கள் சுட்டுத் தள்ளிக்கொண்டே இருந்தார்கள்.

இரண்டே மணி நேரம். மாமலூக் படைகள் சிதறிப்போய்ச் சிதறிவிட்டன. கெய்ரோவில் இருந்த மீதி மாமலூக் வீரர்களும், தப்பித்து ஓடிப்போனார்கள்.

இதன்மூலம், கெய்ரோ நகரமும், பெரும்பான்மை எகிப்தும் பிரெஞ்சுப் படையின் கட்டுப்பாட்டில் வந்தன. நெப்போலியனுக்கு மிக முக்கியமான வெற்றி இது.

ஆனால், 'அப்பாடா' என்று சாய்ந்து உட்கார்ந்து கொண்டு, வெற்றியைக் கொண்டாடமுடியவில்லை. காரணம், பிரமிட் போர் (21 ஜூலை 1798) முடிந்து, பத்து நாள்களில் (1-2 ஆகஸ்ட்) நிகழ்ந்த வேறொரு போர், அவர்களுடைய முந்தைய வெற்றியை நசுக்கித் தேய்த்து அழித்துவிட்டது.

நெப்போலியன் பிரான்ஸிலிருந்து கிளம்பிய போது, அவர் எங்கே போகிறார், எதற்காகப் போகிறார் என்று யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. ஆனால், இந்த ஆள் ஏதோ விஷயம் பண்ணப்போகிறார் என்பதுமட்டும் இங்கிலாந்துக்கு நன்றாகத் தெரிந்திருந்தது.

ஆரம்பத்தில், அவர் இங்கிலாந்தைத் தாக்க வருவார் என்றுதான் அவர்கள் எதிர்பார்த்திருந்தார்கள். அவருடைய படையை எதிர்கொள்வதற்கான ஏற்பாடுகளோடு காத்திருந்தார்கள். ஆனால், நெப்போலியன் வேறு திசையில் செல்ல, இங்கிலாந்துக் கடற்படைக்கு ஏமாற்றம்.

நெப்போலியன் எங்கேதான் போனார் என்று துப்பறிய ஆரம்பித்தார்கள். மத்தியத் தரைக்கடல் பகுதி முழுவதும், இங்கிலாந்துக் கப்பல்கள் பிரெஞ்சுக் கப்பல்களைத் தேடி அலைந்தன.

இதற்குள், அவர்களுடைய கண்ணில் மண்ணைத் தூவிய சந்தோஷத்துடன் நெப்போலியன் எகிப்தில் வந்து இறங்கி, அதன் பெரும்பகுதியைக் கைப்பற்ற இங்கிலாந்து அடுத்த திட்டத்தை யோசித்தது.

தொடரும்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுநாவல்

# மௌன மனவெளிகள்

07

நா.யோகேந்திரநாதன்

சின்னனின் வீடு அன்று கலகலப்பாகி விட்டது. அயலிலுள்ளவர்களினால் அந்தச் சின்ன வீடு நிறைந்து விட்டது. வீட்டில் கிழக்குப் பக்கக் கோடியில் வைக்கப்பட்டிருந்த வாளிகளிலும் கிடாரங்களிலும் பெண்கள் நீர் நிரப்பிவிட்டிருந்தனர்.

அந்த வட்டாரத்தில் அவர்களுள் 'வயதுக்கு மூத்தவர்', எனக் கருதப்படும் சின்னப்பன் வாழை இலை போட்டு அதன் மேல் நெல்மணிகளைப் பரப்பி செம்பில் மாவிலைகளை அடுக்கி அதன் மேல் தேங்காயை ஏற்றி நிறைகுடம் வைத்து முடித்தார். சந்தனத்தைக் குழைத்துத் தேங்காயில் பொட்டு வைத்து விட்டு அதன் மேல் குங்குமத்தை இட்டு விட்டு ''இஞ்சை எல்லாம் ஆயித்தம் பிள்ளையைக் கூட்டி வாங்கோவன்'' என்றார் சின்னப்பன்.

வல்லியப்பன் வெள்ளை வேட்டியைக் கட்டி, சால்வையால் தலைப்பா கட்டி தலைக்குத் தண்ணீர் ஊற்ற தன்னை ஆயத்தப்படுத்தினான். முதல் தண்ணி தாய் மாமன் தான் ஊற்ற வேண்டும் என்பது அவர்களால் காலம் காலமாகப் பேணப்பட்டு வரும் சம்பிரதாயம். அவன் பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்தாலும் பொல்லை ஊன்றியவாறே தன் 'தாய் மாமன்' கடமையை நிறைவேற்ற வந்துவிட்டான். ஓடியாடி வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த செல்வியும் அறிந்து வந்துவிட்டாள். சில இளம் பெண்கள் ஒரு துணியால் முக்காடு போட்டு முத்துலட்சுமியை வெளியே கூட்டி வந்தனர். சின்னன் ஒரு ஓரமாக ஒதுங்கி நின்றாள். விதவைகள் இப்படியான நேரங்களில் முன்னுக்கு நிற்கக் கூடாது என்பது அவர்களின் கட்டுப்பாடு.



சின்னப்பன் குத்துவிளக்கைக் கொழுத்தி விட்டு, கண்ணை மூடி ஒரு முறை 'சிவசிவா' என்று விட்டு தேங்காயை எடுத்து வெட்டுக் கத்தியால் உடைத்தார். தேங்காய் இரண்டாகப் பிளந்தது. எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி பரவியது.

சின்னப்பன் 'அவள் அதிட்டக்காரி' என்று விட்டு ''வல்லி வா..வா.. பிள்ளையாரை நினைச்சுக் கொண்டு மூண்டு கிண்ணம் தண்ணி வாத்து'' என அழைத்தார். வல்லியப்பனும் தாய் மாமன் உரிமையுடன் நீரை அள்ளி ஊற்றினார். அடுத்து செல்வியும் கிண்ணத்தை வாங்கி மாமியின் உரிமையுடன் ஊற்றினாள்.

செல்வியின் தம்பியான கதிரனும், மனைவியுமே பெற்றோருக்கான கடமைகளைச் செய்ய வந்திருந்தனர். கதிரன் கிண்ணத்தை வாங்கி முத்துலட்சுமியின் தலையில் ஊற்றினான்.

பின்பக்கமாக சற்றுத் தொலைவில் நின்று மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்த சின்னனுக்கு 'ஓ' வென்று கதறி அழ வேண்டும் போல இருந்தது. சின்னனின் கணவன் இறந்து விட்டது உண்மை தான். எனவே தன்னை விதவை என ஒதுக்குவதற்காக அவள் கவலைப்படவில்லை. ஆனால் முத்து தகப்பனில்லாத பிள்ளையில்லை. அவளுக்கு இரவல் தாய் தகப்பன் நீர் ஊற்றிய போது விதானையார் மேல் ஆத்திரம் ஆத்திரமாகத்தான் வந்தது. ஆனால் தனது பேர் சொல்ல ஒரு வாரிசைத் தந்தவர் அவர் தான் என நினைத்த போது அவளின் கோபம் மறந்து தணிவது போலிருந்தது.

உறவினர் அனைவரும் நீருற்றிய பின்பு தலையைத் துடைத்து உடுப்பு மாற்றிவிட்டு உள்ளே அழைத்துச் சென்றனர்.

வீட்டுக்குள் நின்ற சின்னப்பன் சின்னனைக் கூப்பிட்டார். அவள் உள்ளே வர, வா "பிள்ளை கொம்மாவின்ரை காலிலை விழுந்து கும்பிடணை" என்றார். முத்து காலில் விழுந்து வணங்கினாள்.

"பிள்ளை தெற்கைப் பாத்து கொப் பரை நினைச்சுக் கும்பிடு" என்று எங்கே கிழவர் சொல்லி விடுவாரோ எனச் சின்னன் பயந்து கொண்டிருந்தாள். நல்ல வேளையாக அப்படி எதுவும் நடந்து விடவில்லை.

''சரி...சரி..இனி பிள்ளைக்கு சாப்பாட்டைக் கொடுங்கோ'' என்று விட்டு சின்னப்பன் வெளியே போய்விட்டார்.

எல்லாரும் தேநீர் அருந்தி விட்டு பிள்ளையின் கையில் ஐஞ்சோ, பத்தோ கொடுத்து ஒவ்வொருவராகப் புறப்பட்டனர்.

எல்லோரும் போன பின்பு சின்னன் உள்ளே போய் முத்துலட்சுமியின் அருகில் குந்தினாள். அவளின் முகத்தை இழுத்து தன் நெஞ்சுடன் அணைத்துக் கொண்டாள் சின்னன். அவளால் அழுகையை அடக்க முடியவில்லை. அவள் விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

முத்துலட்சுமி மிரட்சியோடு கேட்டாள் "ஏனம்மா அழுகிறாய்?" "நீ தகப்பன் இல்லாத பிள்ளை இல்லையடி" என்று பலமாகக் கத்த வேண்டும் போலிருந்தது. அவள் பெரும் சிரமப்பட்டு அதை அடக்கிக் கொண்டாள்.

''சந்தோஷம் தாங்க முடியேல்லை'' என்று விம்மலுடன் கூறி விட்டு மகளின் தலையை வருடி விட்டாள் சின்னன். அவளின் இளமையையும், அழகையும் பார்த்த போது ''இவளையே நான் கருவிலையே அழிக்க நினைச்சனான்' என்ற கேள்வி அவளுள் ஒரு முறை எழுந்தது. அப்படித் தன்னைச் செய்ய விடாமல் தடுத்த விதானையாரை நினைத்த போது உடனடியாகவே ஓடிப் போய் அவரின் காலில் விழுந்து அழ வேண்டும் போல் தோன்றியது.

ஒரு பெருமூச்சுடன் மீண்டும் அவள் முத்துலட்சுமியை நெஞ்சுடன் அணைத்துக் கொண்டாள்.

** **

அன்று மாலை எப்படியாவது இளையவனுடன் கதைப்பது எனத் திட்டவட்டமாக முடிவு செய்து கொண்டாள் சொர்ணம். அதற்கு ஒரே வழி பின் முற்றத்தில் தென்னோலையை அவன் வரும் பாதையின் குறுக்கே போட்டுப் பின்னிக் கொண்டிருப்பதே ஒரே வழி எனத் தீர்மானித்துக் கொண்டாள் அவள்.

அவள் மாலை நான்கு மணிக்கே பின் முற்றத்திற்கு வந்து ஓலை பின்னத் தொடங்கி விட்டாள். பின்னப்பட்ட ஓலைகளின் எண்ணிக்கை அதிகரித்ததே யொழிய அவன் வந்து சேரவில்லை.

பின்னி முடிந்த பன்னிரண்டாவது ஓலையை ஓலை அடுக்கின் மேல் வைத்து விட்டுத் திரும்பிய போது அவன் வந்து கொண்டிருந்தான். அவள் மெல்லிய ஒரு புன்முறுவலுடன் "என்ன மச்சாளின்ரை தண்ணி வார்வை நல்லாய் நடந்ததோ" எனக் கேட்டு வைத்தாள்.

"நேற்று ஏன் என்னிலை சீறி விழுந்தனியள்" என்று கேட்க நினைத்த அவன் சிரமப்பட்டு அதை அடக்கிக் கொண்டு "ஓ எங்கட வசதிக்குத் தக்கமாதிரி நடந்தது.." என்றான்.

"அப்ப உனக்கு நல்ல சந்தோஷமெண்டு சொல்லு" என்றாள் அவள். சொர்ணம் இப்படி சிரித்துக் கதைக்கும் போதுதான் தனக்கு உண்மையான சந்தோஷம் ஏற்படுகிறது என்பதை அவன் எப்படி வெளியே சொல்ல முடியும்? ஆனால் பொதுவாகவே "நல்ல சந்தோஷம்" எனச் சொல்லி வைத்தான்.

"எப்படியும் முத்து குடுத்து வைச்சவள் தான்" என்றாள் சொர்ணம் மெல்லிய கேலியுடன். ஏனோ அத்துடன் ஒரு பெருமூச்சும் எறத்தவறவில்லை.

இளையவன் அப்பாவித்தனமாகக் கேட்டான் "ஏன்..ஏன் அப்படிச் சொல்லுறியள்.?"

நீ அவளின்ர முறை மச்சான்லலே?" என்று விட்டுச் சொர்ணம் அவனின் முகத்தைப் பார்த்தாள். திடீரென அது ஒடிக் கறுத்ததை அவள் கவனிக்கத் தவறவில்லை.

அவன் ஒரு விதமான தடுமாற்றத்துடன் சொன்னான் "நான் அப்பிடி ஒண்டும் நினைக்கேல்லை"

ஏனோ அந்த வார்த்தைகள் அவள் நெஞ்சில் ஒரு மெல்லிய இனிமையைப் பரவ விட்டன. முகத்தில் மெல்லிய செம்மை படர்ந்தது.

"நான் சீவிப் போட்டு வாறன்" என்று விட்டு அவ்விடத்தை விட்டு அகன்றான். தான் அவனைக் காதலிக்கவோ திருமணம் செய்யவோ முடியாது என்பது நன்றாகவே தெரிந்தும். அவன் இன்னொருத்தியை விரும்பவில்லை என அறியும் போது ஏன் தன் மனம் இப்படிச் சந்தோசப்படுகிறது என்பதை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. அது ஒரு வரக்கூடாத உணர்வு என்பது தெரிந்திருந்தும் அவளால் அதைத் தவிர்க்க முடியவில்லை.

ஏனோ அவளையறியாமல் இளையவனுக்கு உப்புக் கல்லு வைத்துச் சுட்ட போது நான் "ஐயோ" என்றதும் சின்னன் பார்த்த அந்தப் பார்வை நினைவுக்கு வந்து போனது.

அவள் வேறு ஒரு ஓலையை எடுத்துப் போட்டு பின்னத் தொடங்கினாள். அவன் சீவி முடித்து விட்டு வரும் போது மாடுகளுக்கு கிழித்துப்போடும் ஓலைகள் இல்லாமலே வந்தான்.

அவள் கேட்டாள் "ஏன் ஓலை வெட்டயில்லையே?"

''இல்லை இண்டைக்கு ஓலை கிழிக்கச் சின்னன் மாமி வரமாட்டா...அது தான் ஓலை வெட்டேல்லை"

"அப்படியே அப்ப வா கொஞ்சம் வைக்கல் கிள்ளி மாட்டுக்கொட்டிலிலை போட்டிட்டுப் போ" என்று விட்டு வைக்கோல் போரை நோக்கி நடக்கத் தொடங்கினாள் சொர்ணம்.

வைக்கோல் போரிலிருந்து வைக்கோலை இழுத்துப் போட்டுக் கொண்டே அவள் கேட்டாள் "இனி சின்னன் வருமட்டும் நீதான் மாட்டுக்கு வைக்கல் கட்ட வேணும், என்ன"

''அதுக்கென்ன அது ஒரு சின்ன வேலை"

"உனக்கு துணைக்கு ஒவ்வொரு நாளும் நானும் வருவன்" என்றாள் அவள்.

அவன் கேட்டான் "இந்தச் சின்ன வேலைக்கு இரண்டு பேர் வேணுமே!"

"வேலை சின்னனோ பெரிசோ, இரண்டு பேரும் கட்டாயம் வேணும்" எனச் சிரித்துக் கொண்டே.. சொல்லி விட்டு வைக்கோலை இழுத்துப் போட்டாள்.

இவளின் வார்த்தைகள் விளங்கியது போலவும், அதே வேளையில் விளங்காதது போலவும் ஒரு விதமான குழப்பத்தை அவனுள் ஏற்படுத்தின. ஆனால் அவை மனதில் ஏதோ ஒரு வித இன்பக் கிளுகிளுப்பை ஏற்படுத்தியதை உணரத் தவறவில்லை.

அவன் குனிந்து வைக்கோலை அள்ளிக் கொண்டு போய் மாட்டுத் தொட்டிலில் உதறிப் போட்டான். பின்னால் வந்த அவள் இடுப்பில் கை வைத்தவாறு அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள். அவனின் உரமேறிய உடம்பில் ஒரு தனி அழகு இருப்பதாகவே அவளுக்குப்பட்டது.

அப்போது தான் எங்கிருந்தோ வந்து கால் முகம் கழுவ கிணற்றடிக்குப் போன விதானையார் இளையவனைக் கண்டு விட்டார்.

"இளையவன் இஞ்சையே நிக்கிறாய்?" என்ற விதானையாரின் குரல் கேட்டு சொர்ணம் திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தாள்.

''என்ன வைக்கல் அள்ளிப் போடுறாய், சின்னன் இண்டைக்கு வர மாட்டாளோ"

''ஓ..முத்தாச்சியட்டைச் சொல்லச் சொல்லி விட்டவ!"

"பரவாயில்லை நாலைந்து நாளைக்கு நிண்டு கறிப்புளியை வேண்டி பெட்டைக்கு வடிவாய் அரைச்சு சரக்குத் கறி வைத்துக் கொடுத்து கவனமாய் பாக்கச் சொல்லு என்ன"

"ஓமப்பா" என்றான் அவன்.

"மற்றது நாளைக்குப் பகல் சின்னனை வந்து சந்திக்கச் சொல்லு என்ன!" என்றார் விதானையார்.

"ஓ.. ஓமய்யா! என்றான் இளையவன்.

பின் விதானையாருக்கு வைக்கும் கள்ளு முட்டியை வேலியில் கொழுவி விட்டு வெறும் முட்டியை எடுத்துக் கொண்டு புறப்பட்டான் இளையவன். ஆனால் அவனின் மனம் மட்டும் சந்தோசமும் குழப்பமும் கலந்த ஒரு உணர்வுக்குள் சிக்குப்பட்டு தள்ளாடிக் கொண்டிருந்தது. விதானையார் அப்பால் போய் மறையும் வரை பார்த்துக்கொண்டு நின்ற சொர்ணம் இளையவன் பின்னால் ஓடிப் போய் "ஏய் நாளைக்கு ஒரு விசேசம்! தெரியுமே" எனக் கேட்டாள். அவன் வியப்புடன் "என்னது?" என்றான்.

''நாளைக்குச் சொல்லுறன்'' என்று விட்டு சிரித்துக் கொண்டே உள்ளே ஓடி விட்டாள் அவள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்



## இணையா என்னைம்

கைக்குட்டைக்குக் கூட
என்னை
பிடிக்கவில்லை
சிந்தும் கண்ணீர்த்துளிகளை
அதனால் முழுமையாக
ஏற்கமுடியவில்லை

நான் தண்ணீர் வார்க்கும்
போது அந்த
வெண்றோஜா மன்றுக்குக்
கூட
என்னை பிடிக்கவில்லை
என்னுள் இயல்பு மனநிலை
இல்லை என்று
அதற்கு தெரிந்துவிட்டது

அந்த பேனாவுக்குக் கூட
என்னை பிடிக்கவில்லை
நீ நெடுக உன்
சோகத்தையே
எழுதுகிறாய் என்று

அந்த முகம் பார்க்கும்
கண்ணாடிக்குக் கூட
என்னை பிடிக்கவில்லை
என் அகத்தினுள்
சாந்தம் இல்லை என்று
தெரிந்துவிட்டது.
கவிதை எழுதும்
கடதாசிக்குக் கூட
என்னை பிடிக்கவில்லை
அதில் துன்ப இசை
ததும்புகிறது போலும்

தன் உணர்வுகள்
தடுமாறி
பதற்றப்படுகின்றனவே
தன் உணர்ச்சிகளை
கட்டுப்படுத்த
தெரியவில்லை
போலும்

– ஆருஃலைதீன்பான் –


## நிகரில்லை

புன்னகை புரியும்
பூவையர்க்கு
பொன்நகை தேவையில்லை
புருஷனை மதிக்கும்
பெண்களுக்கு, வேறு
புகழ் ஒன்றும் தேவையில்லை!
மழலையைச் சுமந்து
மண்ணில் பிரசவிக்கும்
மாதர்க்கு ஈடு இல்லை!

கணவனை மகிழ்வித்து
கஸ்டத்தை எதிர் கொண்டு
நல்லறை வளர்க்கும்
கற்பூரம் போல் வாழும்
காரிகைக்கு நிகரேதுமில்லை!

பிரம்மனின் படைப்பினில்
அற்புதப் படைப்பு
அரிவையும் என்றால்
அதுவும் மிகையில்லை!
மங்கை இல்லாத
மனையிலும் – மனி
வாழ்விலும் மகிழ்ச்சியில்லை!

– கவிக்குயில் செல்வம் –



## விடுதலை.

எத்தனை வேதனைகள்
எண்ணற்ற சோதனைகள்
முடிவில்லாத் துன்பங்கள்
முடியவில்லை அவலங்கள்

யார் துடைப்பார் கண்ணீரை
யார் புரிவார் அவலத்தை
நிலை தடுமாறுகின்றேன்
நிம்மதி இல்லை இங்கே

தமிழர்க்கா இந்த நிலை
தடுமாற மாட்டோம் என்றும்
உணர்வுடு உள்ளவரை
உழைத்திடுவோம் தமிழர்க்காய்.

– [illegible] –

## காதலின் உண்மை

காதலைவது எனக்காவது என்று
சொல்ல வந்தேன்!
காதலில் நேசமில்லை வேசம்
மட்டுமே
என்று தூற்றியும் வந்தேன்!
அற்புதத்தை உலகில் பலவுண்டு
என
அறியவந்ததும் அந்தக் காதல்
மூலமே!
அது நான் அந்தக் காதலின்
ஒரேயொரு பலனும் கூட !
மற்றாத நவிப்புகளின்
குவிப்புக்குப்
பெயர் காதல் என்பேன்!

– சமேருநிராஜ் –

## நன்றியுள்ள மிருகம்

என்னை தினமும்
வட்டமிட்டு வந்தாயே!
நான் எங்கு
சென்றாலும் – நீ
என் துணைக்கு
இருந்தாயே!
இன்று எங்கு
சென்றாயோ?
ஆறறிவு படைத்த
மானிடரை விட
ஐந்தறிவு படைத்த – நீ
என்னிடம்
பாசமாக இருந்தாயே!
தற்சமயம் எங்கு
சென்றுவிட்டாயோ?
மீண்டும் வந்திடுவியா?
என் யூளியே!
என் வீட்டுக் காவலுக்காக
அல்ல
எனக்கு துணையாக -
ஏனெனில்
எனக்கென இருப்பது
நீ மட்டுமே!!!

– வசந்தமது –

## கை

இரவுகள் கடந்த சூரியன்
இன்னொரு முறை
வருவதில்லையா?
இரவுகள் என்று நிலவு
இமைமூடிக் கிடந்ததுண்டா?
தேய்கிறேன் என்பதற்காய்
தேன்நிலா வருந்திக் கொண்டே
வளர மறுத்ததா?
மடிந்து விடுவேன் – மறுநாள்
என்பதற்காய் மொட்டுக்கள்
பூக்காமல் இருந்ததில்லையே
வாழ்க்கை ஒரு நாள்
என்பதற்காய் – ஈசல்கள்
இறக்கை விரிக்க மறுத்ததுண்டா?

திருப்பி அடிக்கப்படுகிறேன் என்று
அலைகள் ஓய்ந்து
விடுவதில்லையே.....
ஆயுள் ஒன்று என்று
வாழை மரங்கள்
அலட்டிக் கொள்வதில்லையே...ஏன்
உன்னிடமேஓர்
அழகான உதாரணமிருக்கிறது

வெட்ட வெட்ட நகம்
தழைப்பதில்லையா?
வலிக்கும் என்பதற்காய் – தாய்
குழந்தை சுமக்க மறுத்ததில்லையே
பிறகேன் நீ மட்டும்
முடங்குகிறாய்?
எழுந்து வா
எல்லோரும் சிகரம் தொடுவோம்.

– என். அகநிகா –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீச்சல் உடையில் அசின்

பல இளைஞர்களின் மனங்களை கொள்ளை கொண்ட நடிகை அசின் கவர்ச்சிக்கு மறுப்பு சொல்லி வந்தார்.

தமிழில் குடும்ப பாங்கான பாத்திரங்களிலும், மொடேர்ன் ட்ரெஸ்களிலும் மட்டுமே நடித்தார். இந்தியிலும் அதே கட்டுப்பாட்டுக்குள்ளே இருந்தார். கஜினி, லண்டன் டிரீம்ஸ் படங்களில் கவர்ச்சி காட்டவில்லை. நிறைய படங்களில் கவர்ச்சியாக நடிக்க கேட்டு வந்தனர். அவைகளை மறுத்து விட்டார்.

இப்படிப்பட்ட அசின் தற்போது திடீரென கவர்ச்சிக்கு மாறி உள்ளார். அவர் நடிக்க உள்ள 'ஹவுஸ்புல்' என்ற ஹிந்தி படத்தில் நீச்சல் உடையில் நடிக்க சம்மதித்துள்ளார். சக நடிகைகள் ஆடை குறைப்பு செய்து ஆபாசமாக நடிப்பதால் போட்டிகளை சமாளிக்க கவர்ச்சிக்கு குதித்துள்ளார்.

அசின் நீச்சல் உடையில் நடிப்பதை ஒப்புக்கொண்டதும் படத்தின் தயாரிப்பாளர் சஜீத் நடியாட்வாலாவும் உறுதிப்படுத்தினார். அவர் கூறும்போது படப்பிடிப்பு இத்தாலி, கிரீஸ் போன்ற நாடுகளில் நடக்கிறது. கதைக்கு தேவை என்பதால் நீச்சல் உடையில் நடிக்க அசின் சம்மதித்தார் என்றார்.

சினிமான உலகில் சாதிக்கும் ஓர் ஆயுதமாக இந்த கவர்ச்சியும், நிர்வாணமும் ஆதிக்கம் செலுத்தி வருவது ஆரோக்கியமற்ற தன்மையாகவே நோக்கப்படுகின்றது.




# 5000 தயாரிப்பாளர்கள் முயலுக்கு

உலகிலேயே முதல் முறையாக என்று சொல்லக் கூடிய அளவுக்கு தமிழ் சினிமா தயாரிப்பில் ஒரு சமாச்சாரம் நடந்திருக்கிறது. அதாவது போட்டோகிராபர்களும் வீடியோகிராபர்களும் மட்டும் இணைந்து ஒரு படத்தைத் தயாரிக்கிறார்கள். ஒருவர் இருவரல்ல 5000 பேர்!

படக் கம்பெனிக்குப் பெயரே போட்டோ அண்ட் வீடியோகிராபர்ஸின் பிஅண்ட்வி எண்டர்டெயின்மெண்ட் லிட் என்று வைத்திருக்கிறார்கள். இந்த நிறுவனத்தின் முதல் படத்துக்குப் பெயர் முயல். முயல் என்றால் சுறுசுறுவென ஓடித் திரியும். முயல் என்ற அர்த்தம் முயற்சி என்ற அர்த்தத்தையும் கொடுக்கிறது.

கண்டுபிடி கண்டுபிடி, பூமல் படங்களில் நடித்த முரளி இந்தப் படத்தில் ஹீரோவாகவும், போராண்மை படத்தில் நடித்த சரண்யா நாயகியாகவும் நடிக்கிறார்கள். ராஜ்குமார், பிரபு, மீரா கிருஷ்ணன், ஷிவானி உள்பட பலரும் நடிக்கிறார்கள்.

இதுவரை தங்கள் வாழ்க்கையில் எந்த துன்பத்தையும் அனுபவித் திராத மூன்று நண்பர்கள், கல்லூரிப் படிப்பு முடிந்து ஏதாவது ஒரு பிஸினஸ் பண்ணலாம் என இறங்கும்போது, அவர்களின் வாழ்கையையே புரட்டிப் போடுகிறது ஒரு சம்பவம். தங்களுக்கு வந்த அந்த கஷ்டம் வேறு யாருக்கும் வராமல் இருக்க அவர்கள் செய்யும் முயற்சிகள் தான் இந்த முயல்.

மதுரை, ஆண்டிபட்டி, சனிக்கிழமை சாயங்காலம் 5 மணி போன்ற வித்தியாசமான முயற்சிகளில் ஒளிப்பதிவாளராகப் பணியாற்றிய எஸ்.பி.எஸ் குகன் இயக்கும் படம் இது. சனிக்கிழமை சாயங்காலம் 5 மணி படத்தை ஸ்டில் கேமராவில் படமாக்கி கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்தவர் குகன் என்பது குறிப்பிடத்தக்கது. படத்துக்கு ஜேவி இசையமைக்கிறார். 5000 போட்டோ மற்றும் வீடியோகிராபர்கள் உருவாக்கும் இந்தப் படத்தின் ஆரம்ப விழாவில் படத்தின் பாடல்களையும் வெளியிட்டு புதுமை செய்தனர்.






# சினி.. பிட்ஸ்...

## சரத்குமாரும் கோச்சடையானில்..

ஆரம்பத்தில் அனிமேஷன் 3 டி படம் என்ற அளவுக்கு இருந்த கோச்சடையான் இப்போது ஒரு மெகா படமாக உருவெடுக்கத் தொடங்கியுள்ளது. இந்தப் படத்தில் ஏற்கனவே பெரிய நட்சத்திரங்கள் ரஜினியுடன் கை கோர்த்துள்ள நிலையில், இப்போது புதிதாக இணைந்துள்ளார் நடிகர் சரத்குமார். ரஜினிக்கு அடுத்து முக்கிய பாத்திரத்தில் சரத்குமார் நடிக்கிறார்.

கோச்சடையான் படத்தின் இயக்குனரான சௌந்தர்யா ரஜினி காந்த் தனது டிவிட்டர் இணையத்தில் கோச்சடையான் படத்தில் சரத்குமார் அங்கிள் நடிக்க ஒப்பந்தம் செய்து இருக்கிறோம். என்று தெரிவித்துள்ளார். ஏற்கனவே ராணா படத்திலும் சரத்குமார் முக்கிய கதாபாத்திரத் தில் நடிக்க இருக்கிறார் என்ற தகவல் வெளியானது குறிப்பிடத்தக்கது.

கே.எஸ்.ரவிக்குமார் மேற்பார்வையில் சௌந்தர்யா ரஜினிகாந்த் இயக்க இருக்கிறார். ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்க, சினேகா ரஜினிக்கு தங்கையாக நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார். ஏற்கெனவே ஆதி, சினேகா உள்ளிட்டோர் நடிப்பது உறுதியாகியுள்ளது. கேத்ரீனா நாயகியாக நடிக்கிறார்.

## மீண்டும் ஷங்கர் இயக்கத்தில் விக்ரம்?

ஷங்கரின் அடுத்த படத்தில் சீயான் விக்ரம் ஹீரோவாக நடிக்கிறார். ஷங்கர் இயக்கத்தில் இளைய தளபதி விஜய் நடிப்பில் வெளிவந்துள்ள நண்பன் படம் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. இதனையடுத்து ஷங்கரின் அடுத்த பட அறிவிப்பு குறித்து தகவல்கள் வெளியாகியுள்ளன. நண்பன் படத்துக்கு பிறகு, சிறிது காலம் குடும்பத்துடன் ஓய்வு எடுக்க முடிவு செய்துள்ள ஷங்கர், கல்பாத்தி எஸ் அகோரம் நிறுவனத்திற்கு ஒரு படத்தினை இயக்குவதற்கு ஒப்புக்கொண்டுள்ளார். படத்திற்கு யார் ஹீரோ என்பது குறித்து எந்த ஒரு தகவலையும், தயாரிப்பு நிறுவனமோ ஷங்கரோ சொல்லவில்லை. தற்போது இந்த தகவல் கசிய தொடங்கியுள்ளது. ஆக்ஷன் + த்ரில் கலந்த இந்த படத்தில் சீயான் விக்ரம் ஹீரோவாக நடிக்கிறார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. படத்தின் பெயர், இசையமைப்பாளர், ஹீரோயின் குறித்து விரைவில் தகவல்கள் வெளியாகும் என தெரிகிறது. ஏற்கனவே ஷங்கர்-விக்ரம் கூட்டணியில் வெளிவந்த அந்நியன் படம் மிகப் பெரிய வெற்றியை பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## அம்புலிக்கு 10 லட்சம் 3டி கண்ணாடிகள்

கே.வி.டி.ஆர் கிரியேட்டிவ் ரீல்ஸ் சார்பில் லோகநாதன் தயாரிக் கும் 3டி படம் அம்புலி. பார்த்திபன், அஜெய், ஸ்ரீஜித், சனம் உட்பட பலர் நடிக்கிறார்கள். 3டி படம் என்பதால் அதற்கான கண்ணாடி தயாரிக்கும் பணி நடந்து வருகிறது. இதுகுறித்து படத்தின் இயக் குனர்கள் ஹரி ஷங்கர், ஹரீஷ் நாராயணன் கூறியதாவது: டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் தமிழில் வரும் முதல் 3டி படம் இதுதான். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் கவரும் வகையில் கதை உருவாக்கப்பட்டுள்ளது. சில மர்மமான நிகழ்வுகளை அமானுஷ்ய சக்தி என்று மக்கள் நினைத்து நடுங்குகிறார்கள். அவற்றில் உள்ள உண்மை என்ன என்று நாயகனும் நாயகியும் கண்டு பிடிப்பது கதை. தமிழ் நாட்டின் பெரும்பான்மையான தியேட்டர்களில் வெளியிட திட்டமிட்டுள்ளோம். 3டிக்கென்று தனியாக உள்ள தியேட்டர்களில் கண்ணாடி அவர்களே வைத்திருப்பார்கள். பொதுவான தியேட்டர்க ளுக்காக முதல் கட்டமாக 10 லட்சம் கண்ணாடிகள் தயாரித்து வருகிறோம். படத்துக்கு கிடைக்கும் வரவேற்பை பொறுத்து 50 லட்சம் கண்ணாடிகள் வரை தயாரிக்க தயார் நிலையில் இருக்கிறோம்.

## சரண்யாவின் தாராள மனம்

கோலிவுட்டின் சமீபத்திய ஹாட் டாக் காதல் சரண்யாவைப் பற்றியது தான். அம்மணி காதல், பேராண்மை என சொற்ப படங்களில் தான் நடித்திருக்கிறார். இந்நிலையில் மழைக்காலம் என்ற படத்தில் முக்கிய ரோலில் நடிக்கும் சரண்யாவுக்கு இதுவரை அவர் வாங்கிராத சம்பளம் அளிக்கப்பட்டுள்ளதாம்.

காரணம்! அம்மணி படத்தில் நிர்வாண போஸ் கொடுக்க இருப்பது தான் என்கிறது விவரமறிந்த வட்டாரம்?! ஓவியக்கல்லூரி யில் நடக்கும் இந்தக் கதையில் ஒரு காட்சியில் நாயகி நிர்வாணமாக போஸ் கொடுக்க வேண்டியிருக்கிறது என இயக் குநர் தீபன் சொல்ல ஐய்யோ ஆளை விடுங்கள் என அலறி அடித்து ஓடி இருக்கின்றனர் பல ஹீரோயின்கள்.

இந்நிலையில் அந்த டீலுக்கு ஒப்புக்கொண்டு கத்தையாக சம்பளமும் வாங்கிக் கொண்டு இது என் கேரியரில் ஒரு பிரேக் தரும் என தைரியமாக களம் இறங்கியிருக்கிறார் சரண்யா என கிசுகிசுக்கப்படுகிறது. பொறுத்திருந்து பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகத்தில் பிஸி

நடிகை தமன்னா தற்போது ஆன்மீகத்தில் அதிக ஆர்வம் காட்டி வருகிறாராம். எப்பப் பார்த்தாலும் ஹோமம், புனஸ்காரம் என்று புகையும், பூஜையுமாக பிசியாக இருக்கிறாராம். ஒரு காலத்தில் தமன்னாவுக்கு தமிழில் அத்தனை மவுசு இருந்தது. ஆனால் தற்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. தனுஷுடன் ஜோடி சேர்ந்து நடித்த வேங்கைக்குப் பிறகு அவருக்கு தமிழில் வாய்ப்புகள் வந்ததாகத் தெரியவில்லை. ஆனால் அம்மணி தெலுங்கில் பிசியாகத் தான் இருக்கிறார். சும்மா ஓடி, ஓடி நடிக்கிறார்.

ஆனால் தற்போது தமன்னாவைப் பார்ப்பவர்கள் என்னாச்சு இந்த பொண்ணுக்கு இப்படி பக்திமானாய் மாறிவிட்டதே என்று ஆச்சரியப்படுகிறார்களாம். ஹைதராபாத் வந்தால் போதும் தமன்னா கோவில் கோவிலாக ஏறி இறங்குகிறாராம். அட அப்படி என்ன தான் உருகி, உருகி வேண்டுகிறார் என்று தான் தெரியவில்லை. மும்பைக்கு சென்றால் தனது வீட்டில் ஹோமம், பூஜை நடத்துகிறாராம். தற்போது தமன்னா இருக்குமிடம், போகுமிடமெல்லாம் பக்தி மயமாக உள்ளது.




## காத்திருந்து... காத்திருந்து...

நயன்தாரா, சினேகா மீண்டும் நடிக்க முடிவு செய்திருப்பதால் அவர்களது காதலர்கள் பிரபு தேவா, பிரசன்னா கல்யாணத்துக்கு காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீராமராஜ்யம் என்ற தெலுங்கு படத்தில் சீதை வேடத்தில் நடித்த பிறகு புதிய படங்களில் நடிக்க ஒப்புக்கொள்ளவில்லை நயன். ஆனாலும் தமிழ், தெலுங்கு இரு மொழியிலும் அவருக்கு நிறைய வாய்ப்பு வருகிறது. ஆனால் எதையும் ஏற்காமல் இருந்தார். நடிப்புக்கு முழுக்கு போட்டுவிட்டீர்களா? என்று கேட்டபோது பதில் சொல்லாமல் நழுவி வந்தார். தற்போது பிரபு தேவா இந்தி படம் இயக்குவதில் பிஸியாக இருக்கிறார்.

இதற்கிடையில், தசரத் இயக்கும் சந்தோஷம் என்ற தெலுங்கு படத்தில் நாகார்ஜுன் ஜோடியாக நடிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார் நயன்தாரா. நயனுக்கு இதில் சம்பளம் ரூ.1.5 கோடியாம். காதல் கதையான இதன் ஷூட்டிங் மே மாதம் தொடங்குகிறது. இதனால் பிரபு தேவா - நயன்தாரா திருமணம் தள்ளிப்போகிறது. தொடர்ந்து நடிப்பது பற்றி எதுவும் கூறாமல் இருந்த நயன்தாரா திடீரென நடிக்க ஒப்புக்கொண்டிருப்பது சினிமா வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரசன்னாவை காதலித்து வரும் சினேகாவும் சமீபகாலமாக நடிக்காமல் இருந்தார். அவரும் நடிப்பை தொடர முடிவு செய்திருக்கிறார். கோச்சடையான் படத்தில் ரஜினியின் தங்கையாக நடிக்கிறார். இதுதவிர ஜிஎன்.ஆர் குமாரவேலன் இயக்கும் படம், சரத்குமார் நடிக்கும் விடியல் ஆகிய படங்களில் நடிக்கிறார். இப்படங்களை முடித்துக்கொடுத்துவிட்டு பிரசன்னாவை மணக்க முடிவு செய்துள்ளார்.

## காதல் இல்லை – இலியானா

ஷங்கரின் நண்பன் படத்தின் ஹீரோயின் இலியானா!... சமீபத்தில் பத்திரிக்கையாளர் ஒருவர்... உங்களுக்கு யார் மீது காதல்? என்று கேட்டார். அதற்கு இலியானா எனக்கு யார் மீதும் காதல் இல்லை, நான் தேடும் நபர் இதுவரை என் கண்ணில் படவில்லை என்று கூறினார். மேலும், என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கைக்கு எப்படிப்பட்ட நபர் வேண்டும், அவர் என்னுடைய சொல்லுக்கு கட்டுப்படணுமா இல்லையா என்று நான் தான் முடிவுசெய்ய வேண்டும் என்று இலியானா கூறினார்.

## மார்ச் – 5

அமராவதி படம் மூலம் தமிழில் அறிமுகமானவர் சங்கவி. ரசிகன், நாட்டாமை, வருஷமெல்லாம் வசந்தம், பஞ்சதந்திரம் உள்ளிட்ட பல படங்களில் நடித்திருக்கிறார்.

தெலுங்கு படங்களிலும் நடித்துள்ளார். 36 வயதாகும் சங்கவிக்கு திருமணம் முடிவாகியுள்ளது. மணமகன் அமெரிக்காவில் டாக்டராக உள்ளார். திருமணம் மார்ச் மாதம் 5-ந்தேதி சென்னையில் நடைபெறும்.

## விமர்சனம்

பொலீஸ் பரம்பரையில் பிறந்த அண்ணன் தம்பிகள் மாதவனும், ஆர்யாவும்! எதிர்பாராமல் இவர்களது தந்தை திடீரென அகால மரணமடைய, அப்பா வின் பொலீஸ் உத்தியோகம் மகன் மாதவனுக்கு கிடைக்கிறது! பயந்த சுபாவமுடைய மாதவன் முதலில் அதை ஏற்க மறுக்கிறார். அவருக்கு தைரியம் சொல்லி, அண்ணன் மாதவனை அந்த வேலையை ஏற்க செய்யும் அடிதடிக்கு அஞ்சாத தம்பி ஆர்யா, மாதவனுக்கு இறுதிவரை எப்படி உறுதியாக அவரது உத்தியோகத்தில் உதவி செய்கிறார்...? என்பதை காமெடியாகவும், கலக்கலாகவும் சொல்லியிருக்கும் படம்தான் வேட்டை மொத்தமும்! இதனூடே அக்கா-தங்கைகளான சமீரா ரெட்டி-அமலாபால் இருவருடனும் மாதவன்-ஆர்யா இருவரும் இணையும் கல்யாணம் மற்றும் காதல் காட்சிகளையும் கலந்து கட்டி காதலாகவும், அதே நேரம் வேட்டை படத்தை விளையாட்டாகவும், விறுவிறுப்பாகவும் வித்தியாசமாக நகர்த்தியிருக்கிறார் இயக்குநர் என்.லிங்குசாமி என்றால் மிகையல்ல!

அந்தகாலத்து எம்.ஜி.ஆர்., பார்முலா கதை! அவசர பொலீஸ்-100 எனும் பெயரில் கடந்த சில வருடங்களுக்கு முன் கே.பாக்யராஜ் செய்த கதையும் கூட! ஆனாலும், சலிக்காமல் புதிய விருந்தாக ரசிகர்களுக்கு புத்தம் புதுசாக வேட்டையை படைத்திருக்கிறார் இயக்குநர். அவரது உணர்வுகளை உள்வாங்கிக் கொண்டு பளிச்சிட்டிருக்கின்றனர் மாதவன், ஆர்யா, சமீரா ரெட்டி, அமலா பால், அண்ணாச்சி ஹஸுதோஷ் ராணா, நாசர், தம்பி ராமையா, ராஜூ ரவிந்திரன், ஸ்ரீஜித்ரவி, முத்துக்குமார், சண்முகராஜன் உள்ளிட்ட ஒவ்வொரு நட்சத்திரமும்!

இரண்டு ஹீரோ சப்ஜெக்ட் என்றாலும், எந்த குழப்பமும் இல்லாமல் மாதவனுக்கும், ஆர்யாவுக்கும் ஈக்குவல் முக்கியத்துவம் உடைய பாத்திரங்கள் என்பதால் பயந்த மனநிலை உடைய பொலீஸாக மாதவன், அவருக்கு உதவும் தம்பியாக அடிதடிக்கு அஞ்சாத ஆர்யா என இருவருமே போட்டி போட்டுக் கொண்டு அசத்தியிருக்கிறார்கள்.

அவ்வாறே அக்கா-தங்கைகளான சமீரா ரெட்டி, அமலாபால் இருவரும் இரு வேறு கோணங்களில் பட்டையை கிளப்பி இருக்கின்றனர். வெறும் கவர்ச்சி மட்டு மின்றி இருவருக்குமே நடிக்க நல்ல வாய்ப்புகள் கொடுக்கப்பட்டிருப்பது பாராட் டுக்குரியது.

வில்லன் ஹஸுதோஷ் ராணாவின் பங்கும் படத்தை உயிரூட்டுகிறது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரைப் பணயம் வைக்கும் காரோட்டப் பந்தயம்

**உண்மைச் சம்பவம்**

**28** வயதான நிக்கிக்கு எந்தப் பயமும் இல்லை. பதினெட்டாவது வயதிலேயே அவருக்கு அவரது பாட்டி மினி கார்களை வாங்கிக் கொடுத்தாள். அவருடைய தந்தையார் வெனிஸ் நகரத்தில் வர்த்தகப் பிரமுகர்களில் ஒரு முக்கிய புள்ளி.

அவரது மனைவி 25 வயதேயான மெர்லின். இருவரும் அழகிய இளம் தம்பதியினர். நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் கார்ப்பந்தயங்களில் கலந்து கொண்டு முன்னோடி வீரராக விளங்கினார். பிரிட்டனில் நடைபெறவிருந்த கார்ப்பந்தயத்தில் கலந்து கொள்ளப் பந்தயக்கார் வாங்க வங்கியில் கடன் வாங்கினார் நிக்கி. அதே வேளையில் இத்தாலியில் நடைபெறவிருக்கும் கார்ப்பந்தயத்தில் பங்குபற்ற பந்தயச்சங்கத்தின் தலைவர் என்ரோவின் ஒப்பந்தத்தில் நிக்கி கையெழுத்திட்டார். அதில் கலந்து கொண்டு நான்காவதாக வந்தார்.

அடுத்த ஆண்டில் அதே பந்தயத்தில் சம்பியன் பட்டத்தைப் பெற்றார். அதனைத் தொடர்ந்து ஜேர்மனியில் நடைபெற்ற ஒன்பது போட்டிகளிலும் கலந்து கொண்டு ஐந்து தடவைகள் வெற்றியை ஈட்டினார்.

மழை பெய்து கொண்டிருந்த போதிலும், பந்தய மைதானத்தில் மூன்று லட்சம் ரசிகர்கள் பந்தயத்தைக் காணக் காத்துக்கொண்டிருந்தார்கள். நிக்கி கடைசிப் பந்தயத்தில் கலந்து கொள்ளத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தார்.

தன்னிரு காதிலும் மெழுகையும், பஞ்சையும் வைத்து அடைத்துக் கொண்டார். தீப்பற்றி எரியாத முகமூடியை முகத்தில் அணிந்து கொண்டார். இறுக்கமான உடையுடன் தலையில் இரும்புத் தொப்பியையும் போட்டுக் கொண்டார்.

பந்தயம் தொடங்கச் சில வினாடிகளுக்கு முன் மழை நின்றது. நிக்கி மைதானத்தின் ஈரம் சற்று உலரட்டும் என்று காத்திருந்தார். பந்தயத் தொடக்கத்தில் காரைக் கிளப்பிய போது மோசமாக நடந்து கொண்டார். முதல் ரவுண்டில் அவர் ஓட்டதாவதாக வந்தார். காரை மிகவும் வேகமாகச் செலுத்திப் பந்தயத்திற்கான பாதையை விட்டு உலர்ந்த பகுதியில் காரைச் செலுத்தினார். சுமார் அறுபது நிமிடமாயிற்று, ஸ்டியரை மாற்றிச் சரியான பாதையில் மீண்டும் செலுத்தத் தொடங்கினார்.

இரண்டாவது சுற்றில் பாதிவழியிலேயே ஏதோ நடந்தது. சிலர் ஒப்பந்தக்காரன் பேர்சி ஒரு சக்கரத்தைக் கார் முன் உருட்டி விட்டதாகக் கூறினார்கள். சிலர் ஈரமாக இருந்த பகுதியில் மோதிக் கொண்டது என்றார்கள். நிக்கிக்கு அடுத்த கணம் என்ன நடந்தது என்று நினைவில்லை. அவர் மணிக்கு 225 கிலோ மீற்றர் வேகத்தில் ஒரு மணி நேரமாகச் சுற்றிவருகிறார்.

அவருடைய கார் பாதையைவிட்டு விலகிக் கட்டடங்களின் மீது பாய்ந்து, கட்டுப்பாட்டினை இழந்தது. பெட்ரோல் தாங்கி திறந்து கொண்டது. பேர்சி பின்னாலேயே நடுப்பாகத்தில் வந்து கொண்டிருந்தான். முதலில் பின்னால் வந்த கார் நிக்கியின் காரைச் சிறிது உராய்ந்த வண்ணம் போயிற்று. அதற்கு அடுத்துவந்த கார் வளைவில் திரும்பி கிறீச் என்ற சத்தத்துடன் பிரேக் போட்டுப் பாதையை விட்டு விலகி ஓடிய காரின் மீது இடித்தது. உடனே கார் தீப்பற்றிக் கொண்டது.

கார் ஓட்ட உட்காரும் இடத்தில் நிக்கி இருந்ததால் பேர்சியால் தீயணைக்கும் பொருளை எரியும் காரின் மீது செலுத்த முடியவில்லை. நிக்கியின் இரும்புத் தலைக்கவசம் பறந்து போய்விட்டது. அவனது முகமூடியைத் தீ பொசுக்கி முகத்தையும் தீய்த்து விட்டது.

மற்றக் காரோட்டிகள் காரை நிறுத்திவிட்டு நிக்கிக்கு உதவி செய்ய விரைந்தார்கள். அவர்களில் ஒருவன் இத்தாலிய நாட்டைச் சேர்ந்த காரோட்டச் சம்பியனான மர்ஜாரியோ. அவன் பாய்ந்து சென்று நிக்கி தம்மைப் பிணைத்துக் கொண்டிருந்த பெல்டை அவிழ்த்தான். முன்பக்கம் வந்து, காரின் மேலே திறந்த பகுதி வழியாக நிக்கியை எரியும் காரிலிருந்து வெளியே இழுத்தான்.

எப்படியோ நிக்கிக்கு நடக்கச் சக்தி இருந்தது. அவர் தீய்ந்த முகத்தைத் தொட்டுப் பார்த்துவிட்டுத் தன்னைக் காப்பாற்றியவனிடம் "என் தோற்றம் எப்படியிருக்கிறது" எனக் கேட்டார். "அழகாக இருக்கிறது" என்று அவன் பொய் சொன்னான்.

எரிந்து கொண்டிருந்த காரினுள் நிக்கி நாற்பது நிமிடங்கள் இருந்தார். காரின் பாகங்கள் எரியும் போது அவற்றிலிருந்து எழுந்த விஷப்புகையைச் சுவாசித்துள்ளார். அவரை ஹெலிகொப்டரில் 145 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ஓட்லிக்ஷேவன் மருத்துவமனைக்கு முதலில் எடுத்துச் சென்றார்கள். அவர் முகம், கைகள் ஆகியவற்றில் தீக்காயங்கள் பட்டதால் வேதனையால் துடிதுடித்தார். முகவாய்க்கட்டை எலும்பும், விலா எலும்புகள் சிலவும் முறிந்து போயிருந்தன. எல்லாவற்றிலும் மிகக் கொடிய அபாயம் நுரையீரலில் விஷப்புகை நிறைந்திருந்ததுதான்.

அன்று மாலையே அவர் மான்கிம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்குதான் இத்தகைய விபத்துக்குள்ளானவர்களுக்குச் சிகிச்சை அளிக்கத் தேவையான வசதிகள், சாதனங்கள் இருந்தன.

அடுத்த மூன்று நாட்களுக்குள் யாரையும் பார்க்கவோ, பேசவோ அனுமதிக்கப்படவில்லை. தனது வீட்டில், டெலிவிசனில் கார்ப்பந்தயத்தைப் பார்த்துக் கொண்டிருந்த மெர்லினுக்கு படபடவென்று வேகமாக மார்பு அடித்துக் கொண்டது. சில சமயங்களில் பந்தயத்தைப் பார்க்காமல் பார்வையை வேறுபக்கம் திருப்பிக் கொண்டாள். இறுதியில் கார் விபத்துக்குள்ளானதைக் கண்ணுற்ற மெர்லின் செய்வதறியாது திகைத்தாள்.

அவளது வீட்டிலிருந்து 300 கிலோ மீற்றர் தொலைவில் நடந்தது கார்ப்பந்தயம். புறப்பட்ட அவளுக்கு நிக்கியை 250 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மான்கிம் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு விட்டதாகச் செய்தி கிடைத்தது.

மான்கிம் மருத்துவமனையில் அபாயகரமான நிலையிலுள்ளவர்களை பராமரிக்கும் பகுதியின் அறை வாயிலில் நின்றுகொண்டிருந்தாள் மெர்லின் பதற்றத்துடன். அவளது கணவரின் தலையில் பெரிய கட்டுப் போடப்பட்டிருந்தது. அவனது தோற்றம் அடையாளம் காணமுடியாதபடி மாறியிருந்தது. முகம் மோசமாக தீய்ந்து போய் மும்மடங்காக வீங்கியிருந்தது. கண்களும், மூக்கும் அளவுக்கு மீறிப் பருத்திருந்தன. எல்லாமே கறுத்துப் போயிருந்தன. அவனது வாயிலிருந்து வெளிப்படும் ஒவ்வொரு முனகலும் உயிரின் கடைசிக் கட்டம் போலவே காணப்பட்டது.

டாக்டர் வெளியில் வந்தார். "அவ பிழைப்பாரா?" என்று மெர்லின் கேட்டாள். டாக்டர் தலையசைத்து விட்டு "உடலில் பட்ட தீக்காயங்கள் பற்றிக் கவலையில்லை. கார் தீப்பற்றி எரிந்தபோது வெளிப்பட்ட விஷவாயுவை நிக்கி அளவுக்கு மீறிச் சுவாசித்திருக்கிறார். அந்த வாயு நுரையீரலையும் தாண்டி உள்ளே சென்றிருக்கிறது. ஈரலின் இயக்கமும் குறைந்து கொண்டே வருகிறது. சில மணி நேரமே உயிருடன் இருப்பார்" எனக் கூறினார்.

மெர்லின் இரவு முழுவதும் அழுதபடி இருந்தாள். மூடப்பட்ட கதவினுள் மரணத்தின் தலை வாசலை அடைந்த நிக்கி அதை ஏற்க மறுத்தார்.

ஒட்சிசன் குழாய் பொருத்தப்பட்டிருப்பது முதலிய வற்றிலிருந்து அவர் தனக்கு உயிருடன் தொடர்பு இருப்பதை நிக்கி உணர்ந்தார். அவரது மனத்துணிவைக் கண்டு டாக்டர்கள் வியந்தனர். அவரது மனத்துணிவைப் பாராட்டினாலும் அவர் இன்னும் மரணத்தின் பிடியில் தான் இருக்கிறார் என்பதை டாக்டர்கள் மெர்லினுக்குத் தெரிவித்தனர்.

நாளுக்கு நாள் அவர் உடல்நிலை தேறியது. ஒட்சிசன் குழாய் அகற்றப்பட்டது. மறுநாள் நாற்காலியில் உட்கார வேண்டும், என அடம்பிடித்தார். குரலும், பார்வையும் பழைய நிலைக்கு வந்தன. மெர்லினைப் பிடித்தபடி அறையினுள் சுற்றிச் சுற்றி வந்தார். அவரை மீண்டும் வாழ்க்கைக்கு அழைத்து வந்தது மனைவி மெர்லின்தான். அவளுடைய அன்பு, நம்பிக்கை, என் ஊற்றால் அவர் குணமடைந்து வந்தார். இடைக்காலத்தில் அவருக்கு கவிமருந்துகள் ஏற்றப்பட்டன. உடலில் இரத்தம் அடியோடு மாறுவதற்கு இரத்தம் செலுத்தப்பட்டது. எரியுண்ட தோல்களை அமைப்பதற்காகச் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. தீக்காயங்களால் தீய்ந்து போன முகத்திலுள்ள தசைகளுக்குப் பதிலாக தொடையிலிருந்து தசையை எடுத்து வைத்தார்கள்.

விபத்து நடந்து மூன்று வாரங்களில் நிக்கி தம் மனைவி மெர்லினுடன் வீட்டிற்குச் சென்றார். பழைய நிலையை உடல் அடையக் கடுமையாகப் பாடுபட்டார். தினமும் ஒரு மணி நேரம் ஓடினார்.

அவரது அடிமனதில் ஓர் லட்சியக் கனல் கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருந்தது. அது அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடைபெறும் உலகக் காரோட்டச் சம்பியன் ஆகவேண்டுமென்பதேயாகும்.

விபத்து நடந்து ஆறுவாரங்கள் முடிவிட்டன. இத்தாலியில் மொன்ஸா பந்தய மைதானத்தில் நடைபெற்ற பந்தயத்தில் கலந்து கொண்டார். நிக்கி பலரும் வியக்கும் வகையில் வெற்றிவாகை சூடிச் சம்பியனானார். கூடியிருந்த மக்கள் பாராட்டி ஆரவாரம் செய்தார்கள். அவருடன் போட்டியில் பங்கு பற்றிய ஏனையோர் சிலர் முன்னைய விபத்தில் அடி காயங்களில் இருந்து தப்பி வந்தவர்கள். ஆனால் நிக்கியோ மரணத்தின் பிடியிலிருந்து மீண்டு வந்தவர்.

அடுத்து உலகச் சம்பியன் போட்டியில் பங்குபற்ற தன்னைத் தயார்ப்படுத்துவதில் மும்முரமாக ஈடுபட்டார். பன்னிரண்டு சிலிண்டர் 500 குதிரை வலுக் கொண்ட காரை ஜம்போ ஜெட் விமானத்தைப் போல மைதானத்தில் செலுத்திப் பயிற்சி பெற்றார். பல மேடு பள்ளங்களினூடாகவும் செலுத்திப் பயின்றார்.

பொதுவில் இறுதிப்பந்தயத்தில் மனிதரும், கார்களும் பரிசோதனைக்குள்ளாவது வழக்கம். பல நாடுகளிலும் இருந்தும் நடைபெற்ற பந்தயங்களில் தெரிவு செய்யப்பட்ட இருபத்தைந்து பேரளவில் உலகச் சம்பியன் பந்தயத்தில் பங்கேற்பர். சில வினாடிகள் இடைவெளிகளிலேயே வெற்றி தோல் சந்தர்ப்பங்களும் உண்டு. அவர்களில் முதல் ஆறு பேர்தான் வெற்றி பெறும் வாய்ப்பினை அடைவர். சம்பியன் பட்டம் பெற்றவருக்குக் கோடிக் கணக்கான ரூபாய்கள் பரிசாகக் கிடைக்கும்.

மணிக்குக் குறைந்தது 300 கி.மீ. வேகம் என்ற அடிப்படையில் பந்தயத்தில் காரை ஓட்டுவார்கள். அதில் ஒரு சிலர் விபத்துக்குள்ளாவர். சிலர் உயிரிழக்கும் சம்பவங்களும் நேருவதுண்டு.

அவ்விதம், ஒருதடவை பந்தயத்தில் மைதானத்திலேயே கார் விபத்தில் சிக்கி நால்வர் உயிரிழந்தனர்.

உலகச் சம்பியன் போட்டிக்கான நாளும் நெருங்கியது. கல்லோர் கணிப்பின்படி இங்கிலாந்தைச் சேர்ந்த ஜேம்ஸ் என்பவருக்கும் ஜப்பானிய வீரர் ஒருவருக்குமிடையிலேயே கடும் பலப்பரீட்சை நிலவும் எனக் கூறப்பட்டது.

இதற்கிடையில் தென் ஆபிரிக்காவில் நடைபெறவுள்ள கார்ப்பந்தயத்தில் நிக்கி கலந்து கொண்டுவிட்டு அங்கிருந்தே அடுத்தமாதம் நடைபெறவுள்ள உலகப் பந்தயத்திற்கு அமெரிக்கா செல்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

அவ்விதமே தென் ஆபிரிக்காவில் 1977இல் நடைபெற்ற கார்ப்பந்தயத்தில் வெற்றியை ஈட்டினார். அதனைத் தொடர்ந்து அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடைபெற்ற பந்தயத்தில் கலந்து கொண்ட நிக்கி உலக சம்பியன் விருதையும் கோடிக்கணக்கில் பரிசினையும் பெற்றார்.

யார் துணிச்சலும், விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும் உடையவராக இருக்கிறார்களோ அவர்கள் மரணத்தையும் ஏமாற்றிவிட்டு மீண்டும் வந்துவிடுவார்கள் என்பதற்கு அத்தாட்சி நிக்கி.



**தமிழில் - ஜெகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







**அஸ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

சுறுசுறுப்பானவர்களே! உங்களின் நிர்வாகத் திறன் கூடும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். பணவரவு உண்டு. பிள்ளைகளால் சற்று அந்தஸ்து உயரும். அடுக்கடுக்காக செலவுகள், ஒப்பேற்ற முடியாத அளவிற்கு வேலைச் சுமை, சில நேரங்களில் தூக்கமின்மை வந்து செல்லும். மனைவியுடன் சண்டை, சச்சரவு வரக்கூடும். கலைத்துறையினர்களே! உங்களின் திறமைகள் வெளிப்படும். பேராதரவு பெறும் வாரமிது.




**கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ஆம் பாதங்கள்**

உண்மை பேசுபவர்களே! மாணவர்களுக்கு உயர்கல்வியில் நாட்டம் கூடும். வேற்றுமதத்தவர் நண்பர்களாவார். கணவன் மனைவிக்குள் ஒற்றுமை அதிகரிக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு உண்டு. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் தேவையைப் புரிந்து கொள்வீர்கள். கலைத்துறையினர்களே! மூத்த கலைஞர்களின் வழிகாட்டல் மூலம் வெற்றியடைவீர்கள். சின்ன சின்ன ஆசைகள் நிறைவேறும் வாரமிது.




**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2, 3-ஆம் பாதங்கள்**

மென்மையானவர்களே! சவாலான விஷயங்களைக் கூட எளிதாக முடிப்பீர்கள். உங்களின் தனித்திறமை அனைத்திலும் பளிச்சிடும். உறவினர், நண்பர்கள் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். கலைத்துறையினர்களே! உங்களுக்கு பட்டிதொட்டியெங்கும் பாராட்டு கிடைக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி காணும் வாரமிது.




**புனர்பூசம் 4-ஆம் பாதம் , பூசம், ஆயில்யம்**

பரபரப்பானவர்களே! எதையும் சாதிக்கும் துணிச்சல் வரும். பழைய சகோதரர்கள் உங்களின் உண்மையான அன்பை, பாசத்தைப் புரிந்து கொள்வார்கள். கன்னிப் பெண்களே! பெற்றோரின் ஆலோசனையை ஏற்பது நல்லது. வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் வேலைச்சுமை இருந்தாலும் மேலதிகாரியின் அறிமுகம் கிடைக்கும். எதிர்ப்புகளை கடந்து சாதிக்கும் வாரமிது.




**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

சாதனையாளர்களே! உங்களின் ஆளுமைத் திறன் அதிகரிக்கும். பண பலம் உயரும். கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். உயர் கல்வி சம்பந்தப்பட்ட குழப்பங்கள் நீங்கும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் புது பொறுப்பை ஒப்படைப்பார்கள். உதாசீனப் படுத்திய நிறுவனமே உங்களை அழைத்துப் பேசும். திடீர் திருப்பங்கள் நிறைந்த வாரமிது.




**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள் அத்தம், சித்திரை 1, 2-ஆம் பாதங்கள்**

ஒற்றுமையுடனானவர்களே! துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். கணவன் மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. விவாதங்களை தவிர்ப்பது நல்லது. அரசியல்வாதிகளே! எந்த கோஷ்டியிலும் சேராமல் நடுநிலையாக இருக்கப் பாருங்கள். உயர்கல்வியில் ஆர்வம் பிறக்கும். உத்தியோகத்தில் ஒரே நேரத்தில் பல வேலைகளை பார்க்க வேண்டி வரும்.




**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள் சுவாதி, விசாகம் 1,2,3-ஆம் பாதங்கள்**

ஈரமான மனசுள்ளவர்களே! குருபகவான் வலுவாக அமர்ந்திருப்பதால் தொட்ட காரியம் துலங்கும். கல்வியாளர்கள், அறிஞர்களின் நட்பு கிடைக்கும். மனைவி வழியில் உங்கள் தேவையறிந்து உதவுவார்கள். வியாபார ரகசியங்களைப் பேணுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் சொந்த விஷயங்களை உங்களிடம் சொல்லி ஆறுதல் அடைவார்கள்.




**விசாகம் 4-ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

பொறுமைசாலிகளே! கணவன் மனைவிக்குள் ஈகோ பிரச்சினை தீரும். வெளியூர் பயணங்கள் உண்டு. அநாவசியப் பேச்சை தவிர்ப்பது நல்லது. அரசியல்வாதிகளே! தலைவருக்கு நெருக்கமாவீர்கள். நெடுங்காலம் பாடுபட்டும் உழைத்தும் எந்த பயனும் இல்லையே, என்று அவ்வப்போது ஆதங்கப்படுவீர்கள். கலைத்துறையினர்களே! புதுமையாக சில படைப்புகளை வெளியிட்டு அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.




**மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் பாதம்**

தாராள மனசுள்ளவர்களே! புதன் சாதகமான வீடுகளில் செல்வதால் பணவரவு அதிகரிக்கும். மனைவி வழியில் செல்வாக்குக் கூடும். பிள்ளைகளால் சமூக அந்தஸ்து உயரும். சிக்கனமாக இருக்க வேண்டுமென நினைத்தாலும் அத்தியாவசியச் செலவுகள் அதிகமாகும். சனி வலுவாக இருப்பதால் திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடி வரும். வியாபாரத்தில் புதுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவீர்கள்.




**உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள் , திருவோணம், அவிட்டம் 1,2-ஆம் பாதங்கள்**

கடின உழைப்பாளிகளே! சாதுரியமாகப் பேசி சில காரியங்களை சாதிப்பீர்கள். உங்களைப் புரிந்து கொள்ளாமல் விலகிச் சென்ற நண்பர்கள், உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள். முன்கோபம், வேலைச் சுமை, காரியத் தாமதம் வந்துசெல்லும். தடைப்பட்ட உயர்கல்வியை தொடர்வீர்கள்.




**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள் சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

சிந்தனையாளர்களே! புதனும், சுக்ரனும் சாதகமான நட்சத்திரங்களில் செல்வதால் உங்களின் புத்திசாலித்தனம் வெளிப்படும். பணவரவு திருப்தி தரும். வீண் விரையம், வேலைச்சுமை, திடீர் பயணங்கள் வந்துபோகும். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்.




**பூரட்டாதி 4-ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

கம்பீரமான பேச்சாளர்களே! சகோதர வகையில் ஒற்றுமை வலுக்கும். அறியாதவர்களிடம் அநாவசியப் பேச்சை தவிர்ப்பது நல்லது. இரவு நேரப் பயணங்களை தவிர்ப்பது நல்லது. உங்களின் புது முயற்சிகளை பெற்றோர் ஆதரிப்பர், பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் அதிகாரி மட்டத்தில் செல்வாக்கு கூடும்.

## பாபாவின் அருளுரையிலிருந்து...



உலோகங்களில் எல்லாம் உயர்ந்த தங்கத்தை, தீயில் போட்டு உருக்குகின்றனர். இதனை, தங்கத்தை வெறுப்பதற்காக தீயில் போடப்பட்டதாக சொல்லமுடியாது. அதை தீயில் இட்டால், அழுக்குகள் தானாக நீங்கிவிடும். அதைப்போலவே, மனிதர்கள் தங்களிடமுள்ள மன அழுக்குகளை நீக்கி, பரிசுத்தமானவர்களாக திகழவே கடவுள் துன்பங்களைக் கொடுக்கிறார். இதனைப் புரிந்து கொண்டு துன்பத்தை இன்பமாக ஏற்றுக் கொண்டு மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும். இத்தகையவர்கள், கடவுளுக்கு ஒப்பானவர்கள் ஆவர்.

★ ★ ★

காட்டில் இருக்கும் சிறிய விறகிற்கு தீ வைத்தால், விறகு மட்டும் எரிவதோடு நின்றுவிடாது. காட்டையே அழித்துவிட்டுத்தான் அணையும். அதுபோலவே, மனிதர்களின் மனதில் உண்டாகும் தீய எண்ணம் என்னும் தீயானது அவர்களை மட்டுமின்றி, அவர்களைச் சுற்றியுள்ளவர்களையும் அழித்துவிடும். ஆகவே, எண்ணங்கள் சுத்தமாக இருக்க வேண்டும்.

## தைப்பூசத் திருநாளும், சிறப்புகளும்!

(07.02.2012 - தைப்பூசம்)

முருகனுக்கு உகந்த நாள் தைப்பூச தினம். எனினும் அந்நாளில் முருகப்பெருமானுடன் சிவபெருமானையும் வழிபடும் சிறப்பு நாளாகக் கருதப்படுகின்றது.

ஆண்டு தோறும் தை மாதம் பௌர்ணமி தினத்தன்றோ அல்லது அந்த தினத்தை யொட்டியோ (ஓரிரு நாள் முன்பின்) வருகின்றது. இத் திருநாள் அனைத்து சிவன் கோயில்களிலும், முருகன் கோயில்களிலும் சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகின்றன.


### சிறப்பு

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையே ஏற்பட்ட போரில் தேவர்களால் அசுரர்களை அழிக்க முடியவில்லை. எனவே பல்வேறு இன்னல்கள் கொடுத்து வந்த அசுரர்களை அழிக்க வேண்டி சிவபெருமானிடம் தேவர்கள் முறையிட்டனர். தங்களால் அசுரர்களை அழிக்க முடியவில்லை. எனவே தங்களுக்கு தலைமை தாங்கிச் செல்லக்கூடிய ஆற்றல்வாய்ந்த, சக்தி மிக்க ஒரு தலைவனை உருவாக்க வேண்டும் என்று அவர்கள் சிவபெருமானிடம் வேண்டினர்.

தேவர்களின் முறையீட்டை ஏற்று தனது தனிப்பட்ட சக்தியால் உருவாக்கிய அவதாரமே முருகப்பெருமான்.

சிவபெருமானின் தேவியான அன்னை பார்வதி தேவி ஆண்டி கோலத்தில் பழனி மலையில் வீற்றிருக்கும் முருகப்பெருமானுக்கு ஞானவேல் வழங்கியது தைப்பூச நாளில் தான். அதன் காரணமாகவே பழனி மலையில் தைப்பூசத் திருவிழா மற்ற முருகன் கோயில்களைக் காட்டிலும் வெகுசிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அப்படி அளிக்கப்பட்ட வேலினை ஆயுதமாகக் கொண்டே முருகன் அசுர குலத்தை அழித்து தேவர்களைக் காப்பாற்றினார்.

## நமக்கு மேலே ஒருவன்



**யார் ஒருவன் தன்னை பலசாலி என்றும், புத்திசாலி என்றும் நினைத்துக் கொண்டிருக்கிறானோ, அவனுக்கு நிச்சயமாக ஒரு வீழ்ச்சி இருக்கிறது. ஏனென்றால், மனிதரில் பாயும் புலிகள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். பாய்கின்ற தூரத்தில் தான் வித்தியாசம்...**

ஒரு ஊரில் மகாபுத்திசாலியான திருடன். திருட்டில் எத்தனை டெக்னிக் உண்டோ, அத்தனையையும் பயன்படுத்தி, எவ்வளவு கவனமாக இருக்கும் ஆசாமியிடமும் திருடி விடுவான். போலீசிடம் சிக்காமலே காலத்தை கழித்துக் கொண்டிருந்தான்.

ஒருநாள், ஒரு சிறுவன் ஒரு கிணற்றுப்பக்கமாக நின்று அழுது கொண்டிருந்தான்.

அந்தப்பக்கமாக, திருடன் அன்று கொள்ளையடித்த பொருள் அடங்கிய மூட்டையுடன் வந்து கொண்டிருந்தான்.

அழுகிற பையனிடம்,

ஏண்டா அழுறே! என்னாச்சு, என்றான்.

அண்ணே! எங்கம்மா எங்கிட்ட ஒரு வெள்ளிச்செம்பைக் கொடுத்து பால் வாங்கிட்டு வரச்சொன்னாங்க.. நான் இந்த கிணற்றுச் சுவர் மேலே செம்பை வச்சுட்டு, இந்த மரத்திலே இருக்கிற மாங்காயைப் பறிக்க கல் வீசிட்டு இருந்தேன். திடீரென காத்தடிச்சுது. செம்பு கிணத்துக்குள்ளே விழுந்து மூழ்கிட்டுது. செம்பு இல்லாம போனா, எங்க அம்மா தோலை உரிச்சுடுவா, என்றான்.

திருடனுக்கு புத்தி எப்படி போகும்? ஆஹா...வெள்ளிச் செம்பாயிற்றே! அரைக் கிலோ நிறையாவது இருக்குமே! கிராம் 70 ரூபாய்க்கு விற்குதே! அதை எப்படியும் அபகரித்து விடுவதென முடிவுசெய்து, சரிப்பா! அழாதே. நான் கிணற்றுக்குள் போய் எடுத்துட்டு வந்துடறேன், என தான் கொண்டு வந்த மூட்டையை கிணற்றுச் சுவரில் வைத்துவிட்டு குதித்தான்.

உள்ளே எதுவும் சிக்கவில்லை. மேலே வந்தான். பையனையும் காணலே, தங்கநகைகள் கொண்ட மூட்டையையும் காணலே! புத்திசாலியான தன்னை ஏமாத்திப் புட்டானே ஒரு பொடிப்பயல், என நொந்தபடியே சென்றான்.

நாம் மட்டுமே புத்திசாலி என நினைத்துக் கொண்டு, பிறரை ஏமாற்றினால், நம்மை ஏமாற்ற இன்னொரு மகாபுத்திசாலி வருவான். புரிகிறதா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதலைக் கொள்ளி எறும்பின் நிலை!

ஜெகன்

> பொன்சேகா மனிதநேயத்திற்கு எதிரான பல குற்றச்செயல்களுக்குப் பாத்திரவாளியாக விளங்குகிறார். வெறுமனே யுத்தக்குற்ற மீறல்கள் மட்டுமன்றி கடத்தல், தாக்குதல், சித்திரவதைகள் மற்றும், ஊடகவியலாளர்களின் கொலைகள் எனப் பலதரப்பட்ட குற்றச் செயல்களின் கர்த்தாவாகக் காணப்படுகின்றார்.

சண்டேலீடர் பத்திரிகையில் இருந்து குருகுலசூரிய எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்.

**எதிர்** வரும் மார்ச் மாதத்தில் நடைபெறவிருக்கும் ஐக்கியநாடுகளின் மனித உரிமைகள் கூட்டத் தொடரிற்கு முன்பாக முன்னைய இராணுவத் தளபதியும் தற்பொழுது கைதியாகவும் உள்ள சரத்பொன்சேகாவுக்கு ஜனாதிபதியினால் மன்னிப்பு வழங்கப்படலாமெனப் ஊகங்கள் நிலவுகின்றன.

அவருக்கு மன்னிப்பு அளிக்கப்பட்டாலும் கூட அவர் வெளிநாட்டில் யுத்தக் குற்றங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும் எனத் தெரிகிறது.

எந்த வழியில் எப்படிப் பார்த்தாலும் அவரது நிலை இருதலைக்கொள்ளி எறும்பாகவே உள்ளது.

சரத்பொன்சேகா சட்டபூர்வமான ஓர் அமெரிக்க நிரந்தரப் பிரஜையாக உள்ளார். இவருக்கு அமெரிக்காவின் ஒக்லகொமா எனும் இடத்தில் சொத்துக்கள் உள்ளன.

15.01.2010 திகதியிடப்பட்ட அமெரிக்க இராஜாங்க செயலருடைய பொன்சேகாவின் யுத்தக் குற்றங்கள் தொடர்பான அறிக்கையின் மூலம் இது கசியவந்துள்ளது.

நாட்டில் நீண்ட காலமாக நிலவிய உள்நாட்டுப் போரின் இறுதியில் இரத்தக் கறை படிந்த யுத்த அத்துமீறல்கள் குறித்த அமெரிக்கத் தூதுவர் புட்டனிசின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தவற்றை இங்கு கவனிக்கவேண்டியுள்ளது.

எந்த ஒரு நாட்டிலும் ஆட்சி அதிகாரத்தில் உள்ள தரப்பு தனது சொந்தப் படையினர் மீதோ அன்றி உயர் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு எதிராகவோ அக்கால கட்டத்தில் நடைபெற்ற யுத்தக் குற்றங்கள் மனித உரிமை மீறல்களுக்கு விசாரணைகளை மேற்கொண்டதற்கான உதாரணங்கள் இல்லையென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிலும், சிறீலங்காவில் இது மேலும் சிக்கலாகவுள்ளது. ஏனெனில் யுத்தக் குற்றங்கள் பலத்துக்குமான பொறுப்பு நாட்டின் சிரேஷ்ட பிரஜைகள் மற்றும் படைத் தலைமைத்துவத்திலுள்ள ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரர்கள் மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா மீதுமே சார்ந்துள்ளது முக்கியமான அம்சமாகும்.

அமெரிக்கத் தூதுவரின் 02.11.2009 திகதிய இரகசியமான அந்தரங்க அறிக்கையின் பிரகாரம் ஹவாயில் நடைபெற்ற பாதுகாப்பு அதிகாரிகளின் மகாநாட்டில் சரத்பொன்சேகாவுக்கு விடுக்கப்பட்ட அழைப்பு அவரது யுத்தக் குற்றங்கள் மற்றும் மனிதஉரிமை மீறல்கள் காரணமாக இரத்துச் செய்யப்பட்டதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, அன்றைய வெளியுறவு அமைச்சரான போகொல்லாகம 04.11.2009 அமெரிக்கத் தூதுவருடன் தொடர்புகொண்டு ஒக்லகொமாவிலுள்ள அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சரத்பொன்சேகா விசாரணைக்கு அழைக்கப்பட்டமை குறித்தும் அத்துடன் கவாய் மகாநாட்டிற்கான அழைப்பினை இரத்துச் செய்தமை குறித்தும் அறிக்கையினைக் கோரியிருந்தார் என்பதும் தெரிய வந்துள்ளது.

மேலும் பாதுகாப்புச் செயலரும் ஜனாதிபதியின் சகோதரரும் அமெரிக்கப் பிரஜாவுரிமையை உடையவருமான கோத்தபாய ராஜபக்ச குறித்த தகவல்களை அறியும் பொருட்டே அவ்வழைப்பினை விடுத்ததாகவும் கருதப்பட்டது. அத்துடன் அவ்வாறு உத்தியோக பூர்வமான தகவல்களைப் பெறுவதற்காக பொன்சேகாவை விசாரிப்பது சிறீலங்கா அரசுக்கு வெறுப்பூட்டும் செயல் எனவும், இதனால் இருநாடுகளுக்குமிடையிலான உறவுகள் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

சிறீலங்கா அரசாங்கம் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பிய அரச உயர் அதிகாரிகளின் குறிப்புப்பட்டியலில் பாதுகாப்புத் தலைமைப் பதவியின் கீழ் உள்ள உயர் அதிகாரிகள் யாவரும் உயர்மட்ட நிலையில் உள்ளவர்கள் எனவும் சரத்பொன்சேகா அமெரிக்காவுக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை இராஜதந்திரிகளுக்கான கடவுச் சீட்டு மூலமே மேற்கொண்டார் எனவும் சரத்பொன்சேகா தனது சேவையின் நிமித்தமும் கடமைகளின் நிமித்தமும் சிறீலங்கா அரசின் தனிச் சலுகை பெற்றவர் எனவும் தெரிவித்தது. ஆனால், அவர் மூன்றாந் தரப்பிற்கு அரசின் அனுமதியின்றி இரகசியங்களை வெளிப்படுத்த அதிகாரம் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்காவில் உள்ள பத்திரிகையாளரான டொனால்ட் ருாணக்கோன் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய ஒவ்வொரு அமெரிக்கப் பிரஜாவுரிமையுடையவர்களிடமும் அவை குறித்த ஆதாரங்கள், உண்மைகள் தகவல்களை பெறவேண்டும் எனவும், அவ்வகையில் சரத்பொன்சேகாவும் ஓர் நிரந்தர அமெரிக்கப் பிரஜை யாதலால் அவரை நிச்சயமாக விசாரிக்க வேண்டுமெனவும் அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களத்தைக் கோரியுள்ளார். நீதி கிடைக்க வேண்டும் அதுவே முக்கியமானது எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், யுத்தக் குற்றங்கள் மனித உரிமை மீறல்களின் குற்றவாளிகள் நீதியின் முன் கொண்டு வரப்படும் வரையில் நாங்கள் ஓயமாட்டோம். இப்போது இறுதிப் போர் முடிவடைந்து மூன்றாவது ஆண்டாகின்றது. அமெரிக்காவும் இவ் விடயத்தில் தனது காலடியைப் பதிப்பதில் குற்ற மனப்பான்மையுடன் இழுத்தடிக்கின்றது. ஆயினும் புலம்பெயர்தமிழர் நீதிகிடைக்கும் வரையில் ஓயமாட்டார்கள் எனவும் அவர் கூறியுள்ளார்,

பொன்சேகா மனித நேயத்திற்கு எதிரான பல குற்றச் செயல்களுக்குப் பாத்திரவாளியாக விளங்குகிறார், வெறுமனே யுத்தக்குற்ற மீறல்கள் மட்டுமன்றி கடத்தல், தாக்குதல், சித்திரவதைகள் மற்றும் ஊடகவியலாளர்களின் கொலைகள் எனப்பல தரப்பட்ட குற்றச் செயல்களின் கர்த்தாவாக குற்றம் சுமத்தப்பட்டுகின்றார்.

ஊடகவியலாளரான லசந்த விக்கிரமதுங்கவின் கொலையிலும் அவர் மீதே பழி சுமத்தப்பட்டுள்ளது. எது எவ்வாறாயினும் லசந்தவின் கொலை சரத்பொன்சேகாவின் செயற்பாடாக மாத்திரம் இருந்திருக்க முடியாது. அதன் பின்னணியில் சிலர் உள்ளனர் என்பது வெள்ளிடை மலை. அவர் ஓர் பிரபல்யமான பெரும்பான்மை இன ஊடகவியலாளர் - அவரது கொலைக்கு அரச தரப்பின் அங்கீகாரம் இருந் திருக்கக்கூடும் என முன்னர் ஒரு சமயம் பாராளுமன்றில் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா கூறியுள்ளமை இங்கு நினைவு கூரத்தக்கது.

சிறீலங்காவின் பெரும்பாலான மக்களும் அத்துடன் வேறெங்கிலுமுள்ள மக்கள் அனைவரும் சிறீலங்கா இராணுவ நடவடிக்கைகளும் மனித உரிமைச் செயற்பாடுகளும் ஒத்திசைவற்ற போக்கினையே கொண்டுள்ளதாக மேலெழுந்த வாரியாகக் கருதுகின்றனர்.

2008 இல் எல்.ரீ.ரீ யினரை விமர்சிப்பவரான டாக்டர் ராஜன் கூல் தனது அதிகாரத்தின் திமிர் எனும் நூலில் 1990களில் மக்கள் இராணுவத்தினரைப் பருந்துகள் போலவே கருதினர் என விபரிக்கின்றார்.

மேலும் 1990களில் கட்டளைத் தளபதி கொப்பேக்கடுவ தலைமையின் கீழான காலப்பகுதியில் ஜெனரல் சரத்பொன்சேகா கல்முனை, அக்கரைப்பற்று மற்றும் அதனைச் சுற்றிவரவுள்ள பகுதிகளில் புரிந்த அட்டூழியங்கள் கணக்கிலடங்கா.

அதுமட்டுமன்றி, பல்கலைக்கழக ஆசிரியர்கள் 1991 பங்குனி மாதத்தில் வெளியிட்ட மனித உரிமைகள் அறிக்கை இலக்கம் 7 இலும் இராணுவ அதிகாரிகள் கிழக்கில் புரிந்த அட்டூழியங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதில் 1990 தொடக்கம் கிழக்கு மாகாணத்தில் தமிழ் குடிமக்கள் இராணுவத்தின் மோசமான நடவடிக்கைகளினால் எவ்விதம் பாதிக்கப்பட்டனர் என விபரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கல்முனைப் பகுதிக்கு அனுப்பப்பட்ட படையணியினர் மனம் போன போக்கில் பரவலாகச் சித்திரவதைகளில் ஈடுபட்டனர். பலர் அச்சமயத்தில் கொல்லப்பட்டும், காயமடைந்தும் உள்ளனர். இவை யாவும் மக்களிடையே படைத்தரப்பினர் மீது வெறுப்பான அபிப்பிராயத்தையே ஏற்படுத்தியது.

அதேவேளையில் 2003ல் தமது நூலில், கிழக்கில் கேர்ணல் எச்.கலாங்கொட, களுவாஞ்சிக்குடியிலும் கேர்ணல் பேர்சி பெர்னாண்டோ போன்ற நற்குணமுடைய இராணுவ அதிகாரிகள் பணியாற்றியமையையும் குறிப்பிடுகின்றார்.

1990களின் இறுதியில் சரத்பொன்சேகா யாழ்ப்பாணத்திலிருந்து வந்து ஜனகப்பெரேராவுடன் இணைந்து கொண்டார். தொடர்ந்தும் இனஒழிப்பு அடக்கு முறைகளில் காத்திரமான பங்களிப்பினை வழங்கினார்.

இதேவேளையில் கொழும்பு ஏ.எப்.பி செய்தி ஸ்தாபன முக்கியஸ்தரும் ஊடகவியலாளருமான நாமல் பெரேராவின் நண்பர் அமல் ஜயசிங்கவின் கருத்தினையும் இங்கு குறிப்பிடுதல் சாலப்பொருத்தமானதாகும்.

அதாவது நாமல்பெரேரா கொழும்பிலுள்ள இராணுவ முகாம் ஒன்றில் அருகில் வைத்துக் கடத்தப்பட்டு படுமோசமாகத் தாக்கப்பட்டார். அவர் சரத்பொன்சேகா கைது செய்யப்பட்ட வழக்கில் அரசினால் 30 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு சிறையிலடைக்கப்பட்டதன் பின்னரே மனம் ஆறித் திருப்தியடைந்தார். நாமல் ஓர் சிங்களவர். அவரது மனோநிலையே இவ்வாறாயின், பாதிப்படைந்த தமிழர்களின் மனநிலை எவ்வாறிருக்கும் என்பதை இலகுவில் புரிந்து கொள்ளலாம்.

அமெரிக்காவின் ருலாறுஸ் பல்கலைக்கழகத்தின் சட்ட மாணவரும் தமிழர் இனப்படுகொலைக்கு எதிரான செயற்பாட்டாளருமான ரஜீவ் சிறீதரன் தாம் சரத்பொன்சேகா மீதான சகல குற்றங்களுக்கும் வலுவான ஆதாரங்களையும் சாட்சியங்களுடன் நிரூபிக்கும் தருணத்தை ஏற்படுத்துவதில் அயராது ஈடுபட்டுள்ளதாகவும் நிச்சயம் அது நிறைவேறும் காலம் வெகுதூரத்தில் இல்லையெனவும் தெரிவித்துள்ளார்.

எது எப்படியிருப்பினும் சரத்பொன்சேகாவின் நிலை இருதலைக் கொள்ளி எறும்பு போன்றதாகவே இருக்கின்றது.

இவற்றிற்கெல்லாம் அப்பால் சமாதானத்தின் பெயரால் அரசால் நாட்டில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் யுத்தக் குற்றங்கள் நாட்டின் சமாதானத்தை வெகு தொலைவுக்குள்ளாக்கியுள்ளது. அன்றியும் தொடர்ந்தும் சமாதானத் தீர்வினை இழுத்தடிப்பதனால் சகல இன மக்களிடையேயான மீள் நல்லிணக் கமும் இழுத்தடிக்கவேபடுகின்றது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவும் உருவும்

அரியாலையூர் நீ. செ. செல்லப்பா



சில உண்மைச்சம்பவங்கள் கற்பனை செய்து பார்க்க இயலாத அளவு நடைபெற்று விடும். அநேகமான கற்பனைக் கதைகளுக்கு நிஜத்தில் நிகழ்ந்த சம்பவமே கருவாக அமைவதும் கண்கூடு. கருவின்றி உருவில்லைத் தானே!

ஐந்து தலைமுறையாக சித்த மருத்துவத்தில் ஈடுபட்டு வந்த பரம்பரை வைத்தியர் அவர். ஏட்டைப்புரட்டி அதிலுள்ள வாகடங்களைப் படித்து வெற்றிகரமாக வைத்தியத் தொழிலில் ஈடுபட்டவர். தொடர்ந்தும் ஏடும் ஆராய்ச்சியுமாக அவரது வைத்திய வாழ்வு.

ஒரு நாள் தனது மகனுடன் காரில் பயணித்துக் கொண்டிருந்தார். தெரு ஓரத்தை நோட்டமிட்டவாறே அவர்கள் பயணம் தொடர்ந்தது. திடீரெனக் காரை நிறுத்தி பின்னோக்கி வந்தார். ஒரு காணியுள் ஒரு வகைத் தாவர மூலிகை நிறைய வளர்ந்திருந்தன. முன்னர் அதே இடத்தில் அந்த வகை மூலிகை அவ்வளவு தொகையாகக் காணப்படவில்லை.

தனது மகனிடம் இந்த மூலிகை இன்ன வருத்தத்திற்குப் பயன்படுத்தப்படுகின்ற மூலிகை. முன்னைப்போதையும் விட இவ்வருடம் இது அதிகரித்தளவு பல இடங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றது. குறிப்பிட்ட நோயால் இவ்வாண்டு பெருமளவு மக்கள் பாதிக்கப்படப் போகிறார்கள் பார் என்று வைத்தியத் தந்தை குறிப்பிட்டார். மகனின் ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. அவ்வாண்டு பெருமளவு மக்கள் அந்நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்கு வந்தனர். அந்த மூலிகை பெருமளவு பயன் படுத்தப்பட்டு நோயாளிகள் சுகம் ஆக்கப் பட்டனர். இதனை அந்த வைத்தியரின் மகன் கூறிய போது, கூறியவரின் மெய் சிலிர்த்ததோடல்லாமல் கேட்டுக்கொண்டிருந்த எம்மையும் சிலிர்க்க வைத்தது.

இதே போன்று ஒரு நாள் கர்ப்பிணிப்பெண் நோயாளர் ஒருவர் அவரது சிகிச்சை நிலையத்தின் முன்புறமாக காரில் வந்து இறங்கினார்.

இரு பக்கமும் இருவர் தாங்கிப் பிடித்த வண்ணம் அவரை வைத்தியரின் அறைக்கு அழைத்து வந்தனர். அப்பக்கத்தால் சென்ற தமது மகனையும் அழைத்து தன்னருகில் அமர்த்தினார் வைத்தியர். வருகை தந்த நோயாளியும் அமர வைக்கப்பட்டார்.

என்ன செய்யுது? என்ன பிரச்சினை என்று வைத்தியர் கேட்பாரென வைத்தியரின் மகன் எதிர்பார்த்தார்.

ஆனால் வைத்தியர் கேட்ட கேள்வியும் நோயாளி அளித்த பதிலும் வைத்தியரின் மகனை அப்படியே ஆச்சரியப்பட வைத்தது.

வைத்தியர் அக்கர்ப்பிணி நோயாளியைப் பார்த்துக் கேட்ட கேள்வி "நேற்று மாலை எத்தனை உழுந்து வடை சாப்பிட்டீங்கள்?" என்பது தான்.

பதில் அப்பெண்ணிடமிருந்து "மூன்று வடைகள்" என வந்தன.

வைத்தியர் மேலும் ஒன்றும் கேட்கவில்லை மளமளவென்று தொழிற்படத் தொடங்கினார்.

ஒரு போத்தலிருந்து குன்றுமணியளவிலான மிளகு போன்ற சிறு குளிசைகள், இன்னொரு போத்தலிருந்து அதேபோன்று வேறு குளிசைகள் தனித்தனியாக சரையாகக் கட்டி வழங்கினார். ஒவ்வொன்றிலும் காலை எத்தனை, மத்தியானம் எத்தனை, மாலை எத்தனை என்பது கூறிச் சரையைக் கையளித்தார். என்ன உணவு தவிர்க்கப்பட வேண்டும், குளிசைகளை எதனத்தில் உரைத்து உள் எடுக்க வேண்டும் என்பவற்றையும் சொல்லத்தவறவில்லை.

ஆனாலும் வந்தவர்களுக்கு தம் வருத்தம் என்ன என்று கேட்காமையாலும் கை நாடி பிடித்துப் பார்த்து வைத்தியம் செய்யாததும் திருப்தியில்லை. ஏதோ வேதனையை முறைப்பாடு செய்ய வாயை உன்ன இன்றைக்கு மூன்றுவேளை, நாளைக்கு மூன்றுவேளை மருந்தைச் சாப்பிட்டுவிட்டு வந்து ஏதும் வருத்தம் இருக்குமாயின் கூறுங்கள் என்று கூறி அனுப்பிவிட்டார்.

மகன் தந்தையிடம் அவர்கள் "கூற வந்ததை ஏன் கேட்காமல் விட்டீர்கள்" என்று தமது சந்தேகத்தை வினவினார். "என்ன நோயாக இருக்கலாம் என்றுதானே இன்னது சாப்பிட்டீங்களா என்று கேட்டேன். அதனுடன் அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும் இன்ன நோய்தான் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக. பேந்தேன் நீளக்கதை" என்று வைத்தியர் கூறினார். அதன் பின்னரே மகனுக்கே தனது தந்தை நோயை இனங்கண்டு அதனை உறுதிப்படுத்துவதற்கே ஒரு வினாவும் வினவி, சிகிச்சையைத் தொடங்கியதும் உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. தனது தந்தை மீது கொண்ட உயர்ந்த நன் மதிப்பு அவனுள்ளத்தில் இமய மலையாக உயர்ந்தது.

வைத்தியர் தனது கருமமே கண்ணாயினார். ஒரு கண்ணால் ஏட்டினை வாசித்து மறுகண்ணால் வலது புறம் வைக்கப்பட்டிருந்த தாளில் ஏதோ மளமள வெனக் குறிப்பெடுக்கத் தொடங்கினார்.

இரண்டு கண்களும் வெவ்வேறு தொழில் புரிய, ஒன்று வாசிக்க மற்றையது எழுதத் துணைநிற்க இரண்டு கைகளும் ஒன்று ஏட்டைப்புரட்ட மற்றையது எழுதியது.

இதேபோன்று இன்னுமொரு நாள் ஒரு இளம் தம்பதி இரண்டு வயதுக்குழந்தை ஒன்று நடந்துவர அப்பெண் வயிற்றிலும் ஒன்றைச் சுமந்துவர, சிகிச்சை நிலையத்தில் அமர வைக்கப்பட்டனர் அவர்களை முன்பின் வைத்தியருக் கோ குடும்பத்தினருக்கோ தெரியாது. வழமைபோல் தனது மகனையும் அழைத்து அங்கு அமரவைத்தார் வைத்தியர்.

கையில் ஒரு கொப்பியையும் பேனாவையும் எடுத்து மேசையில் வைத்து சாவகாசமாக கதைக்கத் தொடங்கினார் வைத்தியர். அழைத்து வந்த சின்னப்பிள்ளையின் பெயர், பிறந்த திகதி, நட்சத்திரம் என தேவையற்ற வினாக்களை வினவிக் குறித்துக் கொண்டார்.

பின்னர் அத்தம்பதியினரிடம் "டைரி பேணுகின்ற, குறிப்பிட்ட சம்பவங்களைக் குறித்துக் கொள்கின்ற வழக்கம் உள்ளதா" எனக் கேட்டார்.

அவர்களும் தாம் டைரி எழுதுவதை வழமையாகக் கொண்டதாகத் தெரிவித்தனர்.

மூத்த பெண் பிள்ளையின் பெயர், நட்சத்திரம், பிறந்த திகதி போன்றவற்றைக் குறித்துக் கொண்டதுபோல, அக்கர்ப்பிணிப் பெண்ணிடம் கடைசியாக மாதவிடாய் வந்த நாள் எது என்று கேட்டு அதனையும் குறித்துக் கொண்டார்.

பின்னர் தான் குறித்துக்கொண்டவற்றுள் உலா வந்தார். அப்படியும் இப்படியும் ஏதோ மனதுள் அசைபோட்டார். பின்னர் அவர்கள் இன்ன திகதியில் குடும்பமாக ஒன்று சேர்ந்ததாகவும், அதனால் உருவாகிய கருவில் உதித்த பிள்ளை ஆண் எனவும் இன்ன திகதியில் ஜனனம் நிகழும் எனவும் கூறி "சரியோ பிள்ளை" என்று கேட்டார்.

கேட்டதுதான் தான் தாமதம் அப்பெண் சாஷ்டாங்கமாக வைத்தியரின் பாதார விந்தத்தில் வீழ்ந்து அவரின் பாதங்களை தன் கண்களில் ஒற்றிக்கொண்டார்.

அவளின் கணவனின் கண்களிலும் கண்ணீர்த்துளிகள் காணப்பட்டன. ஒரு சில நிமிட அமைதி. அமைதியைக் குலைத்து தனது தணிவான குரலில் "ஏன் பிள்ளை யள்... என்ன பிரச்சினை?" என்றார்.

அவளின் கண்களில் கண்ணீர் பொல பொல என பிரவாகம் எடுத்ததுபோல அவளது வாயிலிருந்தும் வார்த்தைகள் பொங்கி வழிந்தன.

"இவர் வெளிநாட்டில் வேலை பார்க்கிறார். நீண்டகாலமாக நாட்டிற்கு வரவில்லை. ஒருமுறை வந்து கொழும்பில் நின்றார். பிள்ளையையும் கூட்டிக்கொண்டு கொழும்புக்கு வரச் சொன்னார். கடுமையான சண்டை நடந்து கொண்டிருந்தது. பிள்ளையோடை கப்பலிலை பிரயாணம் செய்ய ஏலாது அதோடை கிளியரன்ஸ்பாஸ் உடம் கிடைக்கேல்லை .... நாளும் கழிஞ்சுகொண்டு இருந்தது. அவருடைய பிளைற் நாளும் நெருங்கிக் கொண்டு வந்தது ...திரும்பிப் போற நாளுக்கு முதல் நாள் ... அதிஷ்டவசமாக யாழ்ப்பாணம் வாற விமானத்தில் இவருக்கு இடம் கிடைத்தது. அன்று வந்து அடுத்த நாள் திரும்பவும் விமானத்திலை கொழும்பு போய் மறு நாள் வெளிநாடு போய்விட்டார்... அந்த ஒரு நாள் அதுதான் நீங்கள் குறித்துக் காட்டிய திகதி இரவை இவற்ற உறவினர் ...நண்பர்கள் .....ஒரு நாள் நாட்டிலை நின்றால் பிள்ளை கிடைக்குமோ ... என்டு கேலி செய்துட்டினம். இவருக்கும் சந்தேகம் ... இப்ப திடீரென வெளிநாட்டால வந்து, அவர் தான் இராமசாமிப் பரியாரி என்று ஒருத்தர் இருக்கிறார் ....அவரிட்டைக் காட்டவேணும் என்டு கூட்டி வந்தார் ... ஐயா ..... உங்களை எனக்கு இதுக்கு முந்தித்தெரியாது. கண்டதும் இல்லை .. கேட்டதுமில்லை நீங்கள் கடவுள்....." வார்த்தைகள் வரவில்லை. கண்ணீர் வந்து கொண்டே இருந்தது.

---

நெதர்லாந்தின் தலைநகர் அம்ஸ்ரடாமில் Kinderkookkafe என்ற குடும்ப உணவகம் ஒன்று உள்ளது.



இந்த உணவகத்தின் சிறப்பம்சம் என்னவென்றால் இது முழுக்க முழுக்க குழந்தைப்பிள்ளைகளால் நடாத்தப்படுகின்றமைதான். உணவைச் சமைத்தல், பரிமாறுவது, துப்பரவாக்குவது, பில் போடுவது என்று எல்லாமே குழந்தைப் பிள்ளைகளால் தான் மேற்கொள்ளப்படுகின்றது.

ஆனால் இங்கு தயாரிக்கப்படும் உணவு வகைகள் அடங்கிய மெனு எளிதாக தயாரிக்கும் வகையில் அமைந்துள்ளது. நல்ல ஆரோக்கியமான உணவுகள் மிகக் குறைந்த விலையில் வழங்கப் படுகின்றன. இந்த உணவகத்தை மேற்பார்வை செய்து சிறிய வழிகாட்டல்களை மேற்கொள்வதற்காக இரண்டு பெரியவர்கள் இருக்கின்றார்கள். பாடசாலை முடிந்ததும் குழந்தைகளை பெற்றோர்கள் இந்த உணவகத்தில் கொண்டுவந்து இறக்கி விடுகின்றனர்.

அவர்கள் இந்த வயதிலேயே உணவு தயாரித்தல், பொறுமையாகப் பரிமாறுதல் போன்றவற்றை பழக வேண்டும் எனப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.



## சிறுவர்கள் நடத்தும் உணவகம்

இங்குள்ள விசேடம் என்னவென்றால் குழந்தைகள் தாங்கள் சமைத்த உணவுகளை பெற்றோர்களுடன் பகிர்ந்து உண்பது தான்.

இப்படியாக உணவு தயாரிப்புக்களைப் பழகுவதால் இவர்களின் எதிர்காலம் சிறப்பாக இருக்கும் என்று பெற்றோர்கள் நினைக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கருக்கலைப்பு

# சரியான சில தவறுகள்!

"உங்கள் மகள் கர்ப்பமாயிருக்கிறாள். இது பதினோரா வது வாரம்" சொன்ன டொக்டரைப் பார்த்து கோபத்து டன் கேட்டாள் தாய் "உங்களுக்கென்ன பைத்தியமா, அவள் பத்து வயசு குழந்தை"

"ஏனம்மா நான் பைத்தியமில்லை. உங்க மகள். கர்ப்பமாயிருக்கிறாள். ஆகவேண்டியதைப் பாருங்கள்" ஏக கடுப்பில் சொல்லிவிட்டுக் கிளம்பினார் டொக்டர்.

அந்தத் தாயோ நிலை குலைந்து போய் தரையில் அமர்ந்தாள். அருகில் மகள். துருதுரு பார்வை. கொழு கொழு கன்னம். கொஞ்சமும் மாறாத மழலைச் சிரிப்பு. வயிற்று வலி என மருத்துவமனை வந்தவர்கள் இப்படி ஒரு அதிர்ச்சியை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

விசாரித்த போது தான் விசயம் தெரியவந்தது. சிறுமி யைக் கொஞ்சிக் கொண்டிருக்கும் மாமன்காரன் வில்ல னாகிப் போன கொடுமை. தன் சகோதரனே கொடுமைக் காரனாகி விட்டானே எனும் அதிர்ச்சி ஒருபுறம். மகளின் துயரம் மறுபுறம் என கலங்கிப் போனாள் தாய். எப்படியா வது உடனடியாக கர்ப்பத்தைக் கலைக்க வேண்டும் என முயன்ற போது தான் வந்தது அடுத்த அதிர்ச்சி.

அவர்கள் வசித்து வந்த ரொமானியாவில் 14 வாரங் கள் தாண்டிவிட்டால் கருக்கலைப்பு செய்வது சட்ட விரோதம்! என்ன செய்வது? எப்படியாவது கருவைக் கலைத்தேயாக வேண்டும் என்பதில் தாய்க்கும் மகளுக் கும் மாற்றுக் கருத்து இருக்கவில்லை. கடைசியில் விச யம் பத்திரிகைக்கு வர, உதவிக்கு வந்தாள் ஒரு பெண் மணி.

சில பல இன்னல்களுக்குப் பின், ரொமானியாவிலி ருந்து லண்டனுக்குப் பறந்து, லண்டனிலுள்ள கிங்ஸ் மருத்துவமனையில் சிறுமியின் கரு கலைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சி உலகம் முழுவதும் பல்வேறுவித மான விவாதங்களை உருவாக்கியது. கருக்கலைப்பு சரியா? தவறா? ஒட்டு மொத்தமாக இதைத் தடுப்பது நியாயமா? எனும் விவாதங்களுக்கு எண்ணெய் ஊற்றியது இந்த நிகழ்ச்சி.

கருக்கலைப்பு என்றாலே ஏதோ தகாத உறவினால் உருவான குழந்தையைக் கலைக்கிறார்கள் எனும் எண் ணம் தான் பெருமளவானோருக்கு. உண்மையில் கருக் கலைப்புக்கு நிறைய காரணங்கள் இருக்கின்றன. முதலில் வருவது மருத்துவக் காரணங்கள். கருவிலிருக் கும் குழந்தைக்கு உடல் ஊனம் ஏதேனும் இருக்கிறதா என்பதை மூன்றாவது மாதத்தில் எடுக்கும் ஸ்கேன் வெளிப்படுத்தி விடுகிறது. குழந்தை பிறந்த பின் நிரந்தர ஊனமாய் இருந்தால் எந்த அன்னையால் தான் தாங்கிக் கொள்ள முடியும். இத்தகைய சிக்கல்களைக் கண்டறிவது தானே ஸ்கேனின் முக்கிய நோக்கமே!

சிலருக்கு பிரசவம் நடந்தால் உயிருக்கே ஆபத்து



எனும் மருத்துவ நிலை இருக்கும். சிலர் பாலியல் பலாத்காரத்தின் விளைவாகக் கர்ப்ப மடைந்திருப்பார்கள். இவர்களின் நிலைதான் என்ன? இவையெல்லாம் எழுப் பப்படும் கேள்விகளில் சில.

பல நாடுகள் இத்தகைய பிரச்சினைகளை ஆழமாய் அலசி ஆராய்ந்து கருக்கலைப்புக்கான சட்டங்களை வகுத்திருக்கின்றன. பிரேசில் நாட்டில் கருக்கலைப்பு சட்டவிரோதம். ஆனால் பாலியல் வன்முறையினாலோ, பெண்ணின் உயிருக்கு ஆபத்து இருந்தாலோ கருக் கலைப்பு செய்து கொள்ளச் சட்டம் அனுமதிக்கிறது.

பெரும்பாலும் மதங்களின் அடிப்படையிலான அரசு களே கருக்கலைப்புகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் நிலையில் இருக்கின்றன. மதநம்பிக்கைகளை மறுதலிக்காமல் இருப்பதில் தவறில்லை. அதே நேரம் அரசுகள் மக்களைக் காப்பதிலும் கவனம் செலுத்தி யாக வேண்டுமல்லவா?

பொதுமக்களைப் பொறுத்தவரை கருக்கலைப்புக்கு ஆதரவும் எதிர்ப்பும் கலந்தே இருக்கிறது. ஆனால் தவிர்க்க முடியாத காரணங்களுக்காக கருக்கலைப்பு செய்து கொள்வதை பெரும்பாலான மக்கள் ஆதரிக் கின்றனர்.

2005ம் ஆண்டு பத்து ஐரோப்பிய நாடுகளில் விரி வான கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. பெண்கள் கருக்கலைப்பு செய்ய முடிவெடுக்கலாமா என்பது தான் கேள்வி. அதிகபட்சமாக கிரச் ரிப்பப்ளிக் பிரதேசத்தில் 81 சதவீதமும், குறைந்த பட்சமாக போலந்து நாட்டில் 47 சதவீதம் மக்களும் வாக்களித்தனர்.

அமெரிக்காவில் வாழும் கனடா மக்களிடையே டிசம்பர் 2001ல் ஒரு கருத்துக் கணிப்பு நடத்தப் பட்டது. 88 சதவீதம் பேர் தகுந்த காரணங்களுக்காக கருக் கலைப்பு செய்யும் முடிவெடுக் கும் உரிமையை பெண்களிடம் விட்டு விடவேண்டும் என கருத்து சொன்னார்கள். சமீபத்தில் வெளி யான இன்னொரு கருத்துக் கணிப்பும் கருக்கலைப்புக்கு ஆதரவாகவே இருந்தது. பெண் கள் கருக்கலைப்பு செய்யவே கூடாது என குரல் கொடுத் தவர் கள் வெறும் 16 விழுக்காடு மட் டுமே.

வட அமெரிக்கா மட்டு மன்றி, தென் அமெரிக்காவின் ஆர்ஜென்டினாவில் 2003ல் நடத்தப்பட்ட கருத்துக் கணிப் பிலும் 77 சதவீதம் பேர் கருக் கலைப்பை எதிர்க்கவில்லை. தவிர்க்க முடியாத சூழ்நிலை களில் பெண்களுக்கு கருக்கலைப்பு செய்ய உரிமை வழங்கப்பட வேண்டும் என்றே வலியு றுத்தினர்.

இப்படி கருத்துக் கணிப்புகள் ஆதரவு நிலைப் பாடைக் காட்டினாலும் பல நாடுகள் அதையெல்லாம் சட்டை செய்வதில்லை. அபோர்சனை மருந்துக்குக் கூட ஒத்துக் கொள்ளாத நாடுகள் பல இருக்கின்றன. சிலி, எல்சால்வடார், மெல்ட்டா, வாடிகன் சிட்டி மற்றும் நிக்குராக்வா போன்றவையே அவற்றில் சில.

நிக்குராக்வா நாட்டின் நிலமை படு மோசம். மருத் துவக் காரணங்களுக்காக கருக்கலைப்பு செய்து கொள் ளலாம் எனும் சட்டம் 2006 வரை இருந்தது. மூன்று டொக்டர்கள் சான்றளிக்க வேண்டும் என்பது மட்டுமே சொல்லப்பட்டிருந்த நிபந்தனை. 2006 நவம்பர் மாதம் அதைத் திருத்தி, கருக்கலைப்பு கூடவே கூடாது என எழுதினார்கள்.

இதன் விளைவு மகா கொடுமையானது. 11 மாதங் களில் சுமார் 80க்கும் மேற்பட்ட பெண்கள் பிரசவத்தில் இறந்து போனார்கள். அதிர்ந்து போன மனித உரிமை கள் சங்கம் இப்போது இந்தப் பிரச்சினையை கையி லெடுத்துக் கொண்டு களத்தில் குதித்திருக்கிறது.

எகிப்து, ஈரான், ஈராக், ஜப்பான், குவைத், சவுதி அரேபியா, துருக்கி, இஸ்ரேல் உட்பட பல நாடுகளில் கருக்கலைப்புக்குத் தடையில்லை. ஆனால் கருக் கலைப்பு கணவனின் அனுமதியுடன் தான் நடக்க வேண்டும் என்கிறது சட்டம். இதைப் பெரும்பாலான பெண்கள் அமைப்புகள் எதிர்க்கின்றன.

கொலம்பியாவிலும் கருக்கலைப்பு சட்ட விரோதம். அங்கே ஊறியிருக்கும் மத நம்பிக்கைகளின் காரண மாக மக்களிடையேயும் அதே சிந்தனையே. எக்கார ணம் கொண்டும் கருக்கலைப்பு செய்யக் கூடாது எனும் சட்டத்தை 66 சதவீதம் பேர் ஆதரிக்கின்றனர்.


அயர்லாந்து நாட்டிலுள்ள கருக்கலைப்புச் சட்டம் ஒரே ஒரு நிபந்தனையைக் கொண்டிருக்கிறது. அதா வது பெண்ணின் உயிருக்கு ஆபத்து என்றால் மட்டுமே கருக்கலைப்பு. இல்லையேல் கூடாது. குழந்தை ஊன மாய்ப் பிறக்கும், பலாத்காரம் செய்யப்பட்டேன், தவறு செய்துவிட்டேன் என்றெல்லாம் காரணம் சொல்ல முடி யாது.

இந்தியாவைப் பொறுத்தவரை இந்த விசயத்தில் அதிக சிக்கல் இல்லை. 1971 முதல் கருக்கலைப்புச் சட்டரீதியாக ஒத்துக் கொள்ளப்பட்டது. மக்கள் தொகை யைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காக இது சட்ட மாக்கப்பட்டது. இந்தியாவில் ஆண்டுக்கு சராசரியாய் பதினொரு மில்லியன் கருக்கலைப்புகள் நடக்கின் றனவாம்! 4 மில்லியன் கருக்கலைப்புகள் மறைமுகமா கச் செய்யப்படுகிறதாம். என்.என்.சி.எம்.ஏ (National Consensus for Medical Abortion in India) சொல்கிறது.

கருக்கலைப்பை ஒத்துக்கொள்ளாத நாடுகள், இது மக்களை ஒழுங்கு படுத்தும் முயற்சி என்கின்றன. திருமணமாகாத பெண்களுக்குத்தான் 60 சதவீதம் கருக்கலைப்பு நடக்கிறது என புள்ளி விபரங்களையும் நீட்டுகின்றன. கருக்கலைப்பை அனுமதிக்கும் நாடு களோ இது பெண்களின் உரிமை, மருத்துவத் தேவை, சமூக கடமை என எதிர் விவாதங்களை முன் வைக் கின்றன. கருக்கலைப்பு என்பது விளையாட்டுச் சமாச் சார மல்ல. இது தவறுகளுக்கான அனுமதிச் சீட்டும் அல்ல. ஆனால் தவிர்க்க இயலா சூழலில் கூட அது மறுக்கப்படுவது சரியா என்பது தான் நம்மிடையே எழும் கேள்வி.

- இணையம்

# நட்பே உறவை வளர்க்கும்!



தாய் - மகள், தந்தை-மகன், அண்ணன்-தம்பி, அக்காள்-தங்கை, தொழி லாளி - முதலாளி என்று எல்லா உறவுகளிலும் நட்பே வேண்டும். சக தொழி லாளர்களிடம் நட்பு, பிற மொழியினரிடம் நட்பு, பிற நாட்டவரிடம் நட்பு என்று அனைத்திலும் நட்பு இருந்தால்தான் வீடு, ஊர், உலகம் என்று எல்லாமும் மலர்ந்திருக்கும்.

நட்பு என்பது இரத்த உறவைப்போல பிறப்பில் வருவதில்லை. அதை நாம்தான் வளர்த்துக்கொள்ள வேண்டும். நண்பர்களாய் இருந்த இருவர் இரத்த உறவுச் சகோதரர்களாய் ஆவதில்லை. ஆனால் சகோதரர்களாய் இருக்கும் இருவர் நண்பர்களாய் ஆகிறார்கள். அதுதான் அவர்களின் சகோதர உறவையும் நெடுநாளையதாகவும் வலுவானதாகவும் மாற்றுகிறது. ஆனால் காதலர்களும் கணவன் மனைவியரும் அப்படியானவர்கள் அல்ல. அவர்களுக்கு இரு வழிகளில் நட்பு வர வழியிருக்கிறது. காதலர்களாய் ஆனபின் அல்லது கணவன் மனைவியாய் ஆனபின் நட்பை வளர்த்துக் கொள்ளலாம். அல்லது நண்பர்களாய் இருந்து காதலர்களாகவோ, கணவன் மனைவியாகவோ ஆகலாம். எப்படியாயினும் உலக உறவுகளுக்கெல்லாம் உண்மையான இணைப்பாய் இருப்பது நட்புதான்.

ஒரு தந்தைக்கும் மகனுக்கும் இடையில் பொருளாதார பந்தமே உறவாக இருந்தால், அதில் அவ்வப்போது விரிசல்தான் விழும். இருவருக்கும் இடையில் நட்பு என்பது உறவாக இருந்தால், அவர்களை அசைக்க எவராலும் இயலாது.

காதலன் காதலிக்கு இடையில் கவர்ச்சி மட்டுமே பந்தத்தை உருவாக்கி இருந்தால் அந்தக் காதல் நாளை நாளில் செத்துப் போகும். உண்மையான நட்பு அவர்களின் பந்தத்தை உருவாக்கி இருந்தால் அவர்கள் வாழ்க்கை என்றென்றும் உயரத்திலேயே இருக்கும். வாழ்வின் அனைத்திற்கும் நட்பே தேவை. நட்பின் புனிதமே உறவுகளை உருவாக்கத்தான். இரு தலைவர் களுக்குள் நட்பு என்றால் இரு நாட்டின் உறவும் அமைதியும் வலுப்படும். இரு மதத்துக்குள் நட்பு என்றால் அப்பப்பா... எத்தனை உயிர்கள் காப்பாற்றப்படும்

நட்பு வழியே காதல் மலர்ந்தால் அது வாழ்வின் மழை! காதல் வந்ததும் நட்பை இழந்தால் அது அந்த உறவின் மரணம்! காதல்கூட நட்பை இழக்கச் செய்வதில்லை. கல்யாணம்தான் அதைச் சிலரிடம் செய்துவிடுகிறது. கணவன் மனைவி என்று ஆனதும் தங்களின் நட்பை இழந்துவிடுகிறார்கள் சிலர். அத்தனை பலகீனமான நட்பாய் அவர்களின் நட்பு இருந்திருக்கிறது என்றால் அது உண்மையான நட்பா? உண்மையான நட்பிருந்தால் உயிர் போகும் போதும் உறவு போகாது! எல்லோரும் நல்ல நட்புடைய நண்பர்களாய் இருங்கள். மற்ற உறவுகள் அனைத்தும் தானே வரும், வளரும், நிலைக்கும், வாழ்வு வளமாகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடப்புத்தகங்கள் மட்டும் போதாது



நம்ம வீட்டுப் பெண்கள் நன்றாகப் படிக்க வேண்டும், உடுக்க வேண்டும் நல்ல தொழில் பார்க்க வேண்டும் போன்ற விசயங்களைப் பற்றி யோசிக்கிறோம். ஆலோசனை கூறுகின்றோம். ஆனால் எப்படி நடந்து கொண்டால் இந்த சமூகத்தில் அவர்கள் பாதுகாப்பாக வலம் வர முடியும் என்பதைப் பற்றி அவர்களிடம் மனம் திறந்து பேசுவதில்லை.

தற்போதைய சூழ்நிலையில் கல்வி சம்மந்தமான புத்தகங்களை மட்டும் படித்தால் போதாது. நாட்டு நடப்புகளையும் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் அதற்கேற்றவாறு இந்த சமூகத்தில் உலா வர முடியும். அதனால் செய்தித்தாள் வாங்கிக் கொடுத்து படிக்கச் சொல்லுங்கள். அத்தோடு நாட்டு நடப்புகளை அவர்களுடன் விவாதியுங்கள்.

அவர்கள் எப்படி இருந்தால் இந்த சமூகத்தில் பாதுகாப்பாக வலம் வரமுடியும் என்பதை விளக்குங்கள். வழிகாட்டுங்கள். இது போன்ற விசயங்களிலும் நீங்கள் கவனம் செலுத்தினால் உங்கள் வீட்டுப் பெண்கள் நிச்சயமாக வாழ்க்கை என்னும் பாதையில் கவனமாக இருப்பார்கள். வெற்றி பெறுவார்கள்.

## விழிப்புணர்வு தேவை

பெண்கள் தாங்கள் எங்கே இருக்கிறோம் நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதில் கவனம் வைத்திருக்க வேண்டும். நம்மை மறந்த நிலையில் இருக்கும் சூழ்நிலையைத் தவிர்க்க வேண்டும். நாம் புதிதாக போகும் இடத்தைப் பற்றிய தகவல்களை நாம் அறிந்திருக்க வேண்டும்.

தலையைக் குனிந்து கொண்டு எதற்கும் வெட்கப்பட்டுக் கொண்டிருந்தால் ஏமாற்றமே மிஞ்சும். உடலையும், தலையையும் நேராக வைத்திருங்கள். மனித உடலில் புஜங்கள்தான் மிகவும் வலிமையானவை. எனவே உங்களது கைகளும் புஜங்களும் தாக்குதலை தடுக்கவும் எதிர்த்தாக்குதலுக்கும் தயாராக இருக்கட்டும்.

இரவு நேரங்களில் குறிப்பாக குறுகிய பாதையில் தனியாகச் செல்வதைத் தவிருங்கள். உங்களுக்கு நம்பிக்கை குறைந்தவர்களுடன் கட்டாயத்தின் பேரில் செல்வதையும் தவிர்த்து விடுங்கள். எந்த இடத்திற்கும் நேரம் காலம் என்று ஒன்று உண்டு. தாங்கள் சுதந்திரப் பறவை என்ற எண்ணத்தில் கண்ட நேரத்தில் கண்ட இடத்தில் இருந்து தாங்களாகவே வம்பில் மாட்டிக் கொள்ள வேண்டாம்.

# மகளிர் சுடர்

## வட்டம் வரையாதீர்கள்

குறுகிய வட்டத்தை வரைந்து அதற்குள் தான் உங்கள் பிள்ளை சுற்றி வர வேண்டும் என்று எண்ணாதீர்கள். சக நண்பர்களுடன் பழகவிடுங்கள். வெளியே [illegible] இல்லாமல் இருட்டறைக்குள் பிள்ளைகளை விடுவது எத்தனை தவறோ அதேபோலத் தான் குறுகிய வட்டத்தை வரைந்து அதற்குள் உங்கள் குழந்தையை வாழச் சொல்வதும் தவறானதாகும். அதனால் உங்கள் குழந்தைகளை சக நண்பர்களிடம் பேச அனுமதியுங்கள். அப்போது தான் அவர்களின் அச்ச சுபாவம் நீங்கும். மற்றவர்களிடம் உரையாடும் போது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்து எடுத்துக் கூறுங்கள். உதாரணமாக அடுத்திருப்பவர்களிடம் பேசும் போது அவர்களின் கண்களைப் பார்த்து நேராக நின்று பேசச் சொல்லுங்கள்.




பெண்பிள்ளைகள் ஆண்களிடம் வெட்கப்பட்டுப் பேசும் போதோ அல்லது நாணிக் கோணி பேசும் போதோ ஏதோ ஒரு விதத்தில் எதிர் இருப்பவர் மனதில் பலவீனமாக புரிந்து கொள்ளப்படுவார்கள் என்று அவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள்.

## நாகரிகம் என்பது ஆபாசமல்ல

பெண்கள் தற்போது மிகவும் சுயமாகவும், சுதந்திரமாகவும் செயல்பட தொடங்கியுள்ளனர். தினமும் பல்வேறு மனிதர்களை சந்திக்கின்றனர். தற்போது பெண்கள் அழகாக இருக்க வேண்டும் என நினைத்து சினிமாவை பார்த்து நவநாகரீகம் என்ற பெயரில் ஆபாசமாக உடை அணிகின்றனர். சினிமாவில் ஆபாசமாக சித்தரிக்கப்படும் பெண்களைப் பார்த்து விட்டு சில பெண்கள் அது தான் நாகரிகம் என்று ஆபாசமாக உடை அணிகின்றனர். பெண்கள் பாதுகாப்பு அவர்கள் கையில் உள்ளது என்பதை அவர்கள் உணருவதில்லை. பெண்கள் வீட்டில் இருக்கும் பொழுது எப்படி வேண்டுமானாலும் உடை அணியலாம். ஆனால் வெளியில் செல்லும் போது நாகரிகம் என்ற பெயரில் ஆபாசமாக உடை அணிவதை தவிர்க்க வேண்டும். நாம் அணியும் உடை ஆண்களை தவறு செய்யத் தூண்டுவதாக இருக்கக்கூடாது.









தமிழர்களின் அற்புதமான உணவு இட்லி. இட்லி சுமார் 700 ஆண்டுகளாக இந்தியாவில் அறியப்பட்டு வந்த [illegible] உணவு பதார்த்தம் ஆகும். இட்லி மிஞ்சினால் [illegible] வேண்டுமே, அல்லது வேறு [illegible] செய்யலாம் என்றோ யோசிக்க வேண்டாம். இட்லியை கொண்டு செய்யப்படும் ஒரு உணவு தான் இட்லி மஞ்சூரியன். வாருங்கள் சுடச்சுட இட்லி மஞ்சூரியன் எப்படி செய்வது என்று பார்க்கலாம்.

### தேவையானப் பொருட்கள்:-



- இட்லி - 6
- கோதுமை மாவு - 1 தேக்கரண்டி
- கடலை மாவு - 1 தேக்கரண்டி
- கார்ன் ப்ளோர் - 1 தேக்கரண்டி
- இஞ்சி - 1 துண்டு
- பச்சை மிளகாய் - 5
- பூண்டு - 5 பல்
- முந்திரி - 10
- டொமேட்டோசாஸ் - 1 கரண்டி
- உப்பு - தேவையான அளவு
- எண்ணெய் - பொரிக்கத் தேவையான அளவு



### செய்முறை:-

இட்லியை விரல் நீளத் துண்டுகளாக வெட்டி வைத்துக்கொள்ளவும்.

ஒரு பேசினில் கோதுமை மாவு, கோர்ன் ப்ளவர், கடலை மாவு மூன்றையும் எடுத்துக் கொள்ளவும்.

இஞ்சி, பூண்டு, பச்சை மிளகாய், முந்திரி அரைத்து மாவில் சேர்க்கவும்.

டொமேட்டோ சாஸ், உப்பு சேர்த்து கெட்டியாகக் கரைத்துக் கொள்ளவும்.

வாணலியை அடுப்பில் வைத்து எண்ணெய் விட்டுக் காய்ந்ததும் இட்லித்துண்டுகளை கலவையில் முக்கி எண்ணெயில் போட்டு எடுக்கவும்.

சுடச்சுட இட்லி மஞ்சூரியன் தயார்.

பொடியாக நறுக்கிய கொத்தமல்லித்தழையைத் தூவியும் பரிமாறலாம்.

இட்லியை பொரிக்காது [illegible] போடலாம்.

இட்லி மாவில் போதுமான அளவு உளுந்து இல்லையென்றால் இட்லி கெட்டியாக இருக்கும். அதுபோன்ற நேரங்களில் ஒரு கரண்டி நெய் அல்லது ஒரு கரண்டி நல்லெண்ணெய் சேர்த்து நன்கு கலந்து பிறகு ஊற்றுங்கள். இட்லி மிருதுவாக இருக்கும்.

## அழகும் வசீகரமும்.

அழகு என்பது வேறு, வசீகரம் என்பது வேறு. அழகாக இருக்கும் பலரால் அனைவரையும் வசீகரிக்க முடிவதில்லை. காரணம் அவர்களுடைய பேச்சுத் திறமையின்மை. கவரும் பேச்சு பலரையும் வசீகரித்து நம்முடைய செயல்பாடுகளில் வெற்றியைத் தரக் கூடியது. தற்போது பெண்கள் வெளியில் சென்று பல வேலைகளை செய்ய வேண்டியிருக்கிறது.

அவர்களுக்கு பேச்சாற்றலும் கனிவான அணுகுமுறையும் கைகொடுக்கும். அலுவலகமானாலும் சரி, பொது இடமானாலும் சரி பெண்களின் தன்மையான பேச்சால் எப்பேர்ப்பட்ட சிக்கலான விசயமும் சுலபமாகி விடும். இதற்கு மிகவும் பொறுமையும் பயிற்சியும் தேவை. இன்று பல நிறுவனங்கள் பெண்களுக்கும் இத்தகைய பயிற்சியை அளிக்கின்றன.



காரணம் ஒரு நிறுவனத்தின் வெற்றி அதன் வாடிக்கையாளர்கள் கையில்தான் உள்ளது. வாடிக்கையாளர்களை சமாளிப்பது என்பது அத்தனை சுலபம் அல்ல. யாருடைய மனநிலை எந்த நேரத்தில் எப்படி இருக்கும் என்று சொல்ல முடியாது. அதற்கு தகுந்தபடி அவர்களைக் கையாளுவதில் தான் சாமர்த்தியமே உள்ளது. இன்றைய காலகட்டத்தில் வரவேற்பாளர், செயலாளர், விமான பணிப்பெண்கள் போன்ற பணிகளுக்கு பெரும்பாலும் பெண்களையே நிறுவனங்கள் நியமிக்கின்றன.

இதற்கு காரணம் அவர்களிடம் வெளிப்படும் மென்மையான வசீகரமான பேச்சுகள் தான். இயல்பாகவே பெண்கள் பொறுமைசாலி. இருப்பினும் சற்று இறுக்கம் தேவைப்படும் அவர்களின் பொறுமையை சோதித்துவிடக் கூடாது என்பதற்காக அவர்களுக்கு இந்த பயிற்சி அளிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குறுதிகள் நிறைவேறுமா?

அரசாங்கத்தினால் முன்னாள் போராளிகளுக்கு வழங்கப்படுகின்ற சுயதொழில் முயற்சிக்கான கடன் திட்டங்கள் நேர்த்தியான முறையில் நடைமுறைப்படுத்தவில்லை என்ற கருத்து சமூகத்தில் நிலவிவருகின்ற சூழ்நிலையில் கடந்த 29-ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர அவர்கள் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுடனான கலந்துரையாடல் ஒன்றை யாழ்மாவட்ட அரச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடத்தியிருந்தார்.

அன்றைய தினம் 10.00 மணிக்கு கலந்துரையாடல் இடம்பெறுமென ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. குறிப்பிட்ட தினத்தன்று காலை 10.00மணியாகி விட்ட நிலையிலும் முன்னாள் போராளிகளில் சிலரே அரச செயலக வளாகத்தில் ஆங்காங்கு கூடிக்கதைத்துக்கொண்டிருந்தனர். 10.31 மணியளவில் கலந்துரையாடலுக்கு வருகை தந்திருந்த முன்னாள் போராளிகளை பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலிசார் உடற்சோதனைகளுக்கு உட்படுத்திவிட்டு கலந்துரையாடல் நடைபெறும் கேட்போர்கூடத்திற்கு உட்செல்ல அனுமதித்தனர். 11.00 மணியளவில் மேலும் ஒரு தொகை முன்னாள் போராளிகள் உடற்சோதனையை முடித்துக்கொண்டு கேட்போர்கூடத்திற்கு வந்து நீண்ட நேரமாக வெறுமையாகிக்கிடந்த நாற்காலிகளை நிறைத்துக்கொண்டனர்.

முற்பகல் 11.45 மணியளவில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர மற்றும் அமைச்சின் செயலாளர் திஸநாயக்க, புனர்வாழ்வு சிறைச்சாலைகள் அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் சிவலிங்கம் சதீஸ்குமார் ஆகியோருடன் யாழ் மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அவர்களும் கலந்துரையாடல் நடைபெறும் கேட்போர் கூடத்திற்கு வருகை தந்தனர்.

மங்கள விளக்கேற்றலுடன் கலந்துரையாடல் ஆரம்பமாகியது. முதலில் யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அவர்கள் உரையாற்றினார். கடந்த காலத்தில் அமைச்சர் யாழ்ப்பாணத்திற்கு பல தடவைகள் வருகை தந்திருந்தமையும் அவர் யாழ்ப்பாணத்தில் முன்னெடுத்த வேலைத்திட்டங்களையும் நினைவுகூர்ந்தார். அதனைத்தொடர்ந்து அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் சதீஸ்குமார் தனது உரையில் 'ஒரு நாட்டினது அரசாங்கத்திற்கு எதிராக நேரடியாக ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு அமைப்பின் உறுப்பினர்கள் மிகக்குறுகிய காலப்பகுதியினுள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டுள்ளனர். நீங்கள் விடுதலைப்புலிகள் அமைப்பில் செயற்பட்டதை தவறாக எடுக்கவில்லை . அப்போது அன்றைய காலத்தின் சூழல் அவ்வாறு இருந்தது. இப்போது இன்றைய காலத்தின் சூழலில் புதிய உலகத்திற்குள் நுழைந்திருப்பதாக நினைத்து புதிய வாழ்க்கை ஒன்றைத் தொடங்குங்கள்' எனக் குறிப்பிட்டார்.

அமைச்சர் சந்திரசிறி கஜதீர கருத்துரைக்கும் போது 'புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் சமூகத்துடன் இணைக்கப்பட்ட போதும் அவர்களினுடைய வாழ்வாதார முன்னேற்றத்திற்கு தனது அமைச்சு தொடர்ந்தும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அத்துடன் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்கென அரசாங்கத்தினால் இருநூறு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. [illegible] தலா இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வரையில் கடனாகப் பெற்றுக்கொண்டு பின்னர் குறிப்பிட்ட கால இடைவெளியின் பின்னர் நான்கு சதவீத இலகு வட்டி அடிப்படையில் மீளச்செலுத்திக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

யுத்த காலத்தில் காயமடைந்து அங்கவீனமுற்றவர்களாக இருக்கும் முன்னாள் போராளிகளுக்கு சுகாதாரசேவைகள் அமைச்சின் அனுசரணையுடன் விசேட மருத்துவசேவை ஒன்றை மேற் கொள்ளத்திட்டமிட்டுள்ளதுடன், இதய நோய் போன்ற இயற்கை நோய்களை யுடையவர்களும் இந்த விசேட மருத்துவ சிகிச்சையினைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் சாரதிப்பயிற்சி பெற்று சாரதி அனுமதிப்பத்திரம் கைவசம் இல்லாதவர்களுக்கு அந்த சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுத்தருவதற்கு உடன் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அமைச்சர் உறுதியளித்ததோடு புதிதாக சாரதிப்பயிற்சி பெற விரும்புபவர்களுக்கும் சாரதிப்பயிற்சிக்கல்லூரி ஒன்றைத் தொடங்குவதற்கு உத்தேசித்துள்ளேன் என்றும் கூறினார்.

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு அரசினால் சமுர்த்தி அத்துடன் நிவாரணம் வழங்கப்படுகிறது என்றும் முன்னாள் போராளிகளும் குறைந்த வருமானத்தை ஈட்டுபவர்கள் சமுர்த்தி நிவாரணப் படிவத்தைப் பூர்த்தி செய்து கிராம அலுவலர் பிரதேச செயலர் உறுதிப்படுத்தல்களுடன் அரசாங்க அதிபரிடம் கையளிப்பதோடு அதன் நிழற்பிரதி ஒன்றினை தனக்கும் அனுப்பி வைக்குமாறு அமைச்சர் கேட்டுக்கொண்டார். அத்தோடு மேற்கூறப்பட்ட செயற்திட்டங்கள் அனைத்தும் பெப்ரவரி மாதத்தில் நடைமுறைப்படுத்திவிட்டு மார்ச் மாதத்தின் முதல் வாரத்தில் அடுத்த கலந்துரையாடல் இடம்பெறும் எனவும் உறுதியளித்தார்.

அத்துடன் முன்னாள் போராளிகளுக்கான தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று யாழ்-கைதடியில் நிறுவவுள்ளதாகவும் கூறினார் . நீங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் சதீஸ்குமார் அவர்களின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என்றும் கூறினார். சமூகத்துடன் இணைக்கப்பட்ட முன்னாள் போராளிகள் தற்போது செய்யும் சுயதொழில்கள் தொடர்பாகவும் அமைச்சர் கேட்டறிந்துகொண்டார்.


மேலும் இனிவரும் நாள்களில் சமூகவாழ்வில் இணைக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கான சமூகக்கட்டமைப்பு ஒன்று நிறுவப்பட்டு அது புனர்வாழ்வு அதிகார சபையினால் நெறிப்படுத்தப்படும். முன்னாள் போராளிகள் என்ற சொற்பதம் நீக்கப்பட்டு புனர்வாழ்வு அதிகாரசபை என்ற கட்டமைப்பின் நிர்வாகத்தின் கீழேயே இவர்களின் வாழ்வாதார முயற்சிகள் முன்னெடுக்கப்படும். அத்துடன் இத்திட்டத்தின் செயற்பாடுகளை புனர்வாழ்வு அதிகாரசபை இணைப்பாளர் கோபிராச் நெறிப்படுத்துவார்.

அத்துடன் கடன் திட்டத்திற்கான படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பிரதேச செயலகங்களில் சமர்ப்பிக்கப்பட்டு சுமார் ஆறுமாதங்களைக் கடந்து விட்ட நிலையிலும் இதுவரையிலும் கடன் உதவிகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை என முன்னாள் போராளிகள் பலர் அமைச்சரிடம் கூறினர். அதற்கு அமைச்சர் இவ்விடயத்தை தான் கவனத்தில் கொண்டு அந்தக்கடன்திட்டம் கூடிய விரைவில் கிடைப்பதற்கு ஆவண செய்வதாகவும் கூறினார்.

இக்கலந்துரையாடலின் போது முன்னாள் போராளிகள் ஒவ்வொருவரும் தமது கருத்துக்களை அமைச்சரிடம் கூறுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

வாக்குறுதிகளைக் கேட்கின்றபோது காதுகளுக்குள் பால்வார்த்தமாதிரி இருக்கின்றது. மார்ச் மாதத்தின் முதல் வாரத்திற்குள் அதாவது இன்னும் ஒரு மாதகால இடைவெளிக்குள் அமைச்சர் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்களா? என்பதுவே முன்னாள் போராளிகளின் மத்தியில் தற்போது எழுந்துள்ள கேள்வியாகும்.

ரிசிக்கேசன்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- இரா.புத்திரசிகாமணி

# 20 ஆவது சர்வதேச தேயிலை மாநாட்டிலாவது தொழிலாளர்களுக்கு விமோசனம் கிடைக்குமா ?

மலையக தோட்டத் தொழிலாளர்களின் வியர்வையையும், இரத்தத்தையும், கண்ணீரையும் பிழிந்து தயாரிக்கப்பட்ட (தேயிலை) தேனீரை சுவைத்து குடித்துக் கொண்டு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் சர்வதேச தேயிலை மாநாட்டை நடத்தி பெருமை பேசுகின்றனர்.

தேனீருக்கு பாலைக் கூட கலக்காமல் தனித் தேயிலை சாயத்தை உறிஞ்சி உறிஞ்சி ரசித்து குடிக்கின்றனர் சர்வதேச பிரதிநிதிகள்.

அந்த இரத்த சிவப்பான தேயிலைச் சாயத்தை உருவாக்கியவர்களும், உற்பத்தி செய்தவர்களும் யார் என்பதைப் பற்றி இந்த மாநாட்டில் ஒரு வார்த்தை கூட எவரும் பேசவில்லை என்பது தான் வேதனை.

உற்பத்தி செய்யப்பட்ட தேயிலையை எப்படி சந்தைப்படுத்துவது. சந்தைப்படுத்தலில் எப்படி முதலாம் இடத்தைப் பிடிப்பது என்று தான் இங்கு ஆராய்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு போசாக்கு மற்றும் விவசாய அமைப்பின் அனுசரணையுடன் இலங்கை தேயிலை சபை இந்த 20 ஆவது சர்வதேச தேயிலை மாநாட்டை நடத்தும் பொறுப்பை ஏற்றுள்ளது. இது எமது நாட்டிற்கும், எமது தேயிலைக்கும் கிடைத்த பெருமை.

இலங்கையின் இயற்கை செல்வங்களாக தானாகவே வளர்ந்து காணப்பட்ட ஏலம், கராம்பு, சாதிக்காய் போன்ற வாசனைத் திரவியங்கள் மீது மையல் கொண்ட வெள்ளையர்கள் எமது நாட்டை ஆக்கிரமித்து அடிமைப்படுத்தினர். இது சரித்திரம்.

பின்னர் கம்பளை மாரியாவத்தை மற்றும் அம்புலுவாவ ஆகிய இடங்களில் பரீட்சார்த்தமாகவும், முதன் முதலாகவும் தேயிலை பயிரிடுகை ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டம் வெற்றி அளிக்கவே கொடிய மிருகங்களும், விசப் பாம்புகளும், கொடூரக் குளவிகளும் குடியிருந்த காடுகள் அழிக்கப்பட்டு தேயிலைத் தோட்டங்கள் உருவாக்கப்பட்டன. இந்த தேயிலைத் தோட்டங்களை உருவாக்கிய சிற்பிகள் தான் மலையகத் தொழிலாளர்கள். இது வரலாறு.

மலையக மக்களின் சரித்திரம் 200 ஆண்டுகளையும் கடந்தது.

இப்பெருமக்களுக்கு ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும் யாருக்குமே கிடைக்காத கௌரவமும் மதிப்பும் மரியாதையும் கிடைக்கும்.

இந்த நாட்டின் தேசிய பொருளாதாரத்தின் அச்சாணிகள், காட்டை அழித்து நாடாக்கிய செம்மல்கள், இந்திரன் சந்திரன் என்றெல்லாம் புகழ்வார்கள். அது எப்போது தெரியுமா? இங்கு தேர்தல்கள் நடைபெறும்போதுதான். அவர்களுடைய பொன்னான வாக்குகளைப் பெறுவதற்காக தேர்தல் மேடைகளில் வாய் கிழிய கத்துவார்கள்.

அப்போது பச்சை, நீலம், சிவப்பு என்ற பேதம் இருக்காது தமிழர், சிங்களவர், இஸ்லாமியர் என்ற பாகுபாடே இல்லாமல் எல்லோரும் இவர்களுக்கு சலாம் போடுவார்கள். வாக்குறுதிகளை வாரி வீசுவார்கள்.

இந்த தேசிய அரசியல் வாதிகளின் அடிவருடிகளாக அண்டிப் பிழைப்பு நடத்தும் மலையகத் தலைமைகளும் தத்தமது வசதிக்கு ஏற்ப காவடி தூக்கிப் பழக்கப்பட்டு விட்டனர்.

ஆனால் எல்லோருமே தேர்தல் மேடையோடு இவர்களை மறந்துவிடுவார்கள்.

இப்பொழுது சர்வதேச சந்தைக்கு இலங்கை தேயிலையை வர்த்தக ரீதியாக ஏற்றுமதி செய்து 145 ஆண்டுகள் கடந்து விட்டன. தேயிலை உற்பத்தியில் தொழில்நுட்ப மாற்றங்களுடன் பாரிய பரிணாமம் காணப்பட்டுள்ளது. சர்வதேச அங்கீகாரமும் கிடைத்துள்ளது.

இவற்றை எல்லாம் சாதகமாக்கிக் கொண்ட இலங்கை அரசு 20 ஆவது சர்வதேச தேயிலை மாநாட்டை இங்கு நடத்தும் வாய்ப்பைப் பெற்றுள்ளது.

இந்த சந்தர்ப்பத்தில் ஒரு விடயத்தை சுட்டிக் காட்ட வேண்டியது கட்டாயமாகின்றது.

இவ்வளவு பெருமை மிக்க தேயிலையை உற்பத்தி செய்யும் மலையகத் தொழிலாளர்களுக்கு உரிமையாக ஒரு வீடு இல்லை. அடிப்படை வசதிகள் இல்லை. சுகாதார வசதிகள் இல்லை. இவற்றை கவனிப்பாரும் இல்லை.

ஆனால் இதற்கு விதி விலக்காக ஒரு சிறு பிரிவினர் தம்து சுய முயற்சியினால் மேற்குறிப்பிட்ட அனைத்து தேவைகளையும் தாமே ஆக்கிக் கொண்டு சிறப்பாக வாழ்கின்றனர் என்பதையும் மறுக்கமுடியாது.

எனினும் இம்மலையகத் தொழிலாளர்களின் இரத்தத்தை உறிஞ்சி அவர்களின் உழைப்பை மட்டுமே பெறும் தோட்டக் கம்பெனிகளும், அரசும் இன்றும் கூட இந்த தொழிலாளர்களின் அவல வாழ்க்கையைப் பற்றி அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை.

சர்வதேச தேயிலை மாநாட்டை இலங்கையில் நடத்தும் இந்த வேளையிலாவது தேயிலை தொழில்துறைக்கே உயிரூட்டிய மலையக மக்களுக்கு சொந்தமாக காணிகளும் அதில் வீடுகளும் பெற்றுக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு அத்தியாவசியமான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். இதனை மலையக தலைமைகள் ஒரே குரலில் வலியுறுத்திப் பெற்றுக் கொடுக்க முன் வரவேண்டும்.

அது தான் சர்வதேச தேயிலை மாநாட்டை இலங்கையில் நடத்துவதின் உண்மையான வெற்றியாக அமையும்.



# போரிலும் சாகாத சாதியம்!

சமகாலத்திலும், சாதியம் என்ற மாயைக்குள் இலங்கைத் தமிழர்கள் நிறையவே கட்டுண்டு போயுள்ளார்கள். [illegible]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனிக்கால மூட்டுவலிக்கான பாதுகாப்பு

மூட்டு வலிக்கான அறிகுறிகள் தென்பட்டால் மருத்துவரின் ஆலோசனைப்படி மருந்துகளும் செய்து கொள்ள வேண்டியது அவசியம். சாதாரண மூட்டு பிரச்சினை கூட பனிக்காலத்தில் அதிகரிக்கும். வலிகளையும் ஏற்படுத்தும். அதற்கான பாதுகாப்பு முறை மூலம் பனிக்கால மூட்டு வலியை தவிர்க்க முடியும்.

மூட்டுப் பிறழ்வு, மூட்டு நழுவுதல் போன்ற காரணங்களால் முழங்கை, முன்கைப் பகுதியில் கடும் வலி ஏற்படும். திடீரென முழங்கையை நீட்டும் போதும் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. முழங்கைப்பகுதி ஒழுங்கற்றுக் காணப்படுவது மற்றும் அதிக வலி போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனே மருத்துவரை அணுக வேண்டும். குளிர் காலத்தில் மணிக்கட்டு, கைவிரல்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. மணிக்கட்டு, விரல்களுக்கு அதிகம் வேலை கொடுப்பது மற்றும் காயம் காரணமாகவும் வலி ஏற்படலாம்.



மூட்டு வலியைக் குறைக்க மருத்துவரின் ஆலோசனைப்படி மருந்துகளைப் பயன்படுத்த வேண்டும். மூட்டுகளை அழுத்தி அசைவைக் குறைக்கும் எலாஸ்டிக் கட்டு போடலாம். மூட்டுகளில் வலி இருக்கும்போது உடற்பயிற்சியை தவிர்க்கவும். ஒரே வேலையைத் தொடர்ந்து செய்வதை விட்டு இடையில் சிறிது ஓய்வெடுத்து பின்னர் வேலை செய்யலாம்.

அதிக எடை தூக்குவதைத் தவிர்க்கவும். குளிர் காலங்களில் அதிகாலை குளிரில் வெளியில் வருவதை தவிர்க்கவும். வெளியில் வர நேர்ந்தால் மப்ளர், சாக்ஸ், ஷூ பயன்படுத்தி கால்கள், கழுத்துப் பகுதி கதகதப்பாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளலாம். குளிரால் மூட்டு வலி ஏற்பட்டால் அப்பகுதியில் வெந்நீர் ஒத்தடம் கொடுக்கலாம். அதிக எடையை குறைப்பதும் மூட்டுவலியை நிரந்தரமாக வழியனுப்ப ஒரு வழியாகும்.

கல்சியம் சத்துள்ள உணவுகளை எடுத்துக் கொள்வதால் எலும்பு வலிமை அடையும். குளிர் காலத்தில் மூட்டுக்கான பயிற்சிகளை செய்வதன் மூலம் வலி ஏற்படுவதைத் தடுக்கலாம்.

பனிக்காலத்தில் உடலின் சூடு குறைவதால் குருதி உறையும் பிரச்சினை இருக்கும். இதனால் மூட்டு, குதிக்கால் மற்றும் முதுகுத்தண்டு ஆகியவற்றில் வலி ஏற்படும். குளிரில் காலுக்கு ரத்த ஓட்டம் குறைவதாலும் குதிகால் வலி ஏற்படும். மேலும் தோல் வறட்சியும் பனிக்காலத்தில் தொல்லைப்படுத்தும்.

இந்தக்காலத்துக்கு நீர்ச்சத்து அதிகம் உள்ள புடலங்காய், பீர்க்கங்காய், சுரைக்காய் உள்ளிட்ட காய்கறிகள் சேர்த்துக் கொள்ளலாம். தினமும் கட்டாயம் ஒரு பழம் எடுத்துக் கொள்ள வேண்டும். கால் பகுதியை கதகதப்பாக வைத்துக் கொண்டால் குருதி உறைவதால் ஏற்படும் வலியைத் தடுக்கலாம்.

அடிக்கடி சிறுநீர் கழித்தாலும் தண்ணீர் நிறையக் குடிக்க வேண்டும். பெப்சி, கோக் உள்ளிட்ட குளிர் பானங்கள் தாகத்தை குறைப்பதற்குப் பதிலாக அதிகரிக்கச் செய்யும். இதனால் அவற்றைத் தவிர்ப்பது நல்லது. பனிக்காலம் முடியும் வரை தேறாட்டல் உணவுகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நேரமும் சூடான உணவு எடுத்துக் கொள்ள வேண்டியதும் அவசியம். கல்சியம் பற்றாக்குறையின் காரணமாகவும் மூட்டு வலிகள் பனிக்காலத்தில் அதிகரிக்கலாம்.

கீரை வகைகள், பேரிச்சை, பால் மற்றும் பால் பொருட்கள், உலர் பழங்கள், கொட்டை வகைகள், மீன் மற்றும் முழுத்தானியங்கள் சாப்பிடுவதன் மூலம் இது போன்ற பிரச்சினைகளைத் தடுக்க முடியும்.

# நெல்லிக்காய் தரும் இளமை

ஆரோக்கியத்தை மேம்படுத்தும் சிகிச்சை காயகற்பம் என அழைக்கப்படுகிறது. காயம் என்றால் உடல், கற்பம் என்றால் அழிவில்லாதது. நரை, திரை, மூப்பு அணுகாமல் என்றும் நோயணுகாமல் இளமையாக வைத்திருக்க உதவும் மூலிகைகளை காயகற்ப மூலிகை என்கிறோம். காயகற்ப மூலிகைகளில் மிக முக்கியமான இடத்தை பிடிப்பது நெல்லிக்காய்.

நெல்லிக்காய் நம் உடலில் தோன்றும் நஞ்சுகளை வெளியேற்றி இளமையாக இருக்க வழி செய்கிறது. உடல் திசுக்களுக்கு புத்துணர்ச்சியளித்து உடல் செல்கள் நன்கு செயல்பட உதவி புரிகிறது.

நெல்லிக்காயில் விட்டமின் சி வேறு எந்த வகை காய்கறி பழங்களிலும் இல்லாத அளவுக்கு 600 மில்லிகிராம் உள்ளது. கல்சியம் 50 மில்லி கிராம், பொஸ்பரஸ் 20 மில்லிகிராம், இரும்புச் சத்து 1.2 மில்லிகிராம் உள்ளது. அப்பிள் பழத்தை விட இது அதிக சக்தி வாய்ந்தது.



நெல்லிக்காய் ஈரலைத் தூண்டி, நன்கு செயல்பட வைத்து கழிவுகளை வெளியேற்ற உதவுகிறது. ஜீரண சக்தியை அதிகரித்து, தாதுக்களை நம் உடல் ஏற்றுக்கொள்ளத் துணைபுரிகிறது. கண்களுக்குத் தெளிவைக் கொடுக்கிறது. தலைமுடி உதிராமல், வளர்ந்து, நரைமுடி தோன்றுவதை தவிர்க்கிறது.

நரம்பு மண்டலத்தை தூண்டி வேலை செய்கிறது. மூளை செல்களுக்கு புத்துணர்ச்சியளிப்பதால், மனத்தெளிவு, புத்திக்கூர்மை மற்றும் ஞாபகசக்தி உண்டாகிறது. நுரையீரலை பலப்படுத்தி சுவாச நோய்களை கட்டுப்படுத்த உதவுகிறது.

உடல் எடையைக் கூட்டாமல் தசைகளுக்கு பலம் அளிக்கக் கூடிய தன்மை நெல்லிக்கு உண்டு. நீரிழிவைக் கட்டுப்படுத்தும் சக்தியுள்ளது. மேலும் இதில் விட்டமின் சி சத்து அதிகம் உள்ளதால் நோய்க்கு எதிர்ப்பு சக்தியாக செயற்படுகிறது.

நெல்லிக்காய் கிடைக்காத காலங்களில் காய்ந்த நெல்லிக்காயை (நெல்லிமுள்ளி) பயன்படுத்தலாம். இதற்குரிய சக்தி காய்ந்த பின்னும் குறைவதில்லை.

எல்லா வயதினரும் இதைச் சாப்பிட வேண்டும். குழந்தைகளுக்கு நெல்லிக்காய் லேகியம் தினம் கொடுத்து வந்தால் சிறந்த நோய் எதிர்ப்புச் சக்தி உருவாவதுடன், மூளை வளர்ச்சியும், புத்திக் கூர்மையும் ஏற்படும். சில ஆயுர்வேத சக்தி மருந்துகளும் நெல்லிக்காயால் தான் தயார் செய்யப்படுகின்றன.

# மனபாரம் குறையணுமா அழுவது நல்லது



வாய்விட்டு சிரிப்பது உடல் நலத்திற்கு நல்லது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அதேபோல் கண்ணீர் விட்டு அழுவதும் மிகவும் ஆரோக்கியமானது தான் என்கின்றனர் விஞ்ஞானிகள். அழுவதனால் மனதில் உள்ள அழுத்தம் கண்ணீர் மூலம் வெளியேறிவிடுகிறது. கண்களில் உள்ள அழுக்குகளும் நீங்குகின்றன. உடலுடன் உள்ளமும் 'ரிலாக்ஸ்' ஆவதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

**கண்ணீர் வகைகள்:**

சோகத்தில் அழுவது, சந்தோஷத்தில் அழுவது, எரிச்சலில் அழுவது, உணர்ச்சிவசப்பட்டு அழுவது என கண்ணீர் பல வகைப்படும். மனிதர்களைப் போல விலங்குகளும் கண்ணீர் விட்டு அழுகின்றன. எனவே அழுவதற்காக வெட்கப்படத் தேவையில்லை. அழுகை என்பது ஆரோக்கியமானதே என்கின்றனர் மருத்துவர்கள்.

கண்ணீர் உருவாகக் காரணமான 'லாக்ரிமல்' சுரப்பி காய்ந்துபோனால் கண் உலர்ந்துவிடும். கண்ணீரின் அளவு குறைந்து விடுவதால் கண்ணில் எரிச்சல் உணர்வு உண்டாகிறது. மண் விழுந்தது போன்ற கடுமையான எரிச்சலாகவும் இது இருக்கக் கூடும். வலி அதிகமாகும் போது கவனித்து சரிசெய்து கொள்ளாமல் நீண்ட காலம் அலட்சியப்படுத்தினால் விழித்திரையில் பாதிப்பு உண்டாகி பார்வையை இழக்க வேண்டி வரலாம். அதனால் அடிக்கடி அழுவது கூட நல்லது தான். கண்ணீர் உண்டாகவில்லையென்றால் அதற்கேற்ப மருத்துவரை நாட வேண்டும்.

**உலர் கண்களைத் தடுக்க:**


கண்ணில் உள்ள மூன்று வெவ்வேறு படலங்களின் கூட்டு முயற்சிதான் கண்ணீர். இவற்றில் வெளிப்புறமாக உள்ள மெல்லிய படலம் அங்கு சுரக்கும் நீர் (அதாவது இமையில் உள்ள லிபிட்) ஆவியாக மாறுவதைத் தடுக்கிறது. நடுப்பட்லமான 'லாக்ரிமல்' சுரப்பிகளில் நீர் சுரக்கிறது. கண்ணீரில் உள்ள உப்பும் அமிலமும் ஓர் அளவுக்குள் இருப்பதையும் இது உறுதிசெய்து கொள்கிறது. கண் தொற்றுகளுக்கு எதிராகச் செயற்படும் சக்தியும் கண்ணீருக்கு உண்டு. உள்ளே இருக்கும் படலம் கண்ணீரை விழித்திரையோடு ஒட்டிக்கொள்ள வைக்கிறது. அதாவது கண்ணீர் சட்டென வெளியேறிவிடுவதில்லை. இந்த மூன்று படலங்களில் எது செயற்படாவிட்டாலும் விழித்திரை உலர்ந்துவிடும்.

**மனபாரம் குறையும்:**

வயதாக ஆக இந்தப் படலங்களில் இயல்பாக உள்ள எண்ணெய்ச் சுரப்பி குறைந்துவிடுகிறது. இதன் காரணமாக கண்ணீர் விரைவில் ஆவியாகி விடுகிறது. சிலவகை பக்ரீரியாக்கொல்லி மருந்துகளைத் தொடர்ந்து உட்கொள்ளும் போதும் இப்படி நேரலாம். 'கொண்டக்ட் லென்ஸ்' அணியும் சிலருக்கு அதனாலேயே கண்களில் வறட்சி ஏற்படலாம். அதாவது அந்த லென்ஸ்கள் கண்ணீரின் திரவத்தை உறிஞ்சிக் கொள்கின்றன. எனவே உலர்கண் கொண்டவர்கள் 'கொண்டக்ட் லென்ஸ்' அணியக் கூடாது என்று மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர்.

சந்தோசமென்றால் மகிழ்ச்சியைச் சிரிப்பாக வெளிப்படுத்துவதைப் போல துக்கமென்றால் அழுது வெளிப்படுத்துங்கள். இதன் மூலம் மனபாரம் குறையும், ஆரோக்கியம் அதிகரிக்கும் என்கின்றனர் மருத்துவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலிலியோ கலிலீ

## விஞ்ஞானி – இத்தாலி

கலிலியோ கலிலீ (Galileo Galilei) இத்தாலி நாட்டிலுள்ள பைசா நகரத்தில் கி.பி.1564 - ஆம் ஆண்டு பிப்ரவரி 15 - ஆம் நாள் பிறந்தார். இவரது தந்தை வின்சென்சோ கலிலீ. சிறந்த இசைமேதை. கலிலியோ ஆறு பிள்ளைகளில் மூத்தவர்.

### கல்வி

கலிலியோவின் தந்தை அவரை மருத்துவராக்க வேண்டும் என்று விரும்பினார். அதனால் பைசா நக்ரத்திலுள்ள பைசா பல்கலைக்கழகத்தில் (University of Pisa) 1581 - ல் சேர்த்தார். கலிலியோவுக்கு மருத்துவத்தில் ஆர்வம் இல்லை, கணிதத்தைக் கற்றார். இயல்பிலேயே கலிலியோவுக்கு இயந்திர இயலிலும், இசையிலும், ஓவியத்திலும் மிகுந்த ஆர்வம் இருந்தது.

### கடிகாரம் கண்டுபிடிப்பு

ஒருநாள் மாதாகோயிலின் கூரையிலிருந்து தொங்கிக் கொண்டிருந்த விளக்கு காற்றில் அசைந்து ஆடிக்கொண்டிருப்பதைக் கண்டார். விளக்கு வேகமாக ஆடினாலும், மெதுவாக ஆடினாலும் ஒருமுறை ஆடுவதற்கு ஆகும் நேரம் ஒரே அளவாக இருப்பதைக் கண்டார். கடிகாரம் கண்டுபிடிப்பதற்கு இந்தக் கண்டுபிடிப்பே அடிப்படையாக அமைந்தது.

### வெப்பமானி கண்டுபிடிப்பு

அக்காலத்தில் மருத்துவர்கள் இதயத்தின் துடிப்பை நாடி பிடித்து அறிந்தனர். அவர்கள் நேரத்தை கணக்கிட சிரமப்பட்டனர். மருத்துவர்களுக்கு பயன்படும் வகையில் கலிலியோ கடிகாரத்தை உருவாக்கிக் கொடுத்தார். மருத்துவம் செய்யாவிட்டாலும், மருத்துவத்துறைக்கு சேவை செய்தார். அதுபோல், உடலின் வெப்பத்தைக் கணக்கிடும் வெப்பமானியையும் கண்டுபிடித்தார்.

### தவறுகளை சுட்டிக்காட்டியமை

கணிதக்கலையில் மிகுந்ததிறமை பெற்றிருந்த கலிலியோ அவர் பயின்றுவந்த பைசா பல்கலைக்கழகத்திலேயே 1589 - ஆம் ஆண்டு கணித ஆசிரியராக பதவியேற்றார். அக்காலத்தில் கிரேக்க அறிஞர் அரிஸ்டாட்டிலின் அறிவியல் கொள்கைகளே அனைவராலும் ஏற்றுகொள்ளப்பட்டன. எதையும் சோதனை செய்துபார்க்கும் கலிலியோ, அரிஸ்டாட்டில் கண்ட முடிவுகளிலுள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டினார்.

இரண்டு பொருள்கள் ஒரே உயரத்திலிருந்து கீழே விழுந்தால் அவற்றுள் எடை அதிகமான பொருள்தான் முதலில் தரையில் விழும் என அரிஸ்டாட்டில் கூறியுள்ளார். இதை கலிலியோ மறுத்தார். பொருள்கள் அனைத்தும் ஒரே உயரத்திலிருந்து விழுந்தால் ஒரே சமயத்தில் அவை தரையை அடையும் என்று கூறினார்.

இதை நிரூபிக்க 1590 - ஆம் ஆண்டு மக்களையும், அறிஞர்களையும் பைசா நகரத்து கோபுரத்துக்கு அழைத்துச் சென்றார். அனைவரையும் கீழே நிறுத்திவிட்டு கலிலியோ மேலே சென்றார். உச்சியிலிருந்து இரண்டு குண்டுகளை ஒரே சமயத்தில் தரையை நோக்கி போட்டார். ஒரு குண்டின் எடை 450 கிராம். இன்னொரு குண்டின் எடை 4500 கிராம். இரண்டும் ஒரே நேரத்தில் தரையை வந்தடைந்தன. கோபுரம் சாய்ந்த கோபுரம் என்பதால் கலிலியோவால் எளிதாக விளக்கிக் காட்ட முடிந்தது.

ஆனாலும், மக்கள் கண்ணால் கண்டும் அவரது கண்டுபிடிப்பை ஏற்றுக் கொள்ள மறுத்தனர். ஆனாலும், சோதனை செய்து முடிவுகளை ஏற்கவேண்டும் என்ற கொள்கை வளர இது அடிகோலியது. இதுபோல் சாய்வுகளிலும் பந்துகளை உருளவிட்டு பரிசோதித்து பார்த்தார். தனது முடிவுகளை ஒன் மோஷன் (On Motion) என்ற புத்தகமாக எழுதி வெளியிட்டார்.

அந்நாளில் லெக்ஹாரன் என்னும் துறைமுகத்தில் மணல் மிகுதியாக நிறைந்திருந்தது. கப்பல் தங்குவதற்கு அது இடையூறாக இருந்தது. அறிஞர் ஒருவர் மணல் அள்ளும் கருவி ஒன்றை கண்டுபிடித்தார். கலிலியோ அது பயன்படாது என்று கூறிவிட்டார். அது உண்மையிலேயே பயன்படாது போய்விட்டது. அந்த அறிஞரும் மக்களும் கலிலியோ மீது வெறுப்பு கொண்டவர்களாக இருந்தனர்.

### தொலைநோக்கி கண்டுபிடிப்பு

கலிலியோ 1592 இல் பதுவா பல்கலைக்கழகத்தில் கணிதப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். அங்கு பணிபுரிந்தபோது அருகிலுள்ள அர்செனல் (Arsenal) துறைமுகத்திற்கு பொழுது போக்காக செல்வார். அங்கு வந்திருந்த வெனிஸ் கப்பல் சரக்குகளை ஏற்றிக் கொண்டிருந்தது. கலிலியோ கப்பல் இயந்திரங்களின் செயல்பாடுகள் மீது மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். 1593 - ல் ஒரு கப்பலின் துடுப்பு வலிக்கின்ற சுக்கானின் நெம்புகோலின் இயங்கா நிலைபுள்ளி (Fulcrum) பழுதடைந்தது. கலிலியோ ஒரு நீரேற்றியை (Pump) உருவாக்கி அந்தப் பிரச்சனைக்கு தீர்வுகண்டார். ஒரு குதிரை சக்திகொண்ட அந்த நீரேற்றியின் உரிமத்தையும் பெற்றுக் கொண்டார். இவையல்லாமல் பல இயந்திரக் கண்டுபிடிப்புகளை கலிலியோ கண்டுபிடித்தார். ஆனாலும், அவரது கண்டுபிடிப்பில் தலையானது அவர் தொலைநோக்கி கருவியை (Telescope) கண்டுபிடித்தது தான்.

(வாழ்க்கை வளரும்)




# சிறுவர் சுடர்

### அம்மா...!

நீ பார்க்கும்போது சொல்ல நினைக்கின்றேன்
நீ பேசும்போது சொல்ல நினைக்கின்றேன்
நீ முத்தம் இடும்போது சொல்ல நினைக்கின்றேன்
ஆனால் சொல்ல முடியவில்லை கடவுளே
எனக்கு சீக்கிரம் பேசும் சக்தியை கொடு
அவளை 'அம்மா' என்றழைக்க

செல்வி ஸ்வன்தினி, தரம் -7
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி, கொழும்பு - 15

## விடுகதைகள்

1. இரு கொம்புகள் உண்டு மாடு அல்ல, வேகமாய் ஓடும் மான் அல்ல, கால்கள் உண்டு மனிதனல்ல. - அது என்ன?
2. இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது- அது என்ன?
3. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம்- அது என்ன?
4. ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் ஆரவாரம் இராது- அவர்கள் யார்?
5. உடல் சிவப்பு, வாய் அகலம், உணவு காகிதம்- நான் யார்?

**விடைகள்:** 1. சைக்கிள், 2. பட்டாசு, 3. தராசு, 4. எறும்புக் கூட்டம், 5. அஞ்சல் பெட்டி.

சிறுவர் சிறுமியர்களே..!

## வர்ணம் தீட்டுக

உங்கள் கைவண்ணத்தைக் காட்டி படத்தை மெருகூட்டுங்கள்.



## கொழும்பு கிங்ஸரன் கல்லூரி மாணவர்களின் சித்திரங்கள்



செல்வி தர்ச்னி, தரம் – 5



செல்வி அக்ஷா, தரம் – 4



செல்வி ஐஸ்வர்யா, தரம் – 8



செல்வி மனீஷா, தரம் – 5

## புண்ணிய தானம்

ஒரு மிராசுதாருக்கு, சுப்பன் என்ற மகாமோசமான மகன் இருந்தான். தந்தை சேர்த்து வைத்த சொத்தை அழித்து விட்டான். தாயை மதிக்க மாட்டான். மனைவி, பிள்ளைகள் அவனிடம் அனுபவிக்காத துன்பமே இல்லை. ஒரு கட்டத்தில் அவன் இறந்து போனான். பாவம் மட்டுமே அவனது மூலதனம் என்பதால், நரகத்தில் அவன் வறுத்து எடுக்கப்பட்டான்.

ஐயையோ! இங்கே இப்படி நடக்குமென தெரிந்திருந்தால், பூலோகத்தில் வாழ்ந்த போது, என் குடும்பத்தாரை நிம்மதியாக வாழ வைத்திருப்பேனே! என புலம்பினான். நரகத்தில் தண்டனை முடிந்து அவன் ஒரு கழுதையாகப் பிறந்தான். அதன் மீது அதன் உரிமையாளன் அளவுக்கு மீறி பொதி ஏற்றி சுமக்க வைத்தார். ஒருமுறை கழுதை மயங்கி விழுந்து விட்டது. அதைப் பார்த்து பாவப்பட்ட உரிமையாளரின் மகன், இறைவா! பாவம் இந்தக் கழுதை! இது எங்களுக்காக கஷ்டப்பட்டு உழைத்திருக்கிறது. நான் செய்த புண்ணியத்தின் பலனை கழுதைக்கு வழங்குகிறேன். இதை எழுப்பு, என்றான். கழுதையும் எழுந்துவிட்டது. சில காலம் கழித்து இறந்துவிட்டது. கழுதையாக இருந்த போது பெற்ற புண்ணியத்தால், சுப்பன் பக்தியுள்ள பணக்கார குடும்பத்தில் பிறந்தான்.



அவனுக்கு முற்பிறவி எண்ணங்கள் நினைவுக்கு வந்தன. தான் கழுதையாக வாழ்ந்த வீட்டுக்குப் போய், உங்கள் வீட்டில் சில ஆண்டுகளுக்கு முன் இறந்து போன கழுதைக்கு என்னென்ன புண்ணியங்களை கொடுத்தீர்கள்? என உரிமையாளனின் மகனிடம் கேட்டான்.

நான் அடிக்கடி கிருஷ்ணா கிருஷ்ணா என்பேன். அப்படி சொன்னால் புண்ணியம் என எங்கள் ஊர் கோயிலில் பேசிய உபன்யாசகர் சொன்னார். அந்தப் புண்ணியம் கழுதைக்கு சேரட்டுமே என்றேன், என்றான் அவன். அதன்பிறகு சுப்பனும் கிருஷ்ணா கிருஷ்ணா என்று காலமெல்லாம் சொல்லி, பிறப்பற்ற நிலையான முக்தி நிலை அடைந்தான். உங்களுக்கு எந்தக் கடவுளைப் பிடிக்குமோ, அந்தக் கடவுளின் பெயரை அடிக்கடி உச்சரித்தாலே போதும்! சொர்க்கம் கிட்டிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# சீனாவில் பாதுகாப்புப் பயிற்சி.....!

சீனாவில் தனியார் பாதுகாப்புப் பணிக்கு (பொடி கார்ட்) பிகினி உடையில் இளம்பெண்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பி உள்ளது.

சீனாவின் ஹைனான் மாகாணத்தில், டியான்ஜியாவோ ஸ்பெஷல் சேப்டி கன்சல்டன்ட்ஸ் லிமிடெட் என்ற நிறுவனம் செயல்படுகிறது. இந்நிறுவனம், தனியார் நிறுவனங்கள், வி.ஐ.பி.க்களுக்கு பாதுகாவலர்களாக பணிபுரிய ஆள்களை தேர்வு செய்து அனுப்புகிறது. இதற்காக 20 இளம்பெண்களுக்கு இப்போது பயிற்சி அளித்து வருகிறது.

அவர்களில் பெரும்பாலானோர் கல்லூரி பட்டதாரி மாணவிகள். மொத்தம் 10 மாத பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன் ஒரு கட்டமாக சமீபத்தில் பிரபல சன்யா கடற்கரையில், பிகினி உடை அணிந்து வந்த இளம்பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

சரியாக பயிற்சி செய்யாத பெண்களை ஆண் பயிற்சியாளர்கள காலால் உதைப்பது, கனமாக மரத்தை தூக்கி செல்வது போன்ற புகைப்படங்கள் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. இதற்கு சீனாவில் பலர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். மேலும், டுவிட்டரிலும் ஆயிரக்கணக்கானோர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு பயிற்சி என்றால், எதற்காக பிகினி உடையில் பயிற்சி அளிக்க வேண்டும். இது வியாபாரத்தனமாக உள்ளது. மேலும், பாதுகாவலர்களாக நியமிக்கப்படும் பெண்கள், விபசாரத்துக்கு ஆளாகும் அபாயமும் உள்ளது. பணக்காரர்களுக்கும், பிரபலங்களுக்கும் பணிபுரியும் போது பாலியல் பலாத்காரத்துக்கு ஆளாகும் வாய்ப்பு உள்ளது.

இதனால் சீன கலாசாரம் கேள்விக் குறியாகி விடும் என்று டுவிட்டரில் பலர் விமர்சனம் செய்துள்ளனர். இதற்கிடையில் பயிற்சியில் தேர்வான இளம்பெண்கள் சிலரை, அடுத்தகட்ட பயிற்சிக்காக இஸ்ரேல் பாதுகாவலர் பயிற்சி அகடமிக்கு அனுப்பி வைக்க போவதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. இதனால் எதிர்ப்பு அதிகரித்து வருகிறது.








# 20 வயதை எட்டியவர்களுக்கு விழா

ஜப்பானில் ஆண்டுதோறும் 20 வயது எட்டியவர்களை வாழ்த்தும் வகையில் 'வயசுக்கு வந்த டே' கொண்டாடப்படுகிறது. இது கி.பி. 714இல் இருந்து நடைபெற்று இருக்கிறதாம்.

நாடு முழுவதும் அரசு பொது விடுமுறை விட்டு திருவிழா போன்று 1948 முதல் கொண்டாடி வருகிறார்கள். உங்களுக்கு பக்குவம் வந்துவிட்டது. பொறுப்புடன் நடந்துகொள்ளுங்கள் என்று அறிவுரை கூறுவது இந்த விழாவின் நோக்கம். டோக்கியோ டிஸ்னிலேண்ட் பொழுதுபோக்கு பூங்காவில் நடந்த நிகழ்ச்சியில், கலந்துகொண்ட 20 வயதை எட்டிய பெண்களைப் படத்தில் காணலாம்.



நாங்கள் இதுவரை பல விதமான மசாஜ்களைப் பார்த்திருக்கின்றோம்.. இங்கே நாம் பாம்பு மசாஜ் பற்றி பார்ப்போம்.


இஸ்ரேல் நாட்டில் உள்ள மசாஜ் செய்யும் அழகுக் கலை நிலையம் ஒன்று தங்களது வாடிக்கையாளர்களுக்கு புது விதமான சேவை ஒன்றை வழங்கியுள்ளது.

அமேசன் காடுகளில் பிடிக்கப்பட்டு பழக்கப்பட்ட பாம்புகளைக் கொண்டு மசாஜ் செய்யும் முறையே அது. பாம்புகளை மனிதனின் முதுகுப்பகுதி, தலைப்பகுதி, கழுத்துப்பகுதி, கால் போன்றவற்றில் ஊர விட்டு ஒரு விதமான புல்லரிக்கும் மசாஜ் இங்கே செய்யப்படுகின்றது.

இந்த மசாஜ் சேவைகளுக்கு வெறும் 80 டொலர்கள் தான் கட்டணமாக வசூலிக்கப்படுகின்றது. இந்த மசாஜ் செய்வதால் மன அழுத்தங்கள் வெகுவாகக் குறைக்கப்படுகின்றதாம்.

# பாம்பு மசாஜ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயின் சாகசம்...

மனிதர்களால் கூட செய்ய இயலாத கடின மான செயலை, நான்கு கால்களை உடைய நாய் ஒன்று மிகவும் இலகுவாக செய்து பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தி வருகின்றது. அதாவது லண்டனின் நோர்விச் பகுதி யில் வளரும் மூன்று வயதுடைய நாய் தனது பின் இரண்டு கால்களாலும் மிகக்குறுகிய பரப்பளவுள்ள பிரதேசங்களிலும் தன்னை சமநிலைப்படுத்தி பார்ப்பவர் எல்லோரையும் வியப்புக்குள்ளாக்கி வருகிறது.





அமெரிக்காவிலுள்ள சிறுவர் விளையாட்டு பூங்கா ஒன்றில் 8 வயதுச் சிறுமி தலைகீழாக நின்று சாகசம் புரிவதையும் அருகில் அவருடைய தாயார் தனது இரண்டாவது மகளையும் சாகசத்துக்கு தயாராக்கு வதையும் படத்தில் காணலாம்.




## பாம்பின் தலையை கடித்த ஒரு வயதுக் குழந்தை

எதிர்விளைவு பற்றி அறியாமல் நடந்து கொள்ப வர்களை இளம்கன்று பயம் அறியாது என்று குறிப்பிடு வார்கள். அது போலவே ஒரு வயது குழந்தை பாம்பை பிடித்து கடித்த சம்பவம் இஸ்ரேலின் வடக்கே ஜெரு சலேம் அருகே அரேபியர்கள் அதிகம் வசிக்கும் நகரில் நடந்துள்ளது.

மேலும் அந்த குழந்தையின் பெயர் இமாத் அலீ யன். பிறந்து 13 மாதங்களே ஆன இந்த குழந்தைக்கு 6 சிறிய பற்கள் இருக்கின்றன. இந்த குழந்தையும், தாயும் வீட்டில் இருந்தபோது ஒரு பாம்பு புகுந்தது.

குழந்தையின் அருகில் சென்று அது சுருண்டு கிடந் துள்ளது. பொதுவாக குழந்தைகள் தங்களின் கையில் பட்ட பொருள்களை எடுத்து வாயில் வைத்து கடித்து விடும். அதுபோலவே இந்த குழந்தையும் எதிர்பாராத விதமாக கையில் சிக்கிய பாம்பை பிடித்து அதன் தலைப் பகுதியை கடித்தது.

இதைக் கண்ட அருகில் இருந்த தாய் பதறிப்போய் அலறினார். இந்த அபயக்குரலைக் கேட்டு அயலவர்கள் ஓடி வந்து சுமார் 1 அடி நீளமுள்ள பாம்பை குழந்தை யின் பிடியில் இருந்து எடுத்தனர்.



## யானைகளுக்கு புத்துணர்வு முகாம்

தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டம் முது மலை புலிகள் காப்பகத்தில் உள்ள தெப்பக் காட்டில் கோயில் யானைகளுக்கான புத்து ணர்வு முகாம் கடந்த டிசெம்பர் 14ஆம் தேதி ஆரம்பித்து அண்மை யில் நிறைவடைந்தது. சுமார் 45 நாள்களாக நடைபெற்ற இந்த புத் துணர்வு முகாமில் 37 யானைகள் கலந்து கொண்டன.

இந்த புத்துணர்வு முகாம் நிறைவடைந்த தும் இதில் கலந்துகொண்ட யானைகளை அந்தந்த கோயில்களுக்கு லொறிகளில் அனுப்பும் பணி தொடங்கியது. சில யானை கள் எந்தவித எதிர்ப்பும் இன்றி லொறிகளில் தாமாக ஏறிக்கொண்டன. சில யானைகள் பிளிறியபடி ஏற அடம்பிடித்தன. இன்னும் சில காடுகளுக்குள் தப்பிஓடி பின்னர் பாகன்க ளின் உதவியுடன் லொறிகளில் ஏற்றப்பட்டன.

தென்காசி திருவிளங்குமரன் கோயில் யானை - வள்ளி, திருச்செந்தூர் ரெட்டை திருப்பதி கோயில் யானை - லட்சுமி ஆகிய இரண்டும் பாசமாக பழகி வந்தன. இவையும் லொறிகளில் ஏற மறுத்தன. 2 லொறிகளை யும் அருகருகே கொண்டுவந்து நிறுத்திய போது கண்ணீர் வடித்தவாறே இவை லொறி களில் ஏறிக்கொண்டன.

### முருகன் பாட்டுக்கு லொறியில் ஏறிய யானை

திருப்பரங்குன்றம் யானை லொறியில் ஏற மறுத்து அரை மணிநேரம் அடம்பிடித்தது. இந்நிலையில் லொறியின் சாரதி வாகனத் தில் அறுபடை வீடு கொண்ட திருமுருகா என்ற பாடலை சத்தமாக ஒலிக்க செய்தார். பாடலை கேட்டதும் யானை, உடனே லொறி யில் ஏறிக்கொண்டது. இக்காட்சி அங்கு நின்ற பலரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கியது.


புத்துணர்வு முகாமில் கலந்துகொண்ட யானைகள்


நாங்கள் பிரியமாட்டோம்....


என்னால் வரமுடியாது...

உலகிலே காணப்படும் கார் காட்சியகங்களில் பிரமாண்ட மானதும், பார்ப்பவர்களை கவர்வதுமான காட்சியகம் ஜேர்மனியிலுள்ள வூல்வ்பேர்க் நகரத்தில் காணப்படுகின்றது. இக்காட்சியகம் சுமார் 200 அடி உயரமுடையதும் இருபது தட்டுக்களை கொண்ட இரண்டு வெவ்வேறு கோபுரங்களாக அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கோபுரத்திலும் சாதா ரணமாக 400 கார்கள் வரையில் நிறுத்திவைக்கப்பட் டிருப்பதுடன் தினந்தோறும் இங்கிருந்து 600 கார்கள் வரையில் இங்கிருந்து கொள்வனவு செய்யப்படுகின்றது.






## 3 கைகளுடன் குழந்தை

திருப்பூர் அரசு மருத்துவமனையில், மூன்று கைகளுடன் பிறந்த அதிசய குழந்தை, 24 மணி நேரமும் டாக்டர்கள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். குழந்தையின் பின்புறம் முதுகு பகுதியில், சதைப் பற்றுடன் மூன்றாவது கை போல் வளர்த்திருந்தது. அதைப்பார்த்து, மருத்துவக் குழுவினர் அதிசயித்தனர். இதையடுத்து, குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவில் குழந்தையை வைத்து, சிகிச்சை அளித்து வருகின் றனர்.

இதுபற்றி அரசு மருத்துவமனை அதிகாரி கூறுகையில், மூன்று கிலோ எடையுடன் குழந்தை நல்ல ஆரோக்கியத் தூடன் உள்ளது. குழந்தையின் உடல்நிலை படிப்படியாக முன்னேறி வருகிறது; நல்ல உடல் ஆரோக்கியம் வந்ததும், பெற்றோர் அனுமதியுடன், பின்பகுதியில் வளர்ந்துள்ள கை போன்ற சதை, அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்படும் என்றார்.

## இரத்தமின்றி பிறந்த குழந்தை



இறப்பிலிருந்து மீண்ட அதிசய குழந்தை பற்றிய செய்தியே இது. Oliver Morgan என்ற இந்தக் குழந்தை பிறக்கும்போது அதன் உடலில் இரத்தம் எதுவும் இல்லை என்று மருத்துவ அறிக்கைகள் தெரிவித்தன. குழந்தை பிறக்கும்போது வெளிறிய நிறத்தில்தான் இருந்தது.

குழந்தை பிறந்தபோது முதல் 25 நிமிடங்களுக்குள் இருதயத் துடிப்பைக் கண்டறிய முடியவில்லை என்று மருத்துவர்கள் ஆச்சரியத்துடன் தெரிவித்துள்ளனர்.

உடனடியாக குழந்தைக்கு மென்மையான இருதய மசாஜ் உடன் ஒட்சிசன் சுவாசமும் வழங்கப்பட்டு உயிரைக் காக்கும் வழிமுறையாக தொப்புள் கொடி மூலம் இரத்த மும் ஏற்றப்பட்டது. குழந்தையைப் பாதுகாக்க மருத்துவர் கள் கடினமாகப் போராடினர்.

Oliver தற்சமயம் மிகவும் மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டிருக்கிறான். இப்பொழுது இக் குழந்தைக்கு 15 மாதங்கள் ஆகின்றது. அம்மாவான Katy உம் அப்பாவான Jeff உம் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளனர்.

குழந்தை உயிருடன் தப்பித்திருப்பது பற்றி 36 வய தான தாயாரான Katy கருத்துத் தெரிவிக்கையில்,

Oliver பிறந்த கதையைச் சொல்ல இப்பொழுதும் எனக்கு அதிர்ச்சியாக உள்ளது. இரத்தமே இல்லாமல் தான் பிறந்தான்.

ஆனால் தற்போது என் முன் சிரித்துக் கொண்டு உட்கார்ந்து இருக்கிறான். மருத்துவர்களால் மீளக் கொடுக்கப்பட்ட அற்புத பரிசாகவே நான் அவனைப் பார்க்கிறேன். அவன் என்னைத் திரும்பிப் பார்க்கையில் நம்புவதற்கு கடினமாக உள்ளது என்றார்.



இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் [illegible] ஸ்தாபனத்தினால் 2012, பெப்ரவரி 05 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org